# தமிழரசு

16-5-1987 ரூ. 1





வேலூரைச் சேர்ந்த ஏழாம் வகுப்பு மாணவன் செல்வன் ஹேமந்த ஷமீம், ஆப்பிரிக்காவில் குழந்தைகள் உண்ண உணவின்றி வாடும் துயரச் செய்தியறிந்து முதல் நன்கொடையாளராகத் தன் சொந்த நன்கொடையோடு, நண்பர்களிடம் நிதி வசூலித்து ரூ. 150ஐ இந்தியப் பிரதமருக்கு அனுப்பினான். 1.5.87 அன்று மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு இராஜீவ் காந்தி அவர்கள் சேலத்திற்கு வருகை புரிந்தபோது, அம் மாணவனைப் பாராட்டினார்.



தமிழ்காடு அரசின் சார்பில் 5.5.87 அன்று சைதாப்பேட்டை நரிக் குறவர் மாணவர் விடுதியில் நடைபெற்ற பாவேந்தர் பாரதிதாசன் 97-வது பிறந்தநாள் விழாவில் கலந்து கொண்ட மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் திரு க. இராசாராம் அவர்கள், ஆதிதிராவிடர்களுக்கு இலவசத் தொழிற் கருவிகளை வழங்கினார்.



# உழைப்போரே உயர்ந்தோர்




நான் வணங்கும் தெய்வங்களாகிய
தாய்மார்களே!
என்னை வழி நடத்திச் செல்லும்
பெரியோர்களே!
என் ரத்தத்தின் ரத்தமான உடன்பிறப்
புக்களே!

உழைப்பாளரின் உலகத் திருநாளான மே தினத்தையொட்டி, உங்கள் அனைவருக்கும் என் வணக்கங்களையும் நல் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். நூற்றியொரு ஆண்டுகளுக்கு முன் சிக்காக்கோ நகரில் எட்டு மணி நேர வேலை கோரி கிளர்ச்சி செய்து ரத்தம் சிந்திய தியாகிகளின் நினைவாக, மே முதல் தேதி உலகெங்கும் உழைப்பாளர் திரு நாளாகக் கொண்டாடப்படுகிறது.

உழைப்பாளிகளின் அறிவாலும் ஆற்ற லாலும் இவ்வுலகம் வாழ்ந்து வருவதால், 'உழைப்பவர்க்கே இவ்வுலகம் உரிமையானது. எனவே இந்த உலகத்தை சமத்துவ சமதர்மப் பாதையில் செலுத்தும் பொறுப்பை உழைப் பாளி மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஏற்க வேண்டும்' என்பதை மே முதல் நாளன்று உழைக்கும் வர்க்கத்துக்கு நினை வூட்டுவதை நான் கடமையாகக் கொண்டி ருக்கிறேன்.

''உண்மையான பொது உடமை அமைப் பில் கருத்து உழைப்பிற்கும், உடல் உழைப் புக்கும் இடையிலான எதிர் நிலை மறைந் விடும். உற்பத்தி சக்திகள் அதிகரித்து பொது சமுதாயச் செல்வம் பெருக்கெடுத்து ஓடும். அந்த சமுதாயத்தில் ''ஒவ்வொருவரிடமிருந் தும் அவர் ஆற்றலுக்கேற்ற உழைப்பு; ஒவ் வொருவருக்கும் அவருடைய தேவைக்கு ஏற்ப ஊதியம் எனும் நிலை தோன்றும்'' என்று பொது உடமைத் தத்துவத் தந்தை கார்ல் மார்க்ஸ் கூறியதை நான் உழைக்கும் வர்க்கத்துக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.





தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2018
பிரபவ-வைகாசி 2

மலர் : 17 இதழ் : 22

16-5-1987

உற்பத்தி கேந்திரங்களில் ஒழுங்கு முறையுடன் கடமையாற்றி, சமுதாய மேன்மைக்காக உற்பத்தியைப் பெருக்குவதன் வாயிலாகத்தான், உழைப்பாளி மக்களின் முக்கியத்தன்மை அதிகரிக்கும் என்பதை நாம் ஒரு நாளும் மறக்கக்கூடாது.

'தொழிலாளர்களே ஒன்றுகூடி தொழிலை ஆரம்பிக்கவும் தொழிலை நடத்தவும் தொழிலில் பங்குதாரர்களாகவும் தங்களைத் தாங்களே உயர்த்திக் கொள்ள வேண்டும்' என்று நான் 1978-ல் கூறியதை மீண்டும் உழைக்கும் வர்க்கத்துக்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம்

தொழிற் சங்கத்துக்கு தொழிலாளரே தலைவர்களாக பொறுப்பேற்றல்

எந்தப் பிரச்னை எழுந்தாலும் பேச்சு வார்த்தை வாயிலாகத் தீர்வு காணுதல்

உற்பத்திக்கு பாதகம் ஏற்படுத்தும் எந்த நடவடிக்கைகளிலும் ஈடுபடாமல் விலகுதல்

ஆலைகளிலும் பணியிடங்களிலும் முழு முனைப்போடு உழைப்புக் கடமையை ஆற்றுதல்.

பெருகும் உற்பத்தியால் விளையும் செல்வம், ஏழைகளுக்கும் தொழில் வளர்ச்சிக்கும் வேலைவாய்ப்பை உருவாக்கவும் பயன்படும் வகையில் கண்காணிப்பு செலுத்துதல்.

அமைப்பு ரீதியில் ஒன்று சேர இயலாத உழைப்பாளிகள் நலனுக்குப் பாடுபடுதல்.

தொழிலாளர்களே ஆலைகளின் நிர்வாகத்தை ஏற்கும் அளவுக்கு பயிற்சிபெறுதல்; போன்ற குறிக்கோள்களை முன்னிறுத்தி, உழைக்கும் வர்க்கம் தனது புதிய எழுச்சிப் பயணத்தைத் தொடங்க வேண்டும் என்பதே இந்த மே நாள் அன்று நான் விடுக்கின்ற அன்பு வேண்டுகோள் ஆகும்.

''உழைப்பாளிகளே! ஒன்று சேர்வீர்!''
உங்களைப் பிளவுபடுத்தும் தீயசக்திகளைப் புறக்கணிப்பீர்''

''உழைப்போரே உயர்ந்தோர், உழைப்போர்க்கே
உலகம் உரிமையானது' எனும்
தத்துவத்தை நிலைநாட்டுவீர்''

''வறுமையும் அறியாமையும் சமூகக் கொடுமைகளும் இல்லாத சமத்துவ சமதர்ம சமுதாய அமைப்புப் பணிக்கு தலைமை தாங்குவீர்.''

என்று உழைப்பாளி மக்கள் அனைவருக்கும் அன்பழைப்பு விடுத்து மே திருநாளையொட்டி என் நல்வாழ்த்துக்களை உரிமையாக்குகிறேன்.

அண்ணா நாமம் வாழ்க!



(எம். ஜி. இராமச்சந்திரன்)

# நில உடைமை மேம்பாட்டுத் திட்டம்

அரசின் பல வளர்ச்சித் திட்டங்களால் கிராம அளவில் பணிகள் கூடியுள்ள சூழ்நிலை ஏற்பட்டுள்ளதால் கிராம ஆவணங்களை இன்றைய நிலையில் உள்ளவாறு கணிப்பதற்கும் இணைப் பட்டாக்களைத் தனிப்பட்டாவாக வழங்கவும் 1-6-79 முதல் நில உடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டம் துவங்கப்பட்டது. இத்திட்டம் 1-3-83 முதல் மிக விரைவுத் திட்டமாக மாற்றிச்செயல்படுத்தப்பட்டு வருகிறது. இப்பணி ஏற்கெனவே 100 வட்டங்களில் முடிவு பெற்று, தற்போது 49 வட்டங்களில் இரண்டாம் கட்டமாகச் செயல்படுத்தப்படுகிறது.

நில உடைமை மேம்பாட்டுத் திட்டத்தால் தயாரிக்கப்படும் புதிய ஆவணங்கள் துல்லியமாகப் பராமரிக்கப்படுவது மிகவும் அவசியமானதாகும். இதனைக் கருத்தில் கொண்டு அரசு மீண்டும் பராமரிப்புப்பணித் திட்டத்தை 1-5-87 முதல் இரண்டு கட்டங்களாக அமல்படுத்தி வருகிறது. 1-5-87 முதல் நில உடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்ட முதல் கட்டப்பணிகள் நிறைவு பெற்ற 100 வட்டங்களிலும் எஞ்சியுள்ள வட்டங்களிலும் இரண்டாம் கட்டப்பணி அவ்வப்போது அமல் படுத்தப்படும்.

இப்பணியாளர்களைக் கோட்ட அளவில் இதுநாள் வரையில் இருந்ததுபோல் அல்லாமல் வட்ட அளவில் அரசு அனுமதித்துள்ளது. இப்பணிகளுக்கு வட்ட அளவில் துணை ஆய்வாளர் ஒருவரும், நிலப்பதிவேடுகள் வரைவாளர் ஒருவரும் புல உதவியாளர் ஒருவரும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இப்பணியாளர்களைத் தவிர ஒவ்வொரு பிர்க்காவிற்கும் ஒருபுல அளவர் பதவியை அனுமதித்து அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதனால் 1604 நபர்கள் பயனடைவர். திட்ட அறிமுகத்தால் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்குச் சுமார் ரூ. 14 இலட்சம் கூடுதல் செலவாகும்.

ஏற்கெனவே இத்திட்டத்தில் பணியாற்றி வந்த முதுநிலை வரைவாளர் போன்ற பணியாளர்களை நிலஉடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டத்தில் ஈர்த்துக் கொள்ளவும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

# மாவட்டங்களில் வறட்சி நிவாரணப் பணிகள்



## இராமநாதபுரம் மாவட்டம்

கடல் சூழ்ந்த இராமநாதபுர மாவட்டத்தில குடி தண்ணீாப் பஞ்சம் வழக்கம் போல் இந்த ஆண்டும் மக்களைத் துயரததுல் ஆழ்த்தியது என்றாலும், பல்வேறு தீவிரப் பணிகளால் மக்கள் குறைவின்றி குடிதண்ணீர் பெற்று வருகின்றனர். தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மொத்தம் 54 ஆழ்குழாய்க் கிணறுகள் நிறுவியுள்ளது. இன்னும் 220 கிணறுகள் நிறுவப்படவுள்ளன.

ஊராட்சி ஒன்றியங்களில் 20 திறந்த வெளிக் கிணறுகள் நிறுவ, பணிகள் துவங்கப்பட்டுள்ளன. அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் ரூ 1.75 இலட்சம் செலவில் 52 உறைக் கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன. இன்னும் 36 கிணறுகள் தோண்டப்படவுள்ளன. கிணறுகள் தோண்டப்பட்டதும் மக்கள் குடிநீர் பெறுவதற்கு முன், அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் நகராட்சிகளிலும் டிராக்டர் வண்டி மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது. ரூ. 1.29 இலட்சம் செலவில் குடிநீர் வழங்கப்பட்டுள்ளது. ஏற்கனவே உள்ள கிணறுகள் ரூ. 1.25 இலட்சம் செலவில் ஆழப்படுத்தப்பட்டுள்ளன.

வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டத்தின் கீழ் ரூ 10 இலட்சம் செலவில் 200 ஊருணிகள ஆழப்படுத்தத் திட்டமிடப்பட்டு, இதுகாறும் ரூ 4.10 இலட்சம் செலவில் 76 ஊருணிகள் ஆழப்படுத்தப்பட்டுள்ளன. பொதுப்பணித் துறையின் மூலம் நீர்ப்பாசனப் பணிகள் 45 மேற்கொள்ளப்படவுள்ளன. இப்பணிகளுக்காக இதுவரை ரூ 6 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் மாவட்ட வளர்ச்சி முகமையின் சார்பில் ஊருணிகள் மற்றும் சில நீர்ப்பாசன முன்னேற்றப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 558 பணிகளில் இதுவரை 165 பணிகள்ரூ. 1·42 இலட்சம் செலவில் துவங்கப்பட்டுள்ளன. 0.142 இலட்சம் மனித உழைப்பு நாட்கள் பெறப்பட்டுள்ளன.

## காமராஜர் மாவட்டம்

காமராஜர் மாவட்டத்தில் கடந்த இரண்டு ஆண்டுக்காலமாக பருவ மழை பெய்யாத காரணத்





தினால் கடும் குடிநீர் வறட்சி நிலை உருவாகி உள்ளது. குடிநீர் விநியோகத்தை முறைப்படுத்த வேண்டி நடப்பு நிதிஆண்டில்135 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. அதற்கான திட்ட மதிப்பீட்டுச் செலவு ரூ 36.25 இலட்சம். 125 இடங்களில் கிணறுகள் ஆழப்படுததும் பணிகள் ரூ. 8.3 இலட்சம் செலவில் துவங்கப்பெற்று தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இவை தவிர 21 இடங்களில் புதிய கிணறுகள் ரூ.10.7 இலட்சம் செலவில் தோண்டப்பட்டு வருகின்றன. தேவையான இடங்களில் லாரிகள் மூலம் குடிநீர் வழங்கும் பணி துவங்கப்பட்டு, அதற்கென ரூ. 10.82 இலட்சம் ஒதுக்கப்பட்டு, அனைத்து மக்களுக்கும் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

இந்த ஆண்டு வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாய மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் பொருட்டு ரூ. 70.67 இலட்சம் மதிப்பீட்டில் 316 இடங்களில் வறட்சி நிவாரணப்பணிகள் துவங்கப்பட்டு வேலைகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. இம் மாவட்டத்தில் நெடுஞ்சாலைத்துறை, பொதுப்பணித்துறை வேளாண்மைப் பொதுப்பணித் துறை, ஊராட்சி ஒன்றியங்கள் போன்ற பல்வேறு துறைகள் சார்பில் ஒட்டுமொத்தமாக வறட்சி நிவாரணப் பணிகளுக்கென ரூ. 689.40 இலட்சம் திட்ட மதிப்பீடுகள் அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன. இதனால் 44.070 இலட்சம் மனித சக்தி வேலை நாட்கள் நடைபெறுவதற்கு என முன்மொழிவுகள் அரசின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டுள்ளன. தற்சமயம் ரூ 72.80 லட்சம் மதிப்பீட்டில் வேலைகள் துவங்கப்பட்டு அனைத்துத் துறையாலும் வேலை வாய்ப்பு அனுமதிக்கப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன. இதனால் 7.285 இலட்சம் மனித சக்தி வேலை நாட்கள் உருவாவதற்கான வாய்ப்புகள் உள்ளன.

## செங்கல்பட்டு மாவட்டம்

செங்கல்பட்டு மாவட்டத்தில் தென்மேற்குப் பருவமழையும், வடகிழக்குப் பருவ மழையும் பொய்த்ததால் கடுமையான வறட்சி ஏற்பட்டுள்ளது. வடகிழக்குப் பருவமழை வழக்கமான அளவைவிட 46.5 சதவீதம் குறைவாகப் பெய்துள்ளது. இதனால் சம்பா, மற்றும் நவரைப் பட்டங்களில் வேளாண்மை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் உள்ள 13 வட்டங்களில் 12 வட்டங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளதாக அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி 12 வட்டங்களில், செங்கல்பட்டு, மதுராந்தகம், செய்யூர், மற்றும் காஞ்சிபுரம் ஆகிய நான்கு வட்டங்கள் மிகக் கடுமையாக பாதிக்கப்பட்ட வட்டங்களாகவும், பள்ளிப்பட்டு, கும்மிடிப்பூண்டி, ஊத்துக்கோட்டை, பொன்னேரி, திருவள்ளூர், திருபெரும்புதூர், உத்திரமேரூர் மற்றும் திருத்தணி ஆகிய எட்டு வட்டங்கள் சாதாரணமாக பாதிக்கப்பட்ட வட்டங்களாகவும் அறிவிக்கப்பட்டுள்ளன.

பொதுவாக இம்மாவட்டத்தில் ஆண்டு ஒன்றுக்கு 3.20 இலட்சம் எக்டேர் பரப்புள்ள நிலங்கள் வேளாண்மைக்காகப் பயன்படுத்தப்படும். ஆனால் இவ்வாண்டு சம்பா மற்றும் நவரைப் பட்டங்களில் 2.11 இலட்சம் எக்டேர் பரப்புள்ள நிலங்களில் மட்டுமே வேளாண்மை செய்யப்பட்டது. வடகிழக்குப் பருவமழை பொய்த்ததால் 1.09 இலட்சம் எக்டேர் பரப்புள்ள நிலங்கள் வேளாண்மைக்காகப் பயன்படுத்தப்படவில்லை. இதனால் 2.96 இலட்சம் டன் அரிசி உற்பத்தியில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

மேலும் குடிநீரைப் பொறுத்தமட்டில், இம்மாவட்டத்திலுள்ள 4663 குடியிருப்புகளில். 2443 குடியிருப்புகள் பாதிக்கப்பட்டுள்ளன. இதில் கிராமப்புற மக்கள் தொகையில் பாதிக்கப்பட்டுள்ளோர் 51.7 சதவீதமும் நகர்ப்புற மக்கள் தொகையில் பாதிக்கப்பட்டுள்ளோர் 59.7 சதவீதமும் ஆவர்.

வறட்சி நிவாரணப் பணிகளை மேற்கொள்ள இம்மாவட்டத்திற்கு மொத்தமாக ரூ. 2070.07 இலட்சம் கீழ்க்குறிப்பிட்டுள்ள இனங்களின் கீழ் தேவைப்படுகிறது.

இம்மாவட்டத்தில் 821 ஆழ்துளைக் கிணறுகள் புதிதாக அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவற்றில் 700 ஆழ்துளைக் கிணறு வேலைகளைத் துவங்க ஆணையிடப்பட்டுள்ளது. ஒரு ஆழ்துளைக் கிணற்றின் மதிப்பீடு ரூ. 0.20 இலட்சமாகும். இப்பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதுவரை 135 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.



மேலும் நிவாரணத் தொகையாக ரூ. 56.72 இலட்சம் கீழ்க்கண்ட விவரப்படி இம்மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

லாரிகள் மூலம் குடிநீர் வழங்க ரூ. 5.52 இலட்சமும் கிணறுகள் கட்ட ரூ.12.70 இலட்சமும் கூட்டுக் குடிநீர் மேம்பாடு செய்ய ரூ. 7.50 இலட்சமும், குளங்கள், ஊருணிகள், மற்றும் ஏரிகள் தூர்வாரிச் செப்பனிட ரூ.20 இலட்சமும் பொதுப்பணித் துறைப்பணிகளுக்கு ரூ. 8இலட்சமும்வேளாண்மைப்பொறியியல் துறைப் பணிகளுக்கு ரூ. 3 இலட்சமும் ஆக மொத்தம் ரூ. 56.72 இலட்சம் நிவாரணத் தொகையாக இம்மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் வறட்சி நிவாரணப்பணிகள் போர்க்கால அடிப்படையில் செவ்வனே செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

## வறட்சி நிவாரணம்: மத்திய அரசின் குழு பாராட்டு

தமிழ்நாட்டில் வறட்சி நிலவுவதைத் தொடர்ந்து கடந்த 1981ஆம் ஆண்டு முதல் இதுவரை 76 ஆயிரம் குழாய்க் கிணறுகள் போடப்பட்டுள்ளன. மேலும் 6680 குழாய்க் கிணறுகள் தோண்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.1987 ஆம் ஆண்டில்இதுவரைவறட்சி நிவாரணத்திற்காக ரூ. 45 கோடி செலவிடப்பட்டுள்ளது.

ஜுன் திங்களுக்குள் வறட்சி நிவாரணப் பணிகளுக்காக ரூ. 100 கோடி செலவிடப்பட உள்ளது. இதுவரை தமிழக அரசு மேற்கொண்டுள்ள வறட்சி நிவாரண நடவடிக்கைகளை மத்திய அரசின் குழு பாராட்டியுள்ளது.

(கோவையை அடுத்த மதுக்கரை ஊராட்சி ஒன்றியம் குட்டி கவுண்டன் பகுதியில் நடைபெற்ற விழாவில் மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து)

## மதுரை மாவட்டம்

மதுரை மாவட்டத்தில் வறட்சி நிவாரணப்பணிகள் துரித வேகத்தில் நடைபெற்று வருகின்றன.

510 புதிய அடிகுழாய்கள் ரூ. 128.90 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன. ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் 554 குடிநீர்க்கிணறுகளை ரூ. 39.37இலட்சம் செலவில் ஆழப்படுததும் பணிகள் முடிக்கபபட்டுள்ளன. பேரூராட்சிப் பகுதிகளில் 19 குடிநீர்க் கிணறுகளை ரூ. 2.90 இலட்சம் செலவில் ஆழப்படுத்தும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

கம்பம்/திருமங்கலம் நகராட்சிப் பகுதிகளில் ரூ. 1.00 இலட்சம் செலவில் லாரிகள் மூலமாக 1294 தடவைகள் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. 3 நகர பேரூராட்சிப் பகுதிகளில் 3 புதிய கிணறு வெட்ட ரூ.2.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. குடிநீர் விநியோகம் செய்ய மேலூர் நகராட்சிக்கு தனி மின் பாதை அமைக்க ரூ. 5.75 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

நகராட்சிப் பகுதிகளில் குடிநீர் திட்டம் அபிவிருத்திப் பணிகளுக்காக கம்பம், திருமங்கலம் நகராட்சிகளுக்கு ரூ. 4 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மான்யமும் கடனும் என்ற தலைப்பில் 3 நகராட்சிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்வதற்கு ரூ. 11.50 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

பழுதடைந்த அடிகுழாய்களுக்குப் பதிலாக 120 புதிய அடி குழாய்கள் ரூ. 30 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன.

தேனி அல்லிநகரம் நகராட்சிக்குக் குடிநீர்த்திட்டம் அபிவிருத்திப் பணிகளுக்காக ரூ.2.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வேலைகள் முன்னேற்றத்தில் உள்ளன. கம்பம் நகராட்சிக்கு லாரிகள் மூலமாக குடிநீர் விநி



யோகம் செய்ய ரூ. 43,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இப்பணி மேற்கொள்ளப்பட்டிருகின்றது. தேனி அல்லி நகரம், போடி, மேலூர் ஆகிய நகராட்சிகளுக்கு குடிநீர்க் கிணறு ஆழப்படுத்தும் பணிக்கு ரூ. 11.90 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

14 பேரூராட்சிப் பகுதிகளுக்கு கூட்டுக் குடிநீர்த்திட்டம் அபிவிருத்திப் பணிகளுக்காக ரூ. 50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் ஊரணிகள் மற்றும் சிறுபாசனக் கண்மாய் மராமத்துப் பணிகளுக்கு ரூ. 35 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

685 வேலைகள் எடுத்ததில் 19 வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 666 வேலைகள் முன்னேற்றத்தில் உள்ளன.

இம்மாவட்டத்தின் ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள 3604 கைப்பம்புகளும் நகராட்சிகளிலுள்ள 380 கைப்பம்புகளும் பேரூராட்சிகளிலுள்ள 869 கைப்பம்புகளும் ஆக மொத்தம் 4853 கைப்பம்புகளும் பராமரிப்பில் இருந்து வருகின்றன. இவற்றில் 14 கைப்பம்புகள் பழுதுபார்க்க வேண்டிய நிலையிலுள்ளன. மழையின்மை காரணமாக 69 கைப்பம்புகள் தற்காலிகமாக தண்ணீர் வற்றிப் போய்விட்டதால் பயன்படுத்த முடியவில்லை. பழுதுபார்க்க வேண்டிய பம்புகளை சரிசெய்வதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மதுரை மாவட்டத்தின் ஊராட்சி ஒன்றியங்களில் 110 பவர் பம்புகளும் நகராட்சிகளில் 58 பவர் பம்புகளும் பேரூராட்சிகளில் 154 பவர் பம்புகளும் ஆகமொத்தம் 1312 பவர் பம்புகள் பராமரிப்பில் இருந்து வருகின்றன. இவற்றில் 11 பவர் பம்புகள் பழுதுபார்க்க வேண்டிய நிலையிலுள்ளன. பழுதுபார்க்க வேண்டிய பவர் பம்புகளைச் சரி செய்வதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## தருமபுரி மாவட்டம்

தருமபுரி மாவட்டத்தில் போர்க்கால நடவடிக்கை போல் வறட்சி நிவாரணப்பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தருமபுரி வட்டத்தில் 40 ஆழ்துளைக் கிணறுகள் ஒசூர் வட்டத்தில் 10 ஆழ்துளைக் கிணறுகள் ஆக மொத்தம் 50 ஆழ்துளைக் கிணறுகள் தோண்டப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

வேலைக்கு உணவளிக்கும் திட்டத்தின் கீழ் பொதுப்பணித் துறையின் மூலம் 13 பணிகளுக்கு ரூ.2 இலட்சமும், வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் 2 பணிகளுக்கு ரூ. 2 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கிராம வளர்ச்சித்திட்டத்தில் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களின் மூலம் 111 பணிகளுக்கு அரசு உத்தரவிட்டு ரூ. 8 இலட்சத்திற்கு அனுமதி அளித்துள்ளது. அதில் ரூ.2.88 இலட்சத்துக்கான 9 வேலைகள் முடிக்கப்பட்டு மீதம் ரூ.5.14 இலட்சத்திற்கான 102 வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இதில் பொதுப்பணித்துறையின் மூலம் செய்ய வேண்டிய பணியைத் தவிர மற்ற பணிகள் துவக்கப்பட்டு அனைத்து கிராமப்புற வேலையாட்களுக்கும் வேலை தரப்பட்டு வருகின்றது. 0.392 இலட்சம் மனித சக்தி கொண்ட 126 வேலைகளில் ரூ. 3.18 இலட்சம் செலவில் 9 வேலைகள் முடிக்கப்பட்டு ரூ. 8.82 இலட்சம் செலவில் 117 வேலைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

பொதுப்பணித்துறையின்மூலம் பெண்ணாகரம் ஒன்றியத்தில் ரூ.1.25 இலட்சத்தில் 6 பணிகளும் ஊத்தங்கரை ஒன்றியத்தில் ரூ.0.50 இலட்சத்தில் 2 பணிகளும், பாலக்கோடு ஒன்றியத்தில் ரூ. 1 இலட்சம் செலவில் 5 பணிகளும் நடைபெற்று வருகின்றன.

ஊரக வளர்ச்சித் துறையின் வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் பெண்ணாகரம் ஒன்றியத்தில் 10 வேலைகள் ரூ. 0.95 இலட்சம் செலவில் எடுக்கப்பட்டு ரூ. 0.35 இலட்சம் செலவில் ஒரு வேலை முடிக்கப்பட்டு ரூ. 0.60 இலட்சத்தில் 9 வேலைகள் நடைபெற்று வருகின்றன.

பாலக்கோடு ஒன்றியத்தில் 10 வேலைகள் ரூ. 0.85 இலட்சம் செலவில் துவக்கப்பட்டு ரூ. 0.40 இலட்சம் செலவில் 2 வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன. ரூ. 0.54 இலட்சம் செலவிலான 8 வேலைகள் நடைபெற்று வருகின்றன.

காரிமங்கலம் ஒன்றியத்தில் ரூ. 1 இலட்சம் செலவில் 6 வேலைகள் துவக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. ஊத்தங்கரை ஒன்றியத்தில் ரூ. 0.896 இலட்சத்தில் 12 வேலைகள் துவங்கப்பட்டு ரூ. 0.34 இலட்சம் செலவில் 2 வேலைகள் முடிக்கப்பட்டு ரூ. 0.556 இலட்சம் செலவில் 10 வேலைகள் நடைபெற்று வருகின்றன.

மத்தூர் ஒன்றியத்தில் ரூ. 1 இலட்சத்தில் 11 பணிகளும் ஒசூரில் 15 பணிகள் ரூ. 0.883 இலட்சத்திலும், சூளகிரி ஒன்றியத்தில் 19 பணிகள் ரூ. 0.871 இலட்சத்திலும் கெலமங்கலம் ஒன்றியத்தில் 11 பணிகள் ரூ.0.60 இலட்சம் செலவிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தளி ஒன்றியத்தில் ரூ. 0.90 இலட்சம் செலவில் துவக்கப்பட்ட 17 வேலைகளில் ரூ. 0.30 இலட்சம் செலவில் 4 வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன. ரூ. 0.60 இலட்சம் செலவிலான 13 வேலைகள் நடைபெற்று வருகின்றன.

தூர்வாரும் பணிக்கு கிராமப் பஞ்சாயத்துக்களில் ரூ. 2 இலட்சமும் நகரப் பஞ்சாயத்துக்களுக்கு ரூ. 0.20 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும் இரண்டாம் கட்டப் பணிகளாக தருமபுரி மாவட்டத்திற்கு 50 ஆழ் குழாய்க்கிணறுகள் தோண்டும் பணிக்கு அரசு ஆணை பிறப்பித்துள்ளது.





## புதுக்கோட்டை மாவட்டம்

சென்ற ஆண்டு பருவமழை தவறி, தென்மேற்கு பருவமழையில் 206.5 மி.மீ. வடகிழக்குப் பருவமழையில் 250.2 மி.மீ. ஆக 456.7 மி.மீ. மழைதான்பொழிந்தது. விவசாயத்தையே முக்கியத் தொழிலாகக் கொண்ட இம் மாவட்டத்தில் நெல், வரகு மற்றும் சிறுதானியங்கள் முக்கியமாகப் பயிரிடப்படுகின்றன. பருவமழையின்மையால் குடிப்பதற்கும், விவசாயத்திற்கும் நீர் தட்டுப்பாடு வெகுவாக உள்ளது. அறந்தாங்கி, ஆவுடையார் கோயில், ஆலங்குடி, கந்தர்வக் கோட்டை. குளத்தூர், திருமயம் புதுக்கோட்டை ஆகிய ஏழு வட்டங்களில் உள்ள 12,13,847 மக்கள் வசிக்கும் 764 கிராமங்களில் 9,96,371 மக்கள் வாழும் 631 கிராமங்கள் வறட்சியால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. இக்கடும் வறட்சியால் நஞ்சைப் பகுதியில் அறந்தாங்கி, ஆவுடையார்கோயில் பகுதியிலே உள்ள சில இடங்களைத் தவிர ஏனைய பகுதிகள் அனைத்திலும் வேளாண்மை பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் வழக்கமாக 1.10 இலட்சம் எக்டேரில் நெல் பயிரிடப்படுவதில் சென்ற ஆண்டு 0.97 இலட்சம் எக்டேரில்தான் நெல் பயிரிடப்பட்டது. இதில் 0.93 இலட்சம் எக்டேர் வறட்சியால் பாதிக்கப்பட்டு 2.10 இலட்சம் மெ. டன் உற்பத்தி இழப்பு ஏற்பட்டுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் நிலவும் கடும் வறட்சியைச் சமாளிக்க அரசு பல்வேறு முனைகளில் நிவாரணப் பணிகளைமேற்கொண்டு உள்ளது. முக்கியமாக குடிநீர் பற்றாக்குறையைத் தீர்க்க தமிழ்நாடு குடிநீர்வடிகால் வாரியத்தின் மூலம் 281 கைப் பம்புகள் அமைக்க அரசு அனுமதித்து உள்ளது. இதில் 75 கைப் பம்புகள் அமைக்கும் பணி முடிவுற்றது. ஏனையவை முன்னேற்றத்தில் உள்ளன. ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் 33 திறந்த வெளிக் கிணறுகள் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் ரூபாய் 6 இலட்சம் செலவில் அமைக்கப் பட்டு வருகின்றன. இம்மாவட்டத்தில் உள்ள புதுக்கோட்டை, அறந்தாங்கி நகராட்சிப் பகுதிகளில் லாரிகள் மூலம் குடிநீர் வழங்க அரசு ரூ. 1 இலட்சம் வழங்கியுள்ளது. ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் 292 ஊரணிகளை ரூ. 16.60 இலட்சம் செலவில் தூர் எடுக்கவும், 34 சிறிய நீர்ப் பாசன ஏரிகளை ரூ. 3.40 இலட்சம் செலவில் தூர் எடுக்கவும், பொதுப்பணித்துறை மூலம் 8 கண்மாய்களை ரூ. 5 இலட்சம் செலவில் தூர் வாரும் பணியை மேற்கொள்ளவும் அரசு அனுமதித்துள்ளது. மேலும் வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் 2 கசிவு நீர்க் குட்டைகள் ரூபாய் 1.50 இலட்சம் செலவில் அமைக்கும் பணியும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வறட்சி நிவாரணப் பணிகளின் கீழ் இம்மாவட்டத்தில் பல்வேறு துறைகள் மற்றும் திட்டங்களின் கீழ் 549 பணிகள் மேற்கொள்ளப் பட்டு இதில் 341 பணிகள் 10.4.87 வரை முடிக்கப்பட்டுள்ளன.

இம்மாவட்டத்தில் குடிநீர் பற்றாக்குறையை நீக்கும் பொருட்டு ரூ.72.47 இலட்சம் செலவில் 8 ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கும் பணியும் 2 குடிநீர் குளங்கள் தூர் வாரும் பணியும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதில் புதுக் கோட்டை நகருக்கு குடிநீர் வழங்கும் புதுக்குளத்தை தூர் எடுக்க ரூ. 3 இலட்சம், அறந் தாங்கியில் உள்ள பிள்ளைக் கேணியினை ரூ. 0.47 இலட்சம் செலவில் தூர் வாரும் பணியும் புதுக்கோட்டை மற்றும் அறந் தாங்கி நகராட்சிகள் மூலம் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

சுமார் 100 ஆண்டுகளுக்குமுன் மன்னர் காலத்தில் அன்னவாசல் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் 'காராளன் கிணறு' எனும் குடி நீர்க் கிணறுகள் இருந்து அவை நாளடைவில் முழுவதும் தூர்ந்து மூடப்பட்டு விட்டன.

கடும் குடிநீர் பற்றாக்குறை நிலவும் அன்னவாசல் ஒன்றியப் பகுதியில் வருவாய் பதிவேடுகள் மற்றும் கிராமங்களில் வாழும் பெரியவர்களிடம் 'காராளன் கிணறு' உள்ள இடங்களைப் பற்றிக் கேட்டறிந்து அம்மன் பேட்டை, மேலூர், இலுப்பூர், ஓடமன்குளம், ஆகிய ஊர்களில் காராளன் கிணறுகள் மீண்டும் தோண்டப்பட்டன. தொடர்ந்து தூர்வாரும் பணிகள் மேற்கொள் ளப்பட்டு வருகின்றன. இக்கிணறுகளில் குடிநீருக்கு ஏற்ற நல்ல தண்ணீர் ஏராளமாக கிடைக்கிறது.

அம்மன்பேட்டை என்ற கிராமத்தில் காராளன் கிணறு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு ரூ. 40,000 செலவில் தூர்வாரி சுற்றுச்சுவரும் கட்டப்பட்டு வருகிறது. இக் கிணற்றில் தற்போது 3 மீட்டர் ஆழத்திற்கு குடிநீர் கிடைப்பதோடு நீர் ஊற்றும் உள்ளது. இதனால் இப்பகுதி மக்கள் பெரிதும் பயன் அடைகின்றனர். இதேபோல் மேலும் மேலூர், வடுக்ப்பட்டி, மதியநல்லூர் மற்றும் கந்துப்பட்டி ஆகிய கிராமங்களிலும் காராளன் கிணறு இருப்பது தெரியவந்துள்ளது. இக்கிணறுகளையும் தூர்

வாரும் பணி மேற்கொள்ளப் பட்டு வருகிறது. இலுப்பூரில் 'கம்பர்குளம்' எனும் கிணறு ரூ. 4,500 செலவில் தூர் வாரப்பட்டு ரூ. 15,000 செலவில் சுற்றுச் சுவரும் எழுப்பப்பட்டு குடிப்பதற்குஏற்ற ஏராளமான தண்ணீர் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட் டுள்ளது. இதேபோல ஓடமன் குளம் ரூ. 30,000 செலவில் தூர் எடுத்து சுற்றுச் சுவர் எழுப்பி குடிநீர் கிடைக்க வழிவகை செய் யப்பட்டுள்ளது.

# பேரறிஞர் அண்ணாவின் கருத்துமணிகள் தொகுப்பு



## ஒரு வேண்டுகோள்



பேரறிஞர் அண்ணா அவர்களின் எழுத்தோவியங்கள், சொற்பொழிவுகளில் காணப்படும் கருத்து மணிகள் பலவற்றையும் பொருள் வாரியாகத் தனித்தனித் தலைப்புகளில் தொகுத்து தனித்தனி நூல்களாக, இன்றைய மற்றும் எதிர் காலத் தமிழ்ச் சமுதாயத்தினருக்குப் பயன்படும் வகையில் வெளியிடத்தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது.

இந்தப் பணிக்குரிய அலுவலகம் 'தமிழரசு' அலுவலகக் கட்டடத்தில் இயங்கத் தொடங்கியுள்ளது.

பேரறிஞர் அண்ணாவின் அனைத்து எண்ணக் கனிகளும் இத்தொகுப்பு நூல்களில் இடம் பெறுவதற்கு உதவிடும் வகையில் தங்களிடம் ஆதாரமாக உள்ள அண்ணாவின் எழுத்தோவியங்கள், சொற்பொழிவுகள் இடம் பெற்றுள்ள நாளேடுகள், வார மாத இதழ்கள், அண்ணா எழுதிய நூல்கள், பிற புத்தகங்கள் முதலானவற்றை அடியிற்காணும் முகவரிக்கு அனுப்பி உதவுமாறு பொது மக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

அப்படி அனுப்பி வைக்கப்பெறும் படைப்புகளுக்குத்தக்க அன்பளிப்பை அரசு வழங்கும். அத்தகைய படைப்புகளைத் திருப்பி அனுப்பவும் ஏற்பாடு செய்யப்படும்.

இப்பணிக்கு இயன்ற வகையிலெல்லாம், பொதுமக்கள் அனைவரும் ஒத்துழைக்குமாறு வேண்டப்படுகிறார்கள்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:



**உதவி இயக்குநர் (தமிழரசு)**
தமிழரசு அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை-600 002.

தொலைபேசி: 568 926

இயக்குநர்
செய்தி-மக்கள் தொடர்புத்துறை.



மேதகு ஆளுநர் திரு எஸ்.எல்.குரானா அவர்கள் 6.5.87 அன்று கிண்டி ராஜ்பவனில் சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தேநீர் விருந்தளித்தார்.

# படமும் செய்தியும்

மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர் அவர்கள், சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிவடைவதையொட்டி 7.5.87 அன்று சட்டமன்ற உறுப்பினர்களுக்கு விருந்தளித்தார்.



# தியாகசீலர் தியாகராயர்

சர்.பிட்டி.தியாகராயர் அவர்களின் 136வது பிறந்தநாள்விழா, தென்னார்க்காடு மாவட்டம் கடலூரில், முழுநாள் நிகழ்ச்சியாக (27.4.87) மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா.நெடுஞ்செழியன் அவர்களும், மாண்புமிகு சுற்றுலா மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் திரு வி.வி.சுவாமிநாதன் அவர்களும் இந்த விழாவில் பங்கேற்றுச் சிறப்பித்தார்கள்.

அன்று காலை நிகழ்ச்சி நீலகண்டன் குழுவினரின் நாதசுர இசையோடு தொடங்கியது. 'வெள்ளுடை வேந்தர்' என்ற பொதுத் தலைப்புக் கருத்தரங்கத்திற்கு அரசுக் கவிஞர் புலவர் புலமைப்பித்தன் அவர்கள் தலைமை தாங்கினார்.

மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு. வி. சுபாஷ்வரவேற்புரையாற்றினார்; உதவி மக்கள் தொடர்பு அலுவலர் திரு. து. தாமரைச் செல்வன் நன்றியுரை கூறினார்.

புலவர் திரு.புலமைப்பித்தன் அவர்கள் தமது தலைமை உரையில் குறிப்பிட்டதாவது:

''திராவிடப் பேரியக்கத்தின் நல்வித்தாகத் தோன்றிய தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்தைத் தோற்றுவித்த பெருமையாளர் தான் சர்.பிட்டி. தியாகராயர். தமிழகத்தில் இன்றைக்கு மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்களின் தலைமையில் திராவிட இயக்கத்தின் அரசு நடந்துகொண்டிருக்கிறதென்றால், அது தியாகராயரின் தொண்டால்-தியாகத்தால் கிடைத்த பேறுதான் என்பதை யாரும் மறக்கவோ மறுக்கவோ முடியாது. 1927-ல், வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவம் என்ற கொள்கையை அவர் உருவாக்கியிராவிட்டால், இப்போது நாமெல்லாம் மரியாதைக்கு உரியவர்களாக-சுயமரியாதை உள்ளவர்களாக இருக்க முடியுமா? ஆகவே இந்நாளில் நாமெல்லாம் நம்மைவழிநடத்திய, நெறிப்படுத்திய அவரைநன்றியோடு நினைவு கூர்வோம்''.

அரசுக் கவிஞரின் தலைமையுரைக்குப் பின்னர், திரு.எல்.ஜெயசந்திரன், திரு.என்.ஏ.கருணாகரன், திரு. கே. குமாரசாமி, ஊராட்சி ஒன்றியத்தலைவர் திரு அன்பு.ஆர்.தண்டபாணி, நகர மன்றத்தலைவர் திரு.கே.எம். சுந்தரம், திரு. ஏ.ஆர்.தாமோதரன் ஆகியோரும் சர்.பிட்டி தியாகராயரின் அருமைபெருமைகள் பற்றி விளக்கி உரையாற்றினார்கள்.

மாலை நிகழ்ச்சியின் துவக்கத்தில் வரவேற்புரையாற்றிய மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. த.தங்கவேலு இ.ஆ.ப. அவர்கள் ''சமுதாய மலர்ச்சிக்கு வித்திட்டவர்களில் சர்.பிட்டி தியாகராயரும் ஒருவர். தமிழ்த்தென்றல் திரு.வி.க. அவர்களால் போற்றப்பட்டவர் அவர். அந்தப் பெருந்தகையாளருக்குத் தென்னார்க்காடு மாவட்டத்தில், கடலூரில் விழா எடுப்பதில் நாங்களெல்லாம் பெருமை கொள்கிறோம்'' என்றார்.

மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் திரு.வி.வி.சுவாமி






நாதன் அவர்கள் விழாத்தலைமையேற்று, சர்.பிட்டி. தியாகராயரின் திருவுருவப்படத்தைத் திறந்துவைத்தார்.

மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறைஅமைச்சர் அவர்கள் தமது தலைமையுரையில் குறிப்பிட்டதாவது:

''தந்தை பெரியார் அவர்களுக்கு முன்னாலேயே திராவிட இயக்கத்தின் பெரியாராக விளங்கியவர் சர். பிட்டி தியாகராயர். செல்வச் சீமானாகப் பிறந்து, குதிரைகள் பூட்டிய சாரட் வண்டியிலே போகும் செல்வாக்கு இருந்தாலும் ஏழை எளிய மக்களின் இன்னல் நீக்கப்பாடுபட்டார் அவர். இப்போது ஆதிதிராவிடர்களுக்குத் தனித்தொகுதி எப்படி ஒதுக்கப்படுகிறதோ, அப்படி அந்நாளில் பிராமணர் அல்லாதாருக்குத் தொகுதி ஒதுக்கும்படி குரல்கொடுத்து வெற்றிகண்டார்.

''தமிழ்நாட்டில், கட்சி அடிப்படையில் தேர்தல் வைக்கப்பட்டு தியாகராயரின் கட்சி உறுப்பினர்கள் அதிக அளவில் வெற்றி பெற்றபோது, அவரை முதலமைச்சராகப் பொறுப்பேற்கும்படி கவர்னர் வெலிங்டன் அழைத்தார். தியாகராயர் அதைமறுத்து தம் கட்சி உறுப்பினரான சுப்பராயலுவை முதலமைச்சராக்கும்படி சிபாரிசு செய்தார். இந்தக் கடலூரைச் சேர்ந்தவர்தான் திரு. சுப்பராயலு. அதன் காரணமாகத்தான் இந்த ஆண்டு பிறந்த நாள் விழா இங்கே நடத்தப்படுகிறது. அதற்கடுத்த பொதுத் தேர்தலிலும் அவர் கட்சிதான் பெருவெற்றி பெற்றது. அப்போதும் சர்.பிட்டி. தியாகராயர் முதலமைச்சராகப் பொறுப்பேற்கச் சம்மதிக்காமல் பனகல் ராஜாவை முதல் அமைச்சராக்கினாரென்றால் — அவரை ராஜரிஷி என்பதே பொருந்தும்.

''கைத்தறி நெசவாளர் துயர் துடைப்பதில் பெரிதும் அக்கறை கொண்டிருந்தவர் தியாகராயர். அவரைப் பின்பற்றியே மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களும் நெசவாளர் நிலை உயர்த்த அயராமல் பாடுபட்டு வருகிறார். செல்வச் செழிப்புள்ளவர் ஆனாலும், எப்போதும் வெள்ளைச் சட்டை, வேட்டியில்தான் அவர் மிக எளிமையாகக் காட்சியளிப்பார். அதனால்தான் வெள்ளுடைவேந்தர் என்று அவர் குறிப்பிடப்பட்டார்.''

சட்டமன்ற உறுப்பினர் திரு ஏ.தங்கராசு அவர்கள் பேசுகையில் ''சர்.பிட்டி. தியாகராயர், தந்தை பெரியார், அறிஞர் அண்ணா போன்றோர் நாடு காப்பதிலும் நம்மைக் காப்பதிலும் எப்படியெல்லாம் பாடுபட்டார்களோ, அதையெல்லாம் செயல்படுத்திச் சிறப்புற்று வருகிறார் மாண்புமிகு புரட்சித்தலைவர்'' என்றார்.

நாடாளுமன்ற உறுப்பினர் திரு என். ராஜாங்கம், ''அந்தக் காலத்தில், இரும்பு மனம்படைத்த சர்.பிட்டி. தியாகராயரெல்லாம் அரும்பாடுபட்டதால்தான், இன்று நாமெல்லாம் நாட்டில் நிமிர்ந்து நடக்கமுடிகிறது.'' என்று தமது உரையில் குறிப்பிட்டார்.

''வால்மீகி ராமாயணத்தை எளிமைப்படுத்தி எழுதிக் கம்பர் புகழ்பெற்றது போல, சர்.பிட்டி. தியாகராயரின் சீர்திருத்தக் கருத்துக்களைச் செம்மைப்படுத்திப் புகழ் பெற்றவர் தந்தை பெரியார்'' என்று தனது பேச்சில் குறிப்பிட்டார், சட்டமன்ற உறுப்பினர் திரு ஆர். தியாகராசன்.

சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ்.கலிதீர்த்தான் பேசும்போது ''ஏற்றத்தாழ்வற்ற சமுதாயம் காணப்பாடுபட்ட தியாகராயரின் கனவுகளை நனவாக்கி வருபவர் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள்'' என்றார்.

கடலூர் நகரமன்றத் தலைவர் திரு. கே.எம்.சுந்தரம் பேசுகையில்-''இங்குள்ள சராங்கு தெருவுக்கு சர்.பிட்டி.தியாகராய வீதி என்று பெயர் வைக்கவிருக்கிறோம்'' என்று பெருமையோடு தெரிவித்தார்.

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையத் தலைவர், முன்னாள் அமைச்சர் திரு. க.கலைமணி அவர்கள் பேசியதாவது:

''மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தமிழகத்தில் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பின்னாலேதான் நாட்டுக்குழைத்த நல்லோர்களை நினைவுகூரும் வகையில் இப்படிப்பட்ட விழாக்கள் எடுக்கப்படுகின்றன. பிராமணர் அல்லாதார் பெருமை பெற வாழ்நாள் முழுதும் பாடுபட்டவர் தியாகராயர். எடுத்த நிலையில், கொண்ட கொள்கையில் கடைசிவரை உறுதியோடிருந்து வெற்றி கண்டார். அவர் சென்னை மாநகராட்சியின் தலைமைப் பொறுப்பில் இருந்த காலத்தில்தான், மாநகராட்சியே



## எளிய மக்களுக்கு அரசு உதவி

மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்களால், 27.4.87 அன்று கடலூரில் நடைபெற்ற சர். பிட்டி.தியாகராயர் 136-வது பிறந்த நாள் விழாவில், அரசு மூலம் நலிவுற்ற மக்களுக்கு வழங்கப்பட்ட நலத்திட்ட உதவிகள் விவரம் வருமாறு:

| | |
|---|---|
| வீட்டுமனைப் பட்டா பெற்றோர் | — 115 நபர்கள் |
| முதியோர் உதவித் தொகை பெற்றோர் | — 16 நபர்கள் |
| குரூப் இன்சூரன்ஸ் தொகை பெற்றோர் | — 7 நபர்கள் |
| தையல் எந்திரம் பெற்றோர் (ஆதி திராவிடர்கள்) | — 4 நபர்கள் |
| கலப்புத் திருமண உதவி பெற்றோர் | — 1 நபர் |
| சலவைக் கருவிகள் பெற்ற பிற்படுத்தப்பட்டோர் | — 5 நபர்கள் |
| சித்த வைத்தியர்கள் ஒய்வூதியம் பெற்றோர் | — 8 நபர்கள் |
| தொழில் கடன் உதவி பெற்றவர்கள் | — 42 நபர்கள் |

பள்ளிகளை நடத்தலாம் என்ற நிலை உருவாயிற்று.''

தமிழ்நாடு கோ-ஆப்டெக்ஸ் தனி அலுவலர் அனகாபுத்தூர் திரு. சி. இராமலிங்கம் தனது உரையில் தெரிவித்ததாவது:

''அரசியலில் பல வழிகாட்டிகளை, தலைவர்களை உருவாக்கிப் பெருமை கொண்ட மாவட்டம் இது. ஆகவே, சர். பிட்டி. தியாகராயரின் பிறந்தநாள் விழா இங்கே நடத்துவதில் பெருமகிழ்ச்சி கொள்கிறோம். ஜாதிகள் தலைவிரித்தாடிய அந்தக் காலத்திலேயே சமத்துவம் காணப் போராடியவர் தியாகராயர். நெசவாளர் வளம்பெறப் பலவழிகளில் உதவிய அவர், நெசவாளர் வீட்டுப் பிள்ளைகள் படிக்காமல் இருக்கும் நிலைக்காக மனம் கலங்கினார். மாநகராட்சியில், சாதி வாரியாக மேயர் தேர்ந்தெடுக்கிற முறையை அவர்தான் கொண்டு வந்தார்.

ஏழை, எளிய மக்களுக்கான கடன்உதவிகள், கருவிகள் ஆகியவற்றை அரசு மூலம் வழங்கி மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேசியதாவது:

''நாட்டு நலமே குறிக்கோளாக வாழ்ந்து காட்டிய வளர்ந்துகாட்டிய பெரியவர்களின் வரலாறுகள் - வளர்ந்து கொண்டிருக்கும் வாழ்ந்து கொண்டிருக்கும் இளைஞர்கள் எதிர்காலத்தில் எப்படி இருக்கவேண்டும் என்பதை எடுத்துக்காட்டும் பாடமாக அமைவதாகும். அதற்காகவே அரசுமூலம் ஆண்டுதோறும் இவ்வாறான விழாக்கள் நடத்தப்படுகின்றன. சுடர்விளக்கானாலும் தூண்டுகோல் வேண்டுமல்லவா?

''பிட்டி என்பது தியாகராயரின் குடும்பப் பெயராகும். அவருடைய பரம்பரையே சிறந்த வணிகப் பரம்பரையாகும். நவீன தொழிற்சாலை ஒன்று நிறுவி, அதன் உற்பத்தி மேன்மைக்காக அகில இந்திய ரீதியில் தங்க மெடல் பரிசு பெற்றவர் அவர். 'தியாகராயர் பெரிய செல்வந்தர். செல்வாக்குப் படைத்தவர். அவர் விரும்பியிருந்தால் வியாபாரத்தின் மூலம் பல இலட்சம் ஈட்டியிருக்கலாம். ஆனால் அவர் அதை ஒரு பொருட்டாக மதிக்கவில்லை. அவர் அன்று பறக்கவிட்ட சமுதாயப் புரட்சிக் கொடியின் கீழே நின்றுதான் நாம் இன்று பணியாற்றி வருகிறோம்' என்று பேரறிஞர் அண்ணா அவர்களே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

''1882ல் சென்னை மகாஜன சபை தோன்றியது. 1885ல்தான் காங்கிரஸ் இயக்கம் பிறந்தது. சென்னையில், முதல் காங்கிரஸ் கூட்டம் நடந்த இடமே இந்த மகாஜனசபைதான் என்பதற்கு வரலாறு இருக்கிறது. அந்த நேரத்தில் அக்கட்சியின் முக்கியப் பொறுப்பில் இருந்தவர்தான் சர். பிட்டி. தியாகராயர்.

''தொழில்வளம் காணப் பாடுபட்ட தியாகராயர் சவுத் இந்தியன் சேம்பர்ஸ் ஆஃப் காமர்ஸ் உருவாக முக்கியக் காரணமாக இருந்தவர். கூட்டுறவுச் சங்கங்கள் பலகண்டவர். அறிவியல் விஞ்ஞானக் கல்விதான் பயன்தருமே தவிர, வெறும் படிப்பால் பயனில்லை என்றவர். சென்னைப் பல்கலைக் கழகம் அவருக்கு 1898ஆம் ஆண்டே 'ஃபெலோ ஆஃப் மெட்ராஸ்' என்ற பட்டமளித்திருக்கிறது. அவர் நாத்திகரல்லர், ஆத்திகர். ஆனால் இனத்தின் பேரால் சட்டத்தின் பேரால் சம்பிரதாயத்தின்பேரால் ஒதுக்கப்பட்டவர்களை -ஒடுக்கப்பட்டவர்களைக் கைதூக்கிவிட இறுதி மூச்சுவரை பாடுபட்டார்.

''1916ல் தென்னிந்திய நலவுரிமைச் சங்கம் கண்ட அவர், அந்த இயக்கத்தின் சார்பில் ஆங்கிலத்தில் ''ஜஸ்டிஸ்'' என்றோர் ஏடும், தமிழில் 'திராவிடன்' என்றோர் ஏடும், தெலுங்கில் 'ஆந்திரப் பிரகாசிகா' என்றோர் ஏடும் தாமே ஆசிரியராக இருந்து நடத்திப் பெருமையுற்றார். அந்த ஆங்கில ஏட்டின் பெயராலேயே அவ்ருடைய கட்சியும் குறிப்பிடப்பட்டது.

—இவ்வாறு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் விழாப் பேருரையில் குறிப்பிட்டார்.

செய்தித்துறை துணை இயக்குநர் திரு. வி. டி. வீரப்பன் நன்றி கூறினார்.

—நமது செய்தியாளர்




முழு விவரங்களுக்கு, அருகிலுள்ள நியூ இந்தியா ஆபீஸ் அல்லது ஏஜெண்டோடு தொடர்பு கொள்ளுங்கள்.

நியூ இந்தியா அஷ்யூரன்ஸ்

(ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஆஃப் இந்தியாவின் துணை நிறுவனம்)

**இன்சூரன்ஸ்—நஷ்ட காலத்தில் நம்பகமான ஆதரவு!**



வட ஆர்க்காடு மாவட்டத்தில்

# அண்ணல் அம்பேத்கார் பிறந்த நாள் விழா

**அண்ணல் அம்பேத்கார்—**

அரசியல் சாசனம் உருவாக்கிய மேதை.

தாழ்த்தப்பட்ட மக்களின் ரட்சகர்.

குன்றிலிட்ட ஒளி விளக்கு.

-என்றெல்லாம் புகழ் மாலை சூட்டிமனம்பூரித்திடும் வண்ணம், டாக்டர் அம்பேத்கார் அவர்களின் 97-வது பிறந்த நாள் விழா வேலூர் அண்ணா கலையரங்கில் 30-4-87 அன்று சிறப்பாக நடந்தது. விழா மேடையில் வண்ண விளக்குகளால் டாக்டர் அம்பேத்கார் அவர்களின் திருவுருவப்படம் அலங்கரிக்கப் பட்டிருந்தது. மக்கள் வெள்ளமெனத் திரண்டிருந்தனர்.

மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி எஸ். மாலதி இ.ஆ.ட. அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

வட ஆர்க்காடு மாவட்டக் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர் ஒன்றியத் தலைவர் திரு சி. கோபால் அவர்கள் பேசுகையில், ''சமதர்மச் சமுதாயத்தைக் கடைப் பிடிக்க வேண்டும் என்கிற எண்ணத்தின் அடிப்படையில் இந்த விழா கொண்டாடப்படுகிறது'' என்றார்.

**நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள்**

திரு ஏ. ஆறுமுகம் எம்.எல்.ஏ. அவர்கள் பேசுகையில், 'தாழ்த்தப்பட்ட மக்களின் பொருளாதார, சமுதாய முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டவர் அம்பேத்கார்' என்றார்.

திரு ஆர். எஸ். ஆறுமுகம் எம். எல். ஏ. அவர்கள் பேசுகையில், 'நான் அம்பேத்கார் அவர்களின் தொண்டன். அன்னாரை மறக்காமல் விழாக் கொண்டாடும் தமிழக அரசைப் பாராட்டுகிறேன்' என்றார்.

திரு கோ.இரகுபதி எம்.எல்.ஏ. அவர்கள் பேசுகையில் 'டாக்டர் அம்பேத்கார் அவர்களை நினைவு கூர்ந்து செயல்படவும், ஊக்கம் பெறவும் இந்த விழா உதவும்'' என்றார்.

திரு. எஸ். பி. மணவாளன் எம். எல். ஏ. அவர்கள் பேசுகையில், ''அரசியல் சாசனம் உருவாக்குவதில் முதன்மையாக இருந்த மேதை'' என்றார்.

திரு ஆர். கோவிந்தசாமி எம். எல். ஏ. அவர்கள் பேசுகையில், 'தீண்டாமை ஒழித்த வீரர்' என்றார்.

திரு செ. கு. தமிழரசன் எம். எல். ஏ. அவர்கள் சிறப்புரையாற்றுகையில், 'தாழ்த்தப்பட்ட மக்களின் ரட்சகர்-உலகப் பேரொளி-தொட்ட துறைகளில் துலங்கியவர் அம்பேத்கார்' என்றார்.

திரு இல. பலராமன் எம்.பி.



மாண்புமிகு மத்தியத் தொழிற்துறை இணையமைச்சர் திரு எம். அருணாசலம் அவர்கள், டாக்டர் அம்பேத்கார் அவர்களின் திருவுருவப் படத்தினைத் திறந்து வைத்தார்.

அவர்கள் பேசுகையில், "ஆதி திராவிட மக்களுக்கு வழிகாட்டி யாக விளங்கியவர். அவர்களுக்கு உதவிட ஊன்றுகோலாக இருந்த வர். இந்தியன் என்று கூறிக் கொள்வதைப் பெருமையாகக் கருதியவர்'' என்றார்.

திரு ஆர். ஜீவரத்தினம் எம்.பி. அவர்கள் பேசுகையில், ''காந்தி யடிகள் எந்தக் கொள்கைக்காக வாழ்ந்தாரோ அந்தக் கொள்கை யில் டாக்டர் அம்பேத்கார் ஈடு பாடு கொண்டிருந்தார். தீண் டாமை ஒழிக்கவும், நாடு விடுதலை பெறவும், வறுமை போக்கவும் அவர் பாடுபட்டார்'' என்றார்.

**தலைமையுரை**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு அ.அருணாசலம் அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்து, அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கினார். அப்போது அவர் பேசுகையில் குறிப்பிட்டார்:

''தேசியத் தலைவர்களுக்குத் தமிழகத்தில் பிறந்த நாள் விழா எடுக்கும் நிகழ்ச்சியின் பெருமை தமிழக முதல்வர் புரட்சித் தலைவருக்குச் சேரும். இந்த விழாவை நடத்துவதற்கு அவர் தான் உத்தரவிட்டார்.

''அம்பேத்கார் அவர்கள் ஆதி திராவிட சமுதாயத்துக்கு மட்டும் சொந்தமானவர் அல்ல. அவர் இந்தியாவுக்கே சொந்தமானவர். இந்தியாவின் அரசியல் சட் டத்தை 3 ஆண்டுகளில் எழுதி முடித்த பெருமை அம்பேத் காரைச் சேரும். அவர் இந்திய வின் முதல் சட்ட அமைச்சராக வும் பதவி வகித்தார்.

''தமிழகத்தில் தீண்டாமை முழுமையாக ஒழிக்கப்பட்டு விட்டது. ஆதிதிராவிட மக்கள் வாழ மற்றவர்கள் உறுதுணை யாக இருக்க வேண்டும். ஆதி திராவிட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா, குடிதண்ணீர் வசதி,

மாண்புமிகு சத்துணவு மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் திரு ஆர். சௌந்தரராஜன் அவர்கள் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.





## பேரறிஞர் அண்ணாவின் கருத்து மணிகள்

பேரறிஞர் அண்ணா அவர்களின் எழுத்தோவியங்கள், சொற்பொழிவுகளில் காணப்படும் கருத்துக்களைப் பொருள் வாரியாகத் தனித்தனித் தலைப்புகளில் தொகுத்துத் தனித்தனி நூல்களாக வெளியிட தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது. இன்றைய மற்றும் எதிர்காலத் தமிழ்ச் சமுதாயத்திற்குப் பயன்படும் வகையில் இப்பணி மேற்கொள்ளப்படுகிறது.

அண்ணா அவர்களின் கருத்து மணிகளைத் தொகுத்து அளிக்கும் ஆசிரியர்களாக திரு அ. மறைமலையான் அவர்களும் புலவர் பெ. அ. இளஞ்செழியன் அவர்களும் அவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும் பணிக்காகத் திரு ஏ. எஸ். வேணு அவர்களும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

மயானம் அமைத்தல், காலனிக்குச் சாலை போடுதல் ஆகிய நன்மைகளைப் புரட்சித் தலைவர் அரசு செய்து வருகிறது.''

**விழாச் சிறப்புரை**

மாண்புமிகு சத்துணவு மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் திரு ஆர். சௌந்தரராசன் அவர்கள் விழாச் சிறப்புரையாற்றுகையில் குறிப்பிட்டார்:

''டாக்டர் அம்பேத்கார் அவர்கள் அறிவு மேதையாக-மனத்தில் படிந்து விட்ட தீண்டாமைக் கறையைத் துடைப்பதற்காக வந்த புதுப்புனலாக—சமுதாயத் தீமைகளைக் களைய பொங்கி எழுந்த பெரு நெருப்பாக இந்தியத் திருநாட்டுக்கு மிகப் பெரிய அளவில் பணியாற்றி மறைந்தும் மறையாமலிருக்கிறவர்.

''தன்னுடைய வாழ்வு கரையேற மட்டும் அவர் படிக்கவில்லை; இந்த நாட்டு மக்கள் வாழ்க்கை கரையேற வேண்டும் என்றும் அவர் படித்தார்.

''இந்த நாடு விடுதலையடைய வேண்டுமானால், வெள்ளையன் சட்டம் ஆளக்கூடாது. நமக்கென்று தனிச்சட்டம் தேவை என முழங்கியவர்.

''தாழ்த்தப்பட்ட மக்கள் கல்வி அறிவு பெற்றால்தான் சமுதாயம் வளர்ச்சி அடைய முடியும் என்று அவர் கருதினார். அந்தக் கருத்துக்குச் செயல் வடிவம் கொடுத்தவர் நமது முதலமைச்சர் புரட்சித் தலைவர் ஆவார். அவர், ஏழை மக்களுக்குச் சத்துணவு வழங்கி, கல்வி அறிவைக் கொடுத்து வருகிறார்.

'இந்த ஆண்டு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் 75,000 பேருக்குக் கிராமப்புறங்களில் வேலை வாய்ப்புக் கிடைக்கும். இதில் 30,000 ஆதிதிராவிடர் பயன் பெறுவார்கள். ஒரு கோடியே 20 இலட்சம் பேருக்குக் காலணி வழங்கப்படவிருக்கிறது. இந்தத் திட்டத்திலும் ஆதிதிராவிடர்கள் பயன் பெறுவார்கள்.''

**விழாப் பேருரை**

மாண்புமிகு மத்தியத் தொழில் துறை இணை அமைச்சர் திரு எம். அருணாசலம் அவர்கள் டாக்டர் அம்பேத்கார் அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து விழாப் பேருரை நிகழ்த்தினார். அப்போது அவர் பேசுகையில் குறிப்பிட்டார்:

''டாக்டர் அம்பேத்கார் அவர்கள் தமிழ்நாட்டுக்கு, இந்தியத் திருநாட்டுக்கு மட்டுமல்ல, உலகத்துக்கே அறிமுகமானவர். அவர் சமுதாயச் சிற்பியாக விளங்கினார். 'கடின உழைப்புக்கு இணை ஏதும் இல்லை' என்ற கருத்திற்கிணங்க அதில் முழுமையாக ஈடுபட்டவர்.

''அம்பேத்கார் சாதி மத வேறுபாடு இல்லாமல் மக்கள் வாழ வேண்டும் என்ற கொள்கைகளை வலியுறுத்தி வந்தார். ஆனால் படித்த இளைஞர்கள் சிலர் சாதி வெறியைத் தூண்டி விடுகிறார்கள். மற்ற சமூகத்தினரைப் போல, ஆதிதிராவிட மக்கள் வாழ, படித்த இளைஞர்கள் நன்மை செய்ய முன்வர வேண்டும். சமுதாயத்தில் அவர்கள் வேற்றுமையை உண்டாக்கக் கூடாது.

''தீண்டாமை ஒழிப்புக்காக, படித்தவர்கள், சமுதாயத்தில் உள்ளவர்களுக்கு-அடித்தளத்தில் உள்ளவர்களுக்கு என்ன செய்தோம் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

''டாக்டர் அம்பேத்கார் அவர்களின் 100-வது பிறந்த நாளைச் சிறப்பாகக் கொண்டாட வேண்டும். இந்தியாவில் சமதர்மம் மலர வேண்டும் என்பதுதான் அம்பேத்கார் அவர்களின் சிந்தனை. அம்பேத்கார் அவர்களின் பிறந்த நாளைக் கொண்டாடிய தமிழக அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.''

விழாவில், இரண்டாயிரம் ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன. ஆதிதிராவிடர் நலத்துறை, சமூக நலத்துறை சார்பில் தையல் இயந்திரங்கள், சலவைப் பெட்டிகள், தச்சு வேலைக் கருவிகள், ஆதரவற்றவர்க்கான திருமண நிதியுதவி, முதியோர் உதவித் தொகை, தொழிற் கடன்கள் ஆகியவை வழங்கப்பட்டன.

அன்று இரவு, மத்திய அரசு இசை மற்றும் நாடகப் பிரிவின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. செய்தி - மக்கள் தொடர்புத் துறை உதவி இயக்குநர் திரு ஆர். நடேசன் நன்றி நவின்றார்.

அன்றைய விழா, அண்ணல் அம்பேத்கார் அவர்களின் சிறப்பியல்புகளை, அவர் ஆற்றிய அரும் பெரும் பணிகளை உணர்த்தியது என்பதை மகிழ்ச்சியோடு குறிப்பிட வேண்டும்.

—நமது செய்தியாளர்

# மூன்று மாதம் வரை கெடாத நறுமணப்பால்






"இந்தியாவிலேயே சிறந்த பால்வள ஒன்றியமாகப் பெரியார் பால்வள ஒன்றியத்தை மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் தேர்ந்தெடுத்துப் பரிசு வழங்கியுள்ளார். ஐஸ் கிரீம், வெண்ணெய், தயிர் போன்ற ஆவின் உபபொருட்களுக்கு வெளிமாநிலங்களிலும், வெளிநாடுகளிலும் நல்ல வரவேற்பு உள்ளது'' என்று மாண்புமிகு சுற்றுலா மற்றும் மின்துறை அமைச்சர் திரு.வி.வி.சுவாமிநாதன் அவர்கள் குறிப்பிட்டார்.

ஆவின் 'டெட்ராபேக்' நறுமணப்பால் அறிமுகவிழா 25.4.'87 அன்று சென்னைக் கலைவாணர் அரங்கில் நடந்தது. இந்த விழாவிற்குத் தலைமைவகித்து மாண்புமிகு சுற்றுலா மற்றும் மின்துறை அமைச்சர் அவர்கள் டெட்ராபேக் நறுமணப்பால் பெட்டிகளை அறிமுகப்படுத்தினார். திரைப்பட நடிகை செல்வி ரம்யா கிருஷ்ணன், முதல் விற்பனையைப் பெற்றுக்கொண்டார்.

இந்த நறுமணப்பால் மூன்று மாதம்வரை கெடாமல் இருக்கும். சாக்லெட் சுவையுள்ள 200 மில்லிலிட்டர் அளவுள்ள பால்கொண்ட இந்தப் பெட்டியின் விலை இரண்டரைரூபாய்.

சேலம் மாவட்டப் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்தில் இந்த அட்டைப் பெட்டிகள் தயாரிக்கப்படுகின்றன. தற்போது சென்னையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இந்த நறுமணப்பால் விற்பனை படிப்படியாக, பிற மாவட்டங்களுக்கும் அறிமுகப்படுத்தப்படும்.

இந்தப் புதிய நறுமணப்பால் அறிமுக விழாவில், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையத் தலைவர் திரு.க.கலைமணி,சேலம் மாவட்டப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத் தலைவர் திரு கே.கந்தசாமி, சென்னை-செங்கை மாவட்டப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத் தலைவர் திரு தி.க.நடராசன் ஆகியோர் கலந்துகொண்டு பேசினார்கள். திரு கமலேந்திரனின் இன்னிசை நிகழ்ச்சி அனைவரையும் கவர்ந்தது.

—நமது செய்தியாளர்



### தமிழ் வளர்த்த பெரியார்

# நினைவுக்கலை ஏந்தல்

**வேலூர் ம. நாராயணன்**

வான் புகழும் வள்ளுவத்தைப் பரப்பும் பணியையே தம் வாணாள் பணியாகப் பிறர் மெச்சும் வண்ணம் உச்சிமேற்கொண்டு வாழ்ந்தவர் நம் நினைவுக்கலை ஏந்தல பதின்கவனகர் பெ.இராமையா அவர்கள். வள்ளுவத்தை பன்முகக் கோணத்தில் அணுகி நுணுகி, ஆய்ந்து-தோய்ந்து மன்பதைக்கு மகிழ்ச்சி ஊட்டியவர் இப் பெரியார்.

ஆழி சூழ் உலகில் அருகிவந்த அவதானக் கலைக்கு வாழ்வளித்து வெற்றிகண்ட இப் பெரியாரின் முதல் நினைவு நாள் 18.5.1987 ஆகும்.

செப்டம்பர்த் திங்கள் அறிஞர்களைப் பெற்றுத் தரும் திங்கள் என்பது வரலாற்று உண்மை. தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, மறைமலையடிகளார் இவர்களைப் போலவே நம் பதின்கவனகரும் செப்டம்பர்த் திங்களில் (24.9.1920) தோன்றினார். மதுரைக் கருகில் உள்ள சாலிச்சந்தையில் பிறந்த இவர்தம் பெற்றோர் பெரிய கருப்பனார்-சின்னத்தாய் அம்மையார் ஆவர்.

இவர், பிறந்தது முதலே நினைவாற்றலில் சிறந்து விளங்கினார். சிறு பருவத்திலேயே தாய் தந்தையரை இழந்து உறவினரால் இலட்சக் கணக்கான சொத்துக்கள் சுரண்டப்பட்ட நிலையில் வறுமைக்கு ஆட்பட்டு, ஒரு வாணிப நிறுவனத்தில் கணக்காளராக அமர்ந்தார். பேரேடுகளைப் புரட்டிப் பார்க்காமலேயே யார் யார், எவ்வளவு தரவேண்டும்-பெற வேண்டும் என்பதை நினைவுக் குறிப்பிலிருந்து எடுத்துச் சொல்லி அனைவரையும் வியப்பில் ஆழ்த்தினார்.

இவர்தம் காளைப் பருவத்தில் இந்திய விடுதலைக்காகப் பெருந்தலைவர் காமராசருடன் இணைந்துபணியாற்றும் வாய்ப்புக் கிட்டிற்று. சிறைத் தண்டனை பெற்று வேலூர், பெல்லாரி, அலிப்புரம் சிறைகளில் வாடினார். எனினும் அறிவைத் தேடினார். ஆம்! இந்தச் சிறைச்சாலைகள் இவரது அறிவுத் தாகத்திற்கு நன்னீர்ப் பொய்கைகளாக அமைந்தன. பல இலக்கியங்களை மனப்பாடம் செய்துகொண்டார்.

உரிய பருவத்தில் சீதை அம்மாளைத் திருமணம் புரிந்து கொண்டார். குழந்தைச் செல்வங்களையும் பெற்றார். இந்த வேளையில்தான் இவரது வாழ்வில் மின்னாமல் முழங்காமல் விழுந்த பேரிடியாகக் கண்கள், பார்க்கும் ஆற்றலை இழந்து விட்டன. அப்போது இவர்க்கு வயது மூப்பது.

மூளையில் ஏற்பட்ட நரம்புக் கோளாறினால் கண்கள் செயலிழந்து விட்டன என்று மருத்துவம் சொல்லிற்று. குணமாக்கப் பன்முறை முயன்று தோற்றார். ஒரு சிறு ஈ எறும்பிற்குக் கூடத் தீங்கு நினைக்காத இந்த நல்ல உள்ளம் தற்கொலை நிலைக்குத் தள்ளப்பட்டது. இந்தக் கொடிய நெருக்கடி வேளையில் தான் வழிகாட்டும் ஒளிவிளக்கான திருக்குறள் இவரது உள்ளத்தில்—

'பொறியின்மை யார்க்கும்
பழி யன்று அறிவறிந்து
ஆள்வினை யின்மை பழி'

என்னும் வெளிச்சத்தைப் பாய்ச்சியது. அந்த வெளிச்சம் இவரை ஓர் அவதானக் கலை வல்லுநராக உருவாக்கித் தந்தது.

திருக்குறள், நன்னூல், பாவேந்தர் பாடல்கள் போன்றவற்றை இவர்தம் மகளார் மனோன்மணி படிக்க, இவர் தமது செவிவழி வாங்கி நெஞ்சப் புதையலில் சேமித்துக் கொண்டார்.

'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்பதுதானே ஆன்றவிந் தடங்கிய சான்றோர் தம் கொள்கை. அக்கொள்கைக்குச் செயல் வடிவம் தரத் தமிழகத்தின் பட்டி தொட்டிகளுக்கெல்லாம் சென்றார். அந்த ஆரம்ப நாட்களில் இவரும், இவருக்கு ஊன்றுகோலாக உடன் சென்ற இவருடைய மகன்களும் சந்தித்த அவமானங்கள், துயரங்கள், பட்டினி நாள்கள் எத்துணை எத்துணையோ! அந்த வேளைகளில் இவர்க்கு வழிகாட்டியாக அமைந்தது—

'அருமை உடைத்தென்
றசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்'

என்ற குறட்பாதான்.

காலங்கள் உருண்டன! உரியவர்க்கு உரிய மதிப்பும் மரியாதையும் வழங்கத் தமிழகம் துணிந்த வேளையில், இவர்தம் ஆற்றலை முழுவதுமாகப் பயன்படுத்திக் கொள்ளத் தொடங்கின. தமிழகத்துப் பள்ளிகள், கல்லூரிகள், சேவை நிறுவனங்கள், வானொலி, தொலைக்காட்சி நிலையங்கள் அனைத்தும் இவரை அன்போடு அழைத்துப்போற்றிப் பாராட்டிப் பயன்படுத்திக் கொண்டன.

தமிழ் வளரத் தான் வாழும் நம் தமிழக அரசும் இவர்க்கு அரசவைக் கலைஞர் என்னும் விருதினை வழங்கி உதவிப்பணமும் அளிக்கத் தொடங்கிற்று.

இந் நன்னிலை ஓராண்டும் தொடரவில்லை. அதற்குள்ளாக அந்தோ..! கொடுமையிலும் கொடுமை! பதின்கவனகர் நோய் வாய்ப்பட்டார். அரசும் அமைச்

சர் பெருமக்களும் தக்க துணையிருந்தும் காப்பாற்ற இயலவில்லை. 18.5.1986ல் நம் கண்ணனைய பதின்கவனகர் நம்மை விட்டுப்பிரிந்தார். சான்றோருலகே அழுத நாட்களுள் இதுவும் ஒன்றாயிற்று.

ஒரே நேரத்தில் பத்து சாதனைகளைச் செய்து காட்டி அவையோரை வியப்பில் ஆழ்த்தும் அரிய கலைக்குப் பதின்கவனகம் (தசாவதானம்) என்று பெயர். பத்துக் கவனகங்களாவன:

எண் கவனகம்
எழுத்துக் கவனகம்
பெயர்க் கவனகம்
மணியோசைக் கவனகம்
மலர்தூவல் கவனகம்
இசையறிவுக் கவனகம்
கணிதக் கவனகம்
இலக்கிய விளக்கம்
வெண்பா படைப்பு
திருக்குறள் கவனகம்



மாண்புமிகு முதல்வர் அவர்கள், நினைவுக் கலை ஏந்தலுக்கு அரசுக் கலைஞர் விருதும் உதவித் தொகையும் வழங்குதல்.

இவற்றுள் திருக்குறள் கவனகம் பல உட்பிரிவுகளைக் கொண்டது; பதின்கவனக இமயத்திற்கு 'எவரெஸ்ட்' போன்றது. அடுத்தது அவையோர் தரும் ஈற்றடி அல்லது முதற்சீர், இறுதிச் சீரைக் கொண்டு வெண்பா புனைவது ஆகும்.

ஆயிரக் கணக்கில் வெண்பாக்களை உடனுக்குடன் இயற்றி வெற்றி கண்டிருக்கின்றார் இவர். அவற்றுள் மிகவும் சுவையான சில வெண்பாக்களை இவண் காண்போம்.

ஒரு முறை வள்ளுவர் கோட்டத்தில் பதின்கவனகம் நிகழ்ந்தது. அரங்கம் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. நிகழ்ச்சியின் இடையில் நிதியமைச்சர் நாவலர் அரங்கிற்குள் நுழைகிறார். அவ்வேளையில் நம் பதின்கவனகர் 'வெண்பாவிற்கு ஈற்றடி தாருங்கள்' என்று அவையினரை வேண்ட, புலவர் பெருந்தகையொருவர் 'நாவலர் வந்தார் நடந்து' என்ற ஈற்றடியை வழங்குகின்றார். நம் பதின்கவனகர் உடனே பாடினார்—

'வள்ளுவர் கோட்டம் வளமார் விழா நடத்த, உள்ளித் தமிழ்ப்புலவர் ஒவ்வொருவர் - உள்ளமும், ஆவலுடன் காத்திருக்க அன்பான தோற்றமுடன் நாவலர் வந்தார் நடந்து'
—அரங்கம் அதிரக் கையொலி எழுப்பி மகிழ்ந்தனர் அவையோர்.

கோவை வானொலியில் 'மோர்க்குழம்பு போலிருக்குமோ' என்ற ஈற்றடிக்கு இவர் பாடிய வெண்பா-'அன்னமே! நீசமைத்த சாப்பாட்டருமைதனைச் சொன்னாலே இன்பம் துளிர்க்குதடி- இன்னடிசில் யார்க்கும் சுவை தருமே அன்பென்றால் நீ வைத்த மோர்க்குழம்பு போலிருக்குமோ'

ஒருமுறை வேலூரில் நிகழ்ச்சியை இனிது முடித்துப்புறப்படும் வேளையில், நம் பதின்கவனகரை ஓரன்பர் தனக்காக ஒரு வெண்பா உடனே பாடுமாறு வேண்டினார். ஐயா ஈற்றடியைக் கேட்க, 'எனக்கு அதெல்லாம் தெரியாது. 'பட்டென்று தொடங்கிப் 'படாரென்று முடியுங்கள், என்றார் அந்த அன்பர்; உடனே பிறந்தது வெண்பா.

'பட்டுப் பழகிப் பலகலையும் கற்றோராய்
தட்டுத் தடுமாறித் தானுணர்ந் தோர்-தொட்டகடல்
ஏழ்புவிக்கும் மேலாம்
இறைவன் அருள்பெற்றுப் பாழ்நகரில் வீழப் படார்!

காட்டுப்பாடி உயர்நிலைப் பள்ளி நிகழ்ச்சியில் 'மூடி'என்று தொடங்கித் 'திற' என முடித்து இடையில் 'அம்மா' எனுஞ் சொல் வருமாறு ஒரு வெண்பா பாட வேண்டுமென்று வேண்டப்பட்டது. அடுத்த கணமே நம் ஐயா பாடினார்:

'மூடிய வாயைத் திறந்தே ஒரு முத்தம்
தாடி எனச்சொன்னால் தப்பாமோ-ஓடிவந்தே
'அம்மா எனவே அலறாமல் நீயிங்கு
சும்மா கதவைத் திற'

புதுவை வானொலியில் வழங்கிய ஈற்றடி 'செத்ததனால் வாழ்ந்தேன் சிறந்து' என்பது. இதற்கு ஐயா வழங்கிய வெண்பா வடிவம்:

'வஞ்ச மனமும் மயக்கம் தரும் உணர்வும்
நஞ்சின் நனிதாம் குடியினையும் தஞ்சமென
வைத்ததனால் கெட்டேன்;
மதிநேர்ந் திவைமூன்றும் செத்ததனால் வாழ்ந்தேன் சிறந்து.'

வெண்பா பாடுவதில் புகழேந்தியை நிகர்த்த இவர், விருத்தம் பாடுவதில் கம்பனுக்கு இணையானவர். ஒருமுறை தூத்துக்குடி உயர்நிலைப்பள்ளி நிகழ்ச்சியில் அப்பள்ளிஆசிரியை 'ரோஜா' எனத் தொடங்கி ''ரோஜா'' என முடியுமாறு ஒரு விருத்தம் பாடவேண்டினார்; வருத்தம் அணுவுமின்றி நம் ஐயா விருத்தம் பாடினார்.

'ரோஜாப்பூ சேலைகட்டிப் போகின்ற
பெண்ணணங்கை நோக்கி ஆங்கே
ஆஜானு பாகுவென அமைந்த வொரு
பேரழகன் அவளை நோக்கித்
தாஜாவாய்ப் பேசியொரு தனி முத்தம்
தருகவென தாழ்ந்து நின்ற
ராஜாவைக் கண்டுமுகம் நாணி யொரு
புறம்நின்றாள்; பேர்சரோஜா'

இங்ஙனம், பல்கலைக் குரிசிலாகத் திகழ்ந்து நம்மையெல்லாம் இலக்கியக் கடலில் ஆழ்த்திய நினைவுக்கலை ஏந்தலின் நினைவைப் போற்றி, இவர் விட்டுச் சென்ற அருங்கலை ஆல்போல் தழைக்கத்துணைபுரிவோமாக!

# வளமான வாழ்வுக்கு வழிகாட்டும் வங்கி



வளமான வாழ்வுக்கு வழிகாட்டும் வங்கி
தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி!
தாய்மையின் தனிப்பரிவுடன் உங்கள் சேமிப்பு
எங்களிடம் பூரிப்புடன் வளர்கிறது!

உங்களது அனைத்து சேமிப்புகளுக்கும் ½%
கூடுதல் வட்டியும் கிடைக்கிறது.

மக்களுக்கேற்ற வங்கி—
தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி.

TNSC BANK

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிட்.,
233, என்.எஸ்.சி. போஸ் சாலை,
சென்னை-600 001

TNSC—*வாழ்வுக்கு வளமூட்டும் வங்கி*

TNSC BANK/166

# ஒற்றுமைக்குக் கோடிட்டுக் காட்டும் தென்கோடி







தமிழகத்தின் தென்கோடியில் வங்கக்கடலலையின் அரவணைப்பில் இருக்கும் இராமநாதபுரம் மாவட்டம், விண்ணளாவிய கோயிற் கோபுரங்கள், மாதா கோயில்கள், மசூதிகள் நிறைந்து சர்வசமய ஒற்றுமைக்குக் கலங்கரை விளக்கமாய்த் திகழ்கிறது. கி.பி.16-ம் நூற்றாண்டிலிருந்து இப்பகுதியில் செங்கோலோச்சிய மன்னரெல்லாம் சமயப் பொறைக்குச் சான்றாக இருந்தனர்.

இந்தியநாட்டின் சமயப் பெருமைகளைப் பார் முழுதும் அறிய பறை சாற்றச் சென்ற விவேகாநந்தரின் ஆன்மீகப் பயணத்திற்கு ஆதரவளித்த அரசரும் இங்கே தான் ஆட்சிபுரிந்தார். இன்னும் சற்றுத் தெற்கே முழக்கமிடும் முக்கடல் சங்கமத்திலே முகிழ்த்துள்ள விவேகானந்தர் நினைவகம் இந்தியாவின் ஆன்மீக, பண்பாட்டுப் பெருமைகளைச் சப்தமின்றி ஒலித்துக் கொண்டிருக்கிறது.

**இராமேசுவரம்**

உலக முழுதும் வாழும் இந்துக்களை ஈர்க்கும் புகழ் வாய்ந்த புண்ணியத்தலம் இராமேசுவரம், இங்குள்ளதோர் கடற்கரைப்பட்டினம், இலங்கைப் போரில் இணையில்லா வெற்றி கண்டபின் இங்கே இராமன் வழிபட்ட இராமநாதசுவாமிக்குக் கங்கையின் புனிதநீரால் நாடோறும் அபிடேகம் நடக்கிறது. இது போலவே தென்னகத்திலிருந்து வடக்கே காசிக்குச் செல்லும் பக்தரெல்லாம் இராமேசுவரத்தின் புனிதநீரை எடுத்துச்சென்று காசி விசுவநாதரை வழிபடுகிறார்கள். அறிவாலும் உணர்வாலும் ஒற்றுமை காண்கிற தேசத்தின் பெருமைக்கு எடுத்துக்காட்டு இது. இந்துக்கள் மட்டுமல்ல; இசுலாமிய அன்பர்களும் இராமநாதருக்குச் சேவை புரிகின்றனர். ஆண்டுதோறும் நிகழும் இராமநாதரின் தெப்போற்சவத்திற்கு அவர்கள் படகுகளைத் தந்து சமய ஒருமைப்பாட்டுக்குச் சான்று பகர்கின்றனர்.

மனித வர்க்கத்தின் ஆதிபிதாவாக இசுலாமியர்கள் போற்றும் ஆதம் நபியின் இருமக்கள் ஆபிலும் காபிலும். அவர்களை அடக்கம் செய்த மசூதி இராமேசுவரம் தொடர்வண்டி நிலையத்திற்கு அருகில் உள்ளது. இம்மசூதிக்காக புதுக்குளம் என்னும் கிராமத்தைச் சாசனமாகத் தந்தவர் 1745-ல் இராமநாதபுரத்தை அரசாண்ட முத்துக்குமார விஜய ரகுநாத சேதுபதி. சேதுபதி மன்னரின் மதியமைச்சராய் இருந்தவர்தான் வரையாது வழங்கிய வள்ளல் சீதக்காதி என்ற சையத் காதர். இந்து அரசரும் இசுலாமிய அமைச்சரும் இணைபிரியாச் சோதரராய் வாழ்ந்து, மக்களுக்கு, பல நன்மைகள் புரிந்தனர்.

> அறிவாலும் உணர்வாலும் ஒற்றுமை காண்கின்ற தேசத்தின் பெருமைக்கு ஓர் எடுத்துக்காட்டு இராமேசுவரம். இங்கு இந்துக்கள் மட்டுமல்ல இசுலாமிய அன்பர்களும் இராமநாதருக்குச் சேவை புரிகின்றனர்.
>
> இந்துக்களும் இசுலாமியர்களும் இனவேற்றுமையின்றி வழிபடும் மற்றோர் இடம் ஏர்வாடி தர்கா.

**ஏர்வாடி தர்கா**

இந்துக்களும்இசுலாமியர்களும் இனவேற்றுமையின்றி வழிபடும் மற்றோர் இடம் ஏர்வாடியில் இருக்கும் எழிலார்ந்த தர்கா. இந்த தர்காவில்தான் குலுப் சுல்தான் சையது இப்ராகிம் சாகிப் ஒலியுல்லா நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளார். இங்கு வந்து வழிபடுபவர்களுக்கு உடற்பிணியும் உள்ளப்பிணியும் ஒருங்கே மறைந்தோடுகின்றன என்ற பரவலான நம்பிக்கை இன்றும் உள்ளது. இந்த தர்காவின் அறப்பணிக்கு இராமநாதபுரம் மன்னர் பெரியமாயக்குளம் என்ற கிராமத்தை 1739-ல் சாசனமாக்கினார்.

**ஓரியூர் மாதாகோயில்**

மணியோசை முழங்கும் மாதா கோயில்களுக்கும் பஞ்சமில்லை இங்கே. கி.பி.1663-ல் இந்தியா வந்த அருட்தந்தை அந்தோணி புரோன்சாவின் ஆசியால் கிறித்துவ சமயம் இங்கே கிளைத்துத் தழைத்தது. ஏசுவின் புகழ் இயம்ப ஏராளமான தேவாலயங்கள் ஏற்படுத்தப்பட்டன. அவற்றுள் அருளானந்தசாமி என்ற அருட்தந்தை ஜான்டி பிரிட்டோ உயிர்த்தியாகம் செய்த ஓரியூர் மாதாகோவில் இன்று ஒரு புண்ணியத்தலமாய் விளங்குகிறது.

இங்குள்ளோர் ஓரியூர்ச் செம் மண்ணை, பிணி நீக்கும் பெரு மருந்தாய் நம்புகிறார்கள். இராமநாதபுரம், கீழக்கரை, முத்துப் பேட்டை, சூராணம், பாம்பன் ஆகிய இடங்களில் இருக்கும் மாதா கோவில்களும் இத்தகு மகிமை பெற்றவையே.

**சேதுக்கரை**

'சமுத்திரப்பாலம்' என்னும் பொருள்படும் சேது என்ற சொல்லைத் தாங்கி சேதுக்கரை என்றே வழங்கப்படுகிறது இராமநாதபுரக் கடற்கரை. இங்கிருந்து தான் இராமன் கடல்தாண்டி இலங்கைக்குச் சென்றான். அனும, சுக்ரீவர்களின் தலைமையில் வானரசேனை கட்டியதாகச் சொல்லப்படும் கருங்கற்பாலம் கடற்கரையைத் தாண்டி இரண்டு கிலோமீட்டர் தொலைவில், கடலினடியில் இன்றும் காணப்படுகிறது.

புத்திரபாக்கியம் வேண்டி தசரத சக்கரவர்த்திவழிபட்டதாகச் சொல்லப்படும் ஆதிஜகந்நாதர் ஆலயம் இந்தக் கரையில்தான் இருக்கிறது. சீதையைப் பிரிந்த இராமன் நற்செய்தி வேண்டி தர்ப்பைப் பரப்பில் தவமிருந்ததும் இங்கேதான்.

இத்தகு பெருமைவாய்ந்த இப் புண்ணிய பூமிக்கு சுற்றுலாப் பயணிகளும் பக்தர்களுமாக வருகின்றவர்களின் எண்ணிக்கை கணக்கிடலங்காது. சமயப்பற்றுடைய எல்லா இனத்தினரையும் ஒருங்கிணைக்கும் கோயிற்கோபுரங்கள், மசூதிகள், மாதா கோவில்கள் எங்கணும் நிறைந்து சர்வ சமய ஒற்றுமைக்குப் பிரதிபலிக்கின்றன. விரிந்து பரந்த இந்திய நாட்டின் பழம்பெருமைக்கும் பண்பாட்டுச் சிறப்புக்கும் ஒற்றுமை உணர்வுக்கும் இராமநாதபுரம் ஓர் உருவகமாய் விளங்குகிறது.

**புகழ் பெற வேண்டும் என்பதற்காக எந்த ஒரு காரியத்தையும் செய்யக்கூடாது; நல்ல ஒரு லட்சியத்திற்காகக் கடமை உணர்வோடு மேற்கொள்ளப்படும் எந்த ஒரு செயலுக்கும் நிச்சயம் புகழ் கிடைக்கும்.**

**—மாண்புமிகு முதல்வர்
டாக்டர் எம்.ஜி.ஆர்.**

## அறிவியல் சாளரம்

# மனிதனின் பேச்சைப் புரிந்துகொள்ளும் கம்ப்யூட்டர்

**பூமியின் நீர்வளம்**

பூமியில் உள்ள நீர் வளம் முழுவதும், கடல்கள் உள்பட, அவ்வப்போது மதிப்பிடப்பட்டு வருகிறது. தற்போது பூமியில் உள்ள நீரின் அளவு 1,386,000,000 கன கிலோ மீட்டர் ஆகும்.

உலகில் பெய்யும் மழையின் அளவு ஏற்கெனவே கணக்கிடப் பட்டிருந்ததைக் காட்டிலும், மூன்றில் ஒரு பங்கு அதிகமாக இருக்கிறது என்பது இப்போது தெரியவந்துள்ளது. அதாவது 10 பால்டிக் கடல்களின் அளவு உலகில் பெய்யும் மழையளவு அதிகரித்திருக்கிறது. பூமியில் உள்ள உயிர் இனங்களில் உள்ள நீரின் அளவு 1,120 கன கிலோ மீட்டர் எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

**சுற்றுச் சூழல் மாற்றங்களை உணரும் நுண்ணிய மீன்**

சோவியத் பைகால் ஏரியில் கிரில் எனப்படும் நுண்ணிய மீனினம் உயிர் வாழ்கிறது. மனித நடவடிக்கைகளால் ஏரிக்கும் அதன் சுற்றுச் சூழலுக்கும் ஏற்படும் பாதிப்பை அறிவதற்கு இந்த மீனினம் உதவி செய்கிறது.

இந்த ஏரியில் இவை கோடிக் கணக்கான ஆண்டுகளாக உயிர் வாழ்கின்றன. இவற்றைச் சாதாரண கண் கொண்டு பார்க்க முடியாது. இது ஒரு மில்லி மீட்டர் நீளமுடையது. ஏரியில் உள்ள பாக்டீரியாக்களையும், பாசிகளையும் சாப்பிட்டு இது ஏரி நீரைத் தூய்மைப்படுத்துகிறது. சுற்றுப் புறச் சூழலில் ஏற்படும் மாற்றங்களை இந்த மீனினம் உணர்ந்து பிரதிபலிக்கின்றன என விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

**இருதய கோய்களைக் கண்டறிய புதிய முறை**

இருதய நோய்களைக் கண்டறிவதற்குப் பயனுள்ள புதிய முறை ஒன்றைச் சோவியத் மருத்துவ விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர். இந்த முறையின் மூலம் இரத்த அழுத்த நோய், இஸ்கிமியா, மாரடைப்பு மற்றும் இருதயநோய்களைச் சில மணித்துளிகளில் டாக்டர்கள் கண்டுபிடிக்க முடியும். டேப் ரெக்கார்டரில் பதிவு செய்யப்பட்ட ஆரோக்கியமான இருதயத்தின் துடிப்பு ஒரு குறிப்பிட்ட ஒலியை ஒத்திருக்கிறது. இந்த ஒலியைக் கம்ப்யூட்டரில் உள்ள நாடாவில் பதிவு செய்து இருதய நோய்களைக் கண்டுபிடிக்கிறார்கள்.

**அறுவைச்சிகிச்சை இல்லாமல் மகப் பேற்றுக்கு உதவும் புதிய மருந்து**

அறுவைச் சிகிச்சைக்குஇடமில்லாமல் எளிதான மகப்பேற்றுக்கு உதவக்கூடிய புதிய மருந்து ஒன்று சோவியத் நாட்டில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 'புரோஸ்டின்' எனப்படும் இந்தப் புதிய மருந்தின் உற்பத்தி தற்போது பெருமளவில் துவங்கியுள்ளது.

'புரோஸ்டினான்' புரோஸ்டாகிளாண்டின்ஸ் என்ற வகையைச் சேர்ந்தது. இந்தப் புதிய மருந்தின் கண்டுபிடிப்பு மருந்தியல் துறையில் ஒரு புரட்சியை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த மருந்து வேறு பல நோய்களுக்கும் பயனுள்ளதாக இருக்கிறது. இரத்த அழுத்த நோயைக் குறைப்பதற்கு, இருதயத்தின் செயல்பாட்டை மேம்படுத்துவதற்கு, நோயினால் பாதிப்பின்மையை அதிகரிப்பதற்கு இந்த மருந்து பயன்படுகிறது.

**மனிதனின் பேச்சைப் புரிந்து கொள்ளும் கம்ப்யூட்டர்**

மனிதனின் பேச்சைப் புரிந்து கொள்ளும் 'எலெக்ட்ரானிக் கம்ப்யூட்டர்' அமைப்பு ஒன்று வடிவமைக்கப்பட்டுள்ளது. லெனின்கிராடில் உள்ள, சோவியத் விஞ்ஞானப் பேரவையின் தானியங்கித்துறை மற்றும் தகவல்துறை மற்றும் அறிவியல் ஆராய்ச்சி நிலையம் இதனை உருவாக்கியுள்ளது. நவீன, ஐந்தாவது தலைமுறைக் கம்ப்யூட்டர்களில், இந்த எலெக்ட்ரானிக் கம்ப்யூட்டர் சாதனம் ஒரு முக்கிய அம்சமாக விளங்கும்.

**—சோவியத் சிறப்புக் கட்டுரைகள்**

# திருச்சியில் செய்தி நிலையம்



**ப. சாமிநாதன்**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.**

தமிழக அரசின் செய்தி-மக்கள் தொடர்புத்துறை மூலம் தற்போது சென்னை, மதுரை, தஞ்சாவூர் ஆகிய இடங்களில் செய்தி நிலையங்கள் இயங்கிவருகின்றன.

அரசின் திட்டங்கள், அரசின் முக்கிய கொள்கைகள், மற்றும் வளர்ச்சித் திட்டங்களின் சாதனைகள் இவற்றைப் பொதுமக்கள் நன்கு அறிந்து கொள்ளும் வகையில், தேவையான குறிப்பேடுகளையும், செய்திகளையும் பொது மக்களுக்கு வழங்குவது இந்தச் செய்தி நிலையங்களின் முக்கியப் பணியாகும்.

இதன் அடிப்படையில் 7வது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மேலும் 12 செய்தி நிலையங்கள் 12 மாவட்டங்களில் தொடங்கப் பட வேண்டுமென்று கொள்கை அளவில் மேற்கொள்ளப்பட்டு, சென்ற நிதியாண்டில் (1986-87) திருச்சியிலும், கோவையிலும் இரண்டு புதிய செய்தி நிலையங்களைத் தொடங்க அரசு அனுமதி வழங்கியது. இச்செய்தி நிலையங்கள் அந்தந்த மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலரின் கீழ் இயங்கி வரும்.

திருச்சிராப்பள்ளியில் இப்புதிய செய்தி நிலையத்திற்கு வருடத்திற்கு தொடர்செலவினமாக ரூ. 48,000, தொடராச் செலவினமாக ரூ 51,630 நிதி ஒதுக்கிடு செய்யப்பட்டுள்ளது.

இச்செய்திநிலையத்தில் உள்ள நூலகத்திற்கு ரூ 15,000-க்கு புதிய நூல்கள் வாங்க அனுமதிக்கப்பட்டு, இயக்குநர் ஆணைப்படி ரூ 7708-க்கு முக்கியத் தலைவர்களின் வரலாறு, இலக்கியம், மருத்துவம், சரித்திரம், கலை மற்றும் நாவல் போன்ற பல வகையான புத்தகங்கள் வாங்கப் பட்டுள்ளன.

மேலும் அறிவியல், செய்திமக்கள் தொடர்புத்துறைக்குக் குறிப்புகள் தயார் செய்யத் தேவைப்படும் புத்தகங்கள், கட்டுரைகள், சிறந்த நாவல்கள், தலைவர்கள் வரலாறு போன்ற புத்தகங்கள் மாதந்தோறும் ரூ 200-க்கு மிகாமல் வாங்கவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் அமையப்பெற்ற செய்தி நிலையத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு வ. விஸ்வநாதன், இ.ஆ.ப. அவர்கள் 20.4.'87 அன்று திறந்துவைத்தார்.

அரசின் சாதனைகள், வளர்ச்சித் திட்டங்கள், சத்துணவு போன்றவற்றை விளக்கும் திரைப் படங்களை நகர்ப்பகுதிகளில் பொதுமக்களுக்குத் திரையிட புதிதாக வாங்கப்பட்ட 16 மி.மீ திரைப்படக்கருவியை மாவட்ட ஆட்சித்தலைவர் இயக்கி வைத்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் பொதுமக்களிடம் குறை கேட்கிற வண்ணத்திரைப்படம் காட்டப்பட்டது.

## உங்களுக்குத் தெரியுமா?

* இந்தியச் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு 7 கோடியே 26 லட்சம் ரூபாய் இந்த ஆண்டில் இலாபம் கிடைத்திருக்கிறது. சென்ற ஆண்டைக் காட்டிலும் இது 2 கோடியே 20 இலட்சம் ரூபாய் அதிகமாகும். அந்நியச் செலாவணி சென்ற ஆண்டை விட சுமார் 4 கோடி ரூபாய் அதிகமாகும். இந்தியச் சுற்றுலாத் துறைக்குச் சொந்தமான ஓட்டல்களின் மூலம் இந்த ஆண்டு 4 கோடியே 37 இலட்சம் ரூபாய் கிடைத்திருக்கிறது!

* சென்னை மாநகரில் 114 நாட்கள் நடைபெற்ற சுற்றுலா தொழில் பொருட்காட்சியில் அமைக்கப்பட்டிருந்த சிறுசேமிப்பு அரங்கில் மட்டும் ரூ 17.10 கோடிக்குச் சேமிப்புப் பத்திரங்கள் விற்பனையாகியிருக்கின்றன!

அமெரிக்க வல்லரசு. 22.4.87 அன்று பூமிக்கடியில் அணுகுண்டு சோதனையொன்றை நெவேடாவில் நடத்தியது. 1951 ஆம் ஆண்டுக்குப் பிறகு அமெரிக்கா நடத்திய 664வது அணுகுண்டு சோதனை இது. இந்த ஆண்டில் அவர்கள் நடத்திய 5வது சோதனை! 20 ஆயிரம் கிலோ எடையுள்ள இந்த அணுகுண்டை பூமிக்கு அடியில் 300 மீட்டர் ஆழத்தில் வெடிக்கச் செய்து இந்தச் சோதனை நடத்தப்பட்டிருக்கிறது!

* முதன்முதலாக வடதுருவத்தை மோட்டார் சைகிள் மூலமே சென்று அடைந்திருக்கிறார் சின்ஷிக சர்மா என்ற ஜப்பானியர்!

* மனிதனுடைய மண்டை ஓட்டைத் திறக்காமலே மூளை அறுவைச் சிகிச்சை செய்யும் நவீன முறை ரஷ்ய விஞ்ஞானிகளால் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. கதிர்வீச்சு முறையில் இது செய்யப்படுகிறது!

* ஐரோப்பாவில் உள்ள சுவிஸ் கிராமம் மிகவும் பழமையானதாகக் கருதப்படுகிறது. கிறிஸ்து பிறப்பதற்கு 3867 ஆண்டுகளுக்கு முன்பு-அதாவது ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றியதாம் அக் கிராமம்!

* கிரிக்கெட் விளையாட்டில் உலகச் சாதனைகள் புரிந்தார் என்பதற்காக, சுனில் கவாஸ்கர் மற்றும் அவர் குடும்பத்தாருக்கு முதல் வகுப்பு ஏர்-கண்டிஷன் இலவச ரயில் பாஸ் வசதி அளிக்கப்பட்டிருக்கிறது. இது ஒரு ஆயுள்காலச் சலுகை என்பது குறிப்பிடத்தக்கது!

# சோளகப் பழங்குடிகள்

வளர்ச்சியில் முன்னேறிவரும் பெரியார் மாவட்டத்தில், சோளகர், உராளி, இருளர், ஆகிய பழங்குடிகளும், இலம்பாடிகள் எனப்படும் பின்தங்கியவரும், மலைகளிலும், காட்டின் வெளிகளிலும் வாழ்ந்து வருகின்றனர். இவர்களில் சோளகப் பழங்குடிகள் மிகவும் பழமைவாய்ந்தவர்கள். இவர்கள் தமிழ்நாட்டின் பதினேழு பழமைப் பழங்குடியினருள் ஒருவராவர். இவர்கள் மேலும் உழைப்பு. உறுதி, உண்மை, தீங்கிழையாமை போன்றவற்றிற்குப் பேர்போனவர்கள். இவர்களின் மொத்த எண்ணிக்கை சுமார் 5000ஆகும். இவர்கள் முக்கியமாக பெரியார்



மாவட்டத்தின் வடக்கு, வடமேற்கைச் சார்ந்த கருநாடக மாநில ஓரப்பகுதிகளில், பதினோரு ஒழுங்குள்ள குடியிருப்புகளிலும், இருபத்துமூன்று சரிவராத குடியிருப்புகளிலும் வாழ்ந்து வருகின்றனர். குறிப்பாக பவானி வட்டத்தில் சோளகனை, தாமரைக்கரை, பர்கூர், ஊசிமலை, ஆகிய காட்டுமலை கிராமங்களிலும், சத்தியமங்கலம் வட்டத்தில் இட்டவை, தரசலட்டி, ஆசனூர், தலைமலை, ஆகியகிராமங்களிலும்பரவலாகக் காணப்படுகின்றனர். கிழக்குத் தொடர்ச்சி மலையின் 3000அடி உயரத்தில் ஐம்பது கிலோ மீட்டர் தூரத்திலுள்ள பர்கூர் மலைக் காட்டுக் கிராமங்களை, பவானி, அந்தியூர் வழியாக பேருந்துமூலம் சென்றடையலாம். பர்கூர் மலைக் காடுகளில் யானை, சிறுத்தை, மான், காட்டெருமை, ஆகிய மிருகங்கள் காணப்படுகின்றன.

பூர்வீக கதை ஒன்று சோளகர்களின் சரித்திரத்தையும். வரலாற்றையும் நன்கு விளக்குகிறது. தாளவாடி அருகிலுள்ள கடேசால் மலையில் பல ஆண்டுகளுக்கு முன்பு இரண்டு சகோதரர்கள் வாழ்ந்து வந்ததாகவும், அவர்களை சவணன் என்ற அரக்கன் பலவந்தப்படுத்தி, காராயனை ஒரு இடையனாக மாற்றி, மாதேஸ்வரனாகிய மற்றவனைச் சிறைப்படுத்தி பல கொடுமைகளை இழைத்து, துன்புறுத்தி வந்தானாம். கடைசியில் ஒரு நாள் கிருஷ்ணபகவானால் மாதேஸ்வரன் விடுவிக்கப்பட்டு, அவனால் அவ்வரக்கன் கொலை செய்யப்பட்டு, இச்செயலால் தன் சகோதரன் காராயனால் துரத்தப்பட்டு, இறுதியாக கொத்திபோலி என்ற மலையில் இருவரும் ஒப்புரவு செய்து கொண்டதாக இக்கதை சொல்லுகிறது. காராயனுக்குப் பிறந்தவர்களே சோளகரும் உராளியுமாவர். மாதேஸ்வரனுக்குப் பிறந்தவர்களே லிங்காயத்தவர்கள். உராளிகள் கேரளத்திலும் தமிழகத்தில் கோவையிலும், பெரியார் மாவட்டத்தில் பவானிவட்டத்தில் காகாயனூர், தொட்டக்கொம்மை,வேதபாறை ஆகிய கிராமங்களிலும் காணப்படுகின்றனர். கழுத்தில் லிங்கம் அணிந்துள்ள லிங்காயத்தவர்கள், மைசூரிலிருந்து, தருமபுரி, மற்றும் பெரியார் மாவட்டங்களுக்கு (பவானிவட்டம்) நாளடைவில் குடியேறினர்.

பவானி வட்டத்தில் சோளகர்களின் குடியிருப்புகளில் பர்கூர், ஊசிமலை, தாமரைக்கரை, ஆகியவை பெயர் பெற்றவை. பர்கூர் கிராமத்தின் ஒரு பகுதியில் பதினைந்து குடும்பங்களைக் கொண்ட சோளகர்களின் குடியிருப்பு காணப்படுகிறது. இப்பகுதியில் நம்மைக் கவருவது, சோளகர்களின் துவக்கப்பள்ளியே ஆகும். இங்கு சோளகரும் இதர வகுப்பினரும் கல்வி பயிலுகின்றனர். இவர்கள் தங்க விடுதியும் உண்டு. இப்பகுதியில் வனத்துறையிலிருந்து கடனாகப்பெறப்பட்ட நிலங்களில் கேழ்வரகு. அவரை போன்ற பயிர்களை சோளகர் பயிரிடுகின்றனர்.

**நே. தேவசகாயம்**
**காப்பாட்சியர், மானிடவியல்,**
**அரசு அருங்காட்சியகம்,**
**சென்னை.**

பர்கூரிலிருந்து பத்துக்கல் தொலைவிலுள்ளதே ஊசிமலை சோளகர் குடியிருப்பாகும். புல் மற்றும் ஓடுகள் கொண்ட வீடுகளில் சுமார் இருபது குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர். இவ்வீடுகள் யாவும் அரசினால் கட்டப்பட்டவைகளாகும். இம்மலை பகுதி ஊசி போன்று கூர்மையாக, செங்குத்தாக இருப்பதால் இக்கிராமத்திற்கும் ஊசிமலை என்ற பெயர் வந்துள்ளதாகக் கூறப்படுகிறது. இக்காட்டின் சமப்பகுதிகளில் கேழ்வரகு. மொச்சை பயிரிடுவதுடன் சில சோளகர்கள் கூலி வேலையும் செய்கின்றனர். சிலர் காடுகளுக்குச் சென்று சிறிய இரும்புக் கடப்பாறையால் நிலத்தைக் கிளறி, கிழங்குகளைத் தோண்டி உணவைச் சேகரிக்கின்றனர். பலர் களை எடுக்கின்றனர். இவர்களின் முக்கிய உணவு களி, மொச்சை, மற்றும் வேகவைத்த காட்டுக் கிழங்குகளாகும். இவர்களில் சிலர் காட்டுக்கோழி, கேலையாடு பறக்கும் பூனை, காட்டுக்கருங் குரங்கு, முயல், முள்ளம்பன்றி, ஆகிய விலங்குகளை வலை

போட்டுப் பிடிக்கின்றனர். இவற்றின் இரத்தத்தை உடனடியாகக் குடித்து ஒரு கிலோமீட்டர் தூரம் ஓடி பெலன் பெறுகின்றனர்.



வயது வருவதற்கு முன்பே சுமார் 10 வயதிலே பெண்கள் திருமணம் செய்துகொள்ளுகின்றனர். மனைவி ஓடிவிட்டால் மறுமணம் செய்து கொள்ளலாம். இரண்டு அல்லது மூன்று மனைவிகளும் ஒருவருக்கு உண்டு. இவர்களிடம் திருமணமுறை கட்டாயமானதாகக் காணப்படவில்லை,

பவானி வட்டச் சோளகர் பேசும் மொழி கன்னடமும் தமிழுமாகும். சத்தியமங்கலம் வட்டச்சோளகர் பேசுவது கன்னடமும் மலையாளமுமாகும். நமது கிராமத்தவரைப் போன்றே, சட்டையும் வேட்டியும் இவர்கள் அணிகின்றனர். சோளகர், நாட்டு வைத்தியத்தில் அதிகப் பற்றுக் கொண்டுள்ளவர்கள். இவர்கள் தங்கள் உடைகிழியும் வரையில் அவற்றை அணிந்திருப்பர். இவர்கள் தலையில் எண்ணெய் இராது. பேன் அதிகம் உண்டு. இறந்தவர்களைத் தொட்டில்கட்டி எடுத்துச்செல்வர். வியாதியஸ்தர்களையும் தொட்டில் கட்டித் தூக்கிச் செல்வர். மாதத்திற்கு ஒருமுறை ஆற்றில் குளிப்பர். இது குடும்பமாக நடைபெறும். சோப்பிற்குப் பதில் கல்லினால் உடம்பைத் தேய்த்துக் குளிப்பர். ஆடவர் எப்பொழுதும் கம்பளித் துணியை மேலே போட்டிருப்பர். மலையில் சதா நடந்து செல்வதால் ஆடவர் கூன் விழுந்ததுபோலக் காட்சியளிக்கின்றனர். இவர்கள் கடின உழைப்பாளிகள்.

பவானி வட்டச் சோளகர்களின் மூன்றாம் குடியிருப்பு தாமரைக்கரையாகும். இக்குடியிருப்பு பர்கூரிலிருந்து சுமார் ஒன்பது கல் தொலைவில் பேருதுப்பாதையின் இருபுறமும் அமைந்துள்ளது. ரோட்டின் மேல் வனநிலத்தில் ஐந்து வீடுகளும், கீழ்ப்பள்ளத்தில் பத்து வீடுகளும் கொண்ட அரசினால் கட்டப்பட்ட இக்குடியிருப்பில் சோளகர் எளிய வாழ்க்கையை மேற்கொண்டுள்ளனர். இப்பகுதியில் தாமரை மலர் அதிகமுண்டு. கரையில் இக்குடியிருப்பு அமைந்துள்ளதால் தாமரைக்கரை என்றாயிற்று. கன்னடாவில் கரை என்றால் குளம் அல்லது பள்ளம் என்று பொருள்படும். இச்சோளகர்கள், சுமார் நாற்பது ஏக்கர்வனத்துறை நிலத்தைக் கடனாகப் பெற்று, கேழ்வரகு, அவரை முதலியவை பயிர் செய்கின்றனர். இக்கடனுக்குப் பதிலாக இவர்கள் வனத்துறையில், வனத்தைப் பாதுகாக்கவும், செடி, நாற்று எடுத்தல், வனத்தைச் சுத்தம் செய்தல், வனப்பாதையைச் செவ்வைபண்ணல், விறகு எடுத்தல், காய்ந்த சந்தன மரங்களைப் பிடுங்குதல் கிணற்றிலிருந்து நீரைப்பாய்ச்சல் ஆகிய வேலைகளைச் செய்கின்றனர்.

சோளகர்களின் முன்னேற்றத்திற்காகச் சோளகர்கள் சங்கம் பர்கூரில் பணியாற்றுகிறது. இவர்களுக்கு விவசாயத்தில் உதவி புரிய பர்கூரில் அமைந்துள்ள கனரா வங்கி பலவகைகளில் உதவுகறது. பட்டா நிலத்திற்கு உழவு மாடுகளை வாங்க முன்பணமும், பணமானியமும் இதன் மூலம் அளிக்கப்படுகிறது. நடமாடும் கால்நடை மருந்தகம் வாரம்இருமுறை இப்பகுதிகளுக்கு அந்தியூரிலிருந்து வந்து செயல்படுகிறது. கல்வி, பொதுச்சுகாதாரம் போன்றவைகளில் நல்ல முறையில் முன்னேற்றம் அடைய நடவடிக்கை எடுக்கப்படுவதாகத் தெரிய வருகிறது. உயர்நிலைப் பள்ளி ஒன்றும், ''லாம்பு'' கூட்டுறவுச் சங்கமும் விரைவில் அமைக்கப்பட உள்ளதாகத் தெ தெரியவருகிறது.

இப்படியாக வாழ்க்கையில் வளர்ந்துவரும் சோளகர்களின் இருப்பிடங்களாகிய பர்கூர், தாமரைக்கரை, ஊசிமலை ஆகியவைகளைக் கண்டு, இச்சோளகர்களின் கைவினைப் பொருள்களான காட்டுக்கோழியைப் பிடிக்கும் வலை, மூங்கில் தண்ணீர் பாத்திரம், சொரக்காய் பாத்திரம், மூங்கில்முறம், வெட்டும் கத்தி, சிறியகடப்பாறை (கிழங்கைத்தோண்ட) புல்லாங்குழல், மத்தளம் ஆகிய ஒரு டஜன் பொருள்களை சென்னை அரசு (மானிடவியல் பிரிவு) அருங்காட்சியகத்திற்குப் பெற, தக்க வாய்ப்பும், தருணமும் கிடைத்தது.



# தஞ்சை மாவட்டத்தில்
# ஆதிதிராவிடர் நலப்பணிகள்

தீண்டாமையென்பது சாதிப் பாகுபாடும்பொருளாதார ஏற்றத் தாழ்வும் இணைந்து சமுதாயத்தில் தோற்றுவித்த கொடிய நோயாகும். மனித வாழ்வில் களங்கமாய்த் திகழ்ந்திடும் இம் முறை, மனிதாபிமானத்தையே அழித்திடும் பெருந்தீமையுமாகும். இதனை ஒழிக்கவும், உரிமை இழந்த மக்களின் வாழ்வில் ஒளி விளக்கு ஏற்றவும் அண்ணாவின் அரசு செயலாற்றி வருகின்றது. நாடு தழுவிய இந்தப் பெரும் புரட்சியில் தஞ்சை முன்னணியில் நிற்கிறது.

தஞ்சையின் மொத்த மக்கள் தொகையில் 23.2 விழுக்காடு தாழ்த்தப்பட்ட ஆதி திராவிட மக்களாவர். தஞ்சை மாவட்டத்தின் மொத்த மக்கள் தொகை 40.64 இலட்சம் என்றால், அதில் ஆதிதிராவிடர் தொகை 9.43 இலட்சமாகும்.

நாட்டின் வளம் பெருக உரமாகப் பயன்படும் இந்த உழைக்கும் வர்க்கத்தின் நலம் பேண— ஆதி திராவிட மக்களின் வாழ்வில் மறுமலர்ச்சியைத் தோற்றுவிக்க அரசு பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது.

தஞ்சை மாவட்டத்தில் 1977-78 முதல் 1985-86 வரை ஆண்டுதோறும் சுமார் ரூ. 1.50 கோடி அளவிற்குச்செலவு செய்து ஆதி திராவிடர் நலப்பணிகளை அரசு நிறைவேற்றி வந்துள்ளது. 1986-87-ஆம் ஆண்டிற்கு இந்த ஒதுக்கீடு ரூ. 2.35 கோடியாக உயர்ந்துள்ளது. ஒதுக்கப்படும் நிதியில் பெரும்பகுதி இந்தச் சமுதாயத்தின் அறிவு வளர்ச்சிக்காகவும், கல்வி முன்னேற்றத்திற்காகவும் செலவழிக்கப்படுகிறது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் 155 ஆதிதிராவிடர் நலத் தொடக்கப் பள்ளிகளும், 6 நடுநிலைப்பள்ளிகளும், 6 உயர்நிலைப் பள்ளிகளும், ஒரு மேல் நிலைப் பள்ளியும் செயல்பட்டு வருகின்றன. இந்தப் பள்ளிகளில் மொத்தம் 28,240 மாணவர்கள் பயின்று வருகிறார்கள்.



மாணவ, மாணவியர் தங்கிப் படிப்பதற்கு வசதியாக இம் மாவட்டத்தில் 70 விடுதிகள் இயங்கி வருகின்றன. 1985-86-இல் இந்த விடுதிகளின் பராமரிப்பிற்காக ரூ. 28.57 இலட்சம் செலவழிக்கப்பட்டது. 1986-87 இல் இதற்கான செலவு ரூபாய் 36.51 இலட்சமாக உயர்ந்துள்ளது.

மாணவ, மாணவியர் பள்ளிக்கு ஒழுங்காக வருவதை ஊக்குவிக்கும் வகையில் செயல்படுத்தப்படும் முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின் கீழ் 1985-86-ஆம் ஆண்டு ரூ. 9.71 இலட்சம் செலவழிக்கப்பட்டது. 1986-87-இல் இத்திட்டச் செலவு ரூ. 13.72 இலட்சமாக உயர்ந்துள்ளது. இதன் மூலம் 25,470 குழந்தைகள் பயன் பெறுகிறார்கள். 1986-87இல் ஆதி திராவிடர் நலத்துறையின் மூலம் கல்வி உதவித் தொகையாக ரூ. 61 இலட்சம்வழங்கப்பட்டுள்ளது. 33,000 மாணவர்கள் பயன் பெற்றுள்ளார்கள்.

சாதிப் பாகுபாடுகள் ஒழியவும் உயர்வு, தாழ்வு என்னும் உணர்ச்சி மறையவும் துணை புரிவன கலப்பு மணங்கள். இதனை ஊக்குவிக்க உதவிகளையும், வெகுமதிகளையும் அரசு வழங்கி வருகின்றது. தஞ்சாவூர் மாவட்டத்தில் 1986-87-இல் 31 கலப்பு மணத் தம்பதிகளுக்கு- உதவிகளும், வெகுமதிகளும் வழங்க ரூ. 1,33,300 செலவழிக்கப்பட்டுள்ளது.

ஆதிதிராவிட மக்கள் பொருளாதார உதவிகள் பெற்று தங்களின் வாழ்வு மேம்பாட்டிற்கு வலுவான அடிப்படைகளை உருவாக்கிக் கொள்வதற்கு ஏதுவாகப் பல்வேறு திட்டங்களின் வாயிலாக வங்கிக் கடன் வசதியும், மான்யங்களும் வழங்கப்படுகின்றன. தஞ்சாவூர் மாவட்டத்தில் 1986-87இல் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 21,099 ஆதிதிராவிடர்கள் பயன் பெற்றுள்ளார்கள். இவர்களுக்கு வங்கிக் கடனாக ரூபாய் 225.30 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இதில் அரசு மான்யம் ரூ. 122.65 இலட்சமாகும். அதைப் போன்று நகர்ப்புறச் சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ், தாட்கோ மூலம் ரூபாய் 13.20 இலட்சம் வங்கிக் கடனாகப் பெற்றுத்தரப்பட்டுள்ளது. இதில் அரசு மான்யம் ரூ. 6.60 இலட்சமாகும்.

கூட்டுறவு அமைப்புகளில் ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் பெருமளவில் சேர்ந்து பயன்பெறும் வகையில், அவர்கள் கூட்டுறவு அமைப்புகளில் சேருவதற்குச் செலுத்த வேண்டிய பங்குத்தொகையினை அரசே மான்யமாக வழங்கி வருகிறது. 1981-82 முதல் 1985-86 வரை இத்திட்டத்தின் கீழ் 11,641 ஆதி திராவிட விவசாயிகள் பயன் பெற்றுள்ளார்கள்.

தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள கும்பகோணம், தஞ்சாவூர் மத்தியக் கூட்டுறவு வங்கிகளோடு இணைந்த சேவைச் சங்கங்கள் மூலம் பங்குத்தொகை மான்யமாக ரூ. 11.64 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. 1986-87 இல் இம்மாவட்டத்தில் 1500 நபர்களுக்கு ரூ. 1.50 இலட்சம் பங்குத்தொகை மான்யமாக வழங்கப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர்களுக்கு வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கவும் குடியிருப்புகளுக்குச் சாலை வசதி செய்து தரவும், மயானப்பாதை அமைக்கவும் தேவையான நிலங்களை ஆர்ஜிதம் செய்ய, தஞ்சை மாவட்டத்தில் 1986-87இல் ரூ. 4.03 இலட்சம் செலவழிக்கப்பட்டுள்ளது. 366 நபர்களுக்கு வீட்டு மனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதனைத் தவிர தஞ்சாவூர் மாவட்டத்தில் 20 அம்சத்திட்டத்தின் கீழும், வறுமைக்கோட்டிற்கு கீழே வாழ்வோருக்கு உதவும் திட்டத்தின் மூலமும்1986-87இல் 10,008 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஏழைகளின் இல்லங்களில் இருளை அகற்றி ஒளி விளக்கு ஏற்றும் 'ஒரு விளக்குத் திட்டம்' என்கிற உன்னதத் திட்டத்தைத் தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் தஞ்சை மாவட்டத்தில் 65,882 குடிசைகளுக்கு மின்சார இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. இதன் வாயிலாகப் பயன் பெறுபவர்கள் ஆதி திராவிடப் பெருமக்கள்தான்.

**இரெ. மகாலிங்கம்**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர்**
**தஞ்சாவூர்.**

# துப்புரவுத் தொழிலாளர் நலம் பேண...

சென்னை மாநகரில் துப்புரவுப் பணியில் மாநகராட்சியைச் சேர்ந்த 10 ஆயிரம் ஆண், பெண் பணியாளர்கள் ஈடுபட்டு வருகிறார்கள். அழுக்கையும், குப்பையையும் சுத்தம் செய்வதே இவர்களின் அன்றாடப் பணியாய் இருப்பதால் இவர்களின் உடல் நலம் சீர்கேடடைய அதிக அளவில் வாய்ப்புள்ளது.

இத்தொழிலாளர்களின் உடல் நிலையைப் பரிசோதனை செய்து நோய் இருப்பின், அதற்கான சிகிச்சையை அளிக்க சென்னை மாநகராட்சியும் அரிமா சங்கமும் இணைந்து இலவச மருத்துவப் பரிசோதனை முகாம்கள் நடத்தின.

முதல் முகாம் 14.3.87 அன்று நுங்கம்பாக்கம் மாநகராட்சிப் பெண்கள் உயர் நிலைப்பள்ளியில் துவங்கியது. இதைத் தொடர்ந்து சென்னை நகரின் பல்வேறு பகுதிகளில் ஆறு வாரங்களுக்கு சனிக்கிழமை தோறும் பரிசோதனை முகாம்கள் நடத்தப்பட்டன.

மொத்தம் 8 ஆயிரத்து 543 தொழிலாளர்களுக்கு இம்மருத்துவப்பரிசோதனை நடத்தப்பட்டது. காசநோய், தொழுநோய், நீரிழிவு நோய், பல் சம்பந்தப்பட்ட நோய், கண் நோய், நரம்புக் கோளாறு, இருதய சம்பந்தப்பட்ட நோய் போன்றவற்றிற்கான பரிசோதனைகள் நடத்தப்பட்டு தக்க மருந்துகளும் சிகிச்சையும் அளிக்கப்பட்டன.

உடல் பரிசோதனை செய்து கொண்ட ஒவ்வொருவருக்கும் ஒரு மருத்துவக் குறிப்பேடு வழங்கப்பட்டது. புற்று நோய் போன்ற உயிர்க் கொல்லி நோய்களைத் தொடக்க நிலையிலேயே கண்டு பிடித்து சிகிச்சை மேற்கொள்ள தொடர்புடைய மருத்துவமனைகளுக்கு, சிலர் அனுப்பப்பட்டனர்.

பல் மருத்துவ நிபுணர் டாக்டர் பி. பி. இராஜன், கண் சிகிச்சை நிபுணர் டாக்டர் கோகுலநாதன், இருதய நோய் சிகிச்சை நிபுணர் டாக்டர் ஜெகன்னாதன் உட்பட அரசு பொது மருத்துவமனை, ஸ்டான்லி மருத்துவமனை, ஆர்.எஸ்.ஆர்.எம். மருத்துவமனை, காசம் மற்றும் மார்பு நோய்க் கழகம் ஆகியவற்றைச் சேர்ந்த மொத்தம் 100 டாக்டர்கள் துப்புரவுத் தொழிலாளிகளைப் பரிசோதித்தனர்.

இந்த முகாமின் நிறைவு விழா 28.4.87 அன்று சென்னை நேரு விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.

முற்பிறவியில் செய்த பாவத்தின் காரணமாகத் தான் தொழுநோய் ஏற்படுகிறது என்று உலக மக்கள் நெடுங்காலமாக நம்பி வந்தார்கள். ஹேன்சன் என்னும் நார்வே நாட்டு அறிவியல் அறிஞர், மைக்ரோ பாக்டீரியம் எலட்ரே என்னும் கிருமியினால்தான் இந்நோய் உண்டாகிறது என்பதை 1873ல் கண்டு பிடித்தார்.

விழாவில் கலந்து கொண்ட மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு ப.உ. சண்முகம் அவர்கள் மருத்துவப் பரிசோதனை நடத்திய டாக்டர்களுக்குச் சான்றிதழ்களும் நினைவுப் பரிசுகளும் வழங்கினார்.

அதிக அளவில் குழந்தைகளுக்குத் தடுப்பு ஊசி போட்ட வடபழனி தாய் சேய் நல விடுதிக்கு முதல் பரிசும், சி.எஸ். நகர் தாய் சேய் நல விடுதிக்கு இரண்டாவது பரிசும் செனாய் நகர் தாய் சேய் நல விடுதிக்கு மூன்றாவது பரிசும் வழங்கப்பட்டன. சுற்றுப்புறச் சுகாதாரத்தைச் சிறந்த முறையில் பாதுகாத்தமைக்காக முதலாவது வட்டத்திற்கு முதல் பரிசும், 4-வது வட்டத்திற்கு இரண்டாம் பரிசும் 13-வது வட்டத்திற்கு மூன்றாம் பரிசும் வழங்கப்பட்டன. குடும்ப நல அறுவைச் சிகிச்சை மேற் கொண்ட வியாசர்பாடி குடும்ப நல நிலையம் முதல் பரிசும், புளியந்தோப்பு குடும்ப நல நிலையம் இரண்டாம் பரிசும், செம்பியம் குடும்ப நல நிலையம் மூன்றாம் பரிசும் பெற்றன.

பரிசுகளை வழங்கி உரையாற்றுகையில் அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது:

"தமக்கு என்ன நோய் இருக்கிறது என்பதை அறியாமலேயே தமது உழைப்பையே கண்ணும் கருத்துமாகக் கருதிச் செயல்படும் இத்தகைய தொழிலாளர்களுக்கு மருத்துவப் பரிசோதனை நடத்துவது அவசியம். பாராட்டத்தக்க ஒன்று.

"அரசு மருத்துவமனைகளில் 10 ரூபாய் கொடுத்து மருத்வப் பரிசோதனை செய்து கொள்ளும் வசதியை அரசு ஏற்படுத்தித் தந்துள்ளது. இதனை அனைவரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். நோயைச் சிலர் மூடி மறைக்கிறார்கள். நோய் வருமுன் அதைத் தடுத்து நிறுத்துவதுதான் சிறந்தது என்பதைச் சிலர் இன்னும் உணராமல் இருக்கிறார்கள். இந்த நிலை மாற வேண்டும்" என்று கூறினார்.

மருத்துவக் கல்வி இயக்குநர் திருமதி லலிதா காமேஸ்வரன் பரிசு பெற்றோர் அனைவரையும் பாராட்டி உரையாற்றினார்.





# எரிபொருள் பெற எளிய வழிகள்

**டாக்டர் சி. ஆர். லட்சுமி நாராயணன்**
**தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம் ஏர்க்காடு.**

இன்றைக்கு நமக்குள் இருக்கும் பல பெரிய பிரச்னைகளுள் எரிபொருள் பஞ்சமும் ஒன்றாகும். ஒரு நாட்டில் 1/3 பங்கு காடுகளாக இருந்தால் அந்நாட்டில் மழை வளம் பெருகும்; மண் வளம் செழிக்கும். இவற்றால் பயிர் வளமும் காண முடியும்; உயிரினங்கள் நன்கு வாழவும் உதவும் என்பது மேல் நாட்டினர் கணிப்பு. ஆனால் நாமோ, இருக்கும் வனங்களையும்கூட விறகுக்காகவும், பயிர் நிலங்களுக்காகவும், குடியேற்றத்துக்காகவும் அழித்து வருகிறோம். மாட்டுச் சாணம் முதலானவற்றையும் உரிய முறையில் உபயோகிக்காமல் வீணாக்குகிறோம். தற்போது சாண எரிவாயு, காஸ், மண்ணெண்ணெய் போன்ற பலவகை எரிபொருட்கள் கிடைக்கப்பெற்றாலும் இன்னும் நம்மில் 64 சதவீதம் பேர் எரிபொருளுக்குக் காடுகளையே நம்பிக்கொண்டிருக்கிறோம். இதைத்தவிர மரம் சார்ந்த தொழிற்சாலைகளும், காகித ஆலைகளும் காடுகளையே அதிகமாக அழித்துக்கொண்டிருக்கின்றன.

நாம் உபயோகிக்கும் விறகில் சுமார் 50 சதவீதம் தண்ணீர் (ஈரப்பசை) உள்ளது. காடுகளிலிருந்து மரத்தை வெட்டி விறகாக எடுத்துச் செல்வதில் விலை கூடுகிறது. மேலும் கரி, புகை இவற்றின்மூலம் விறகின் எரிபொருள் திறன் குறைந்து எரிசக்தி வீணாகிறது.

இதற்கு வேறு வழி கிடைக்குமா?

தற்போதைக்கு விறகு மற்ற எந்த எரிபொருளையும்விட விலையில் மலிவாகவும், எளிதிலும் உள்ளூரிலேயே கிடைக்கிறது. மேலும் விறகு எரிந்தபின் கிடைக்கும் சாம்பல், நிலத்துக்கு நல்ல உரமாகிறது. இன்னும் ஒரு சில ஆண்டுகளில் நமது தேவை ஆயிரம்பேருக்கு $240m^2$ விறகு ஆகும்.

இதை நிறைவேற்ற விளை நிலங்களில் கிடைக்கும் வரப்புகள், நீர்நிலைப் பகுதிகளிலுள்ள கரைகள், ஆற்றுப் படுகைகள், இரயில் பாதையையொட்டிய காலியிடங்கள், சதுப்பு நிலங்கள் மலையடிவாரப் பகுதிகள் இங்கெல்லாம் விறகுக்காக மரங்களை நடவேண்டும். மேலும் ஒவ்வொரு விவசாயியும் தனது விளை நிலத்தில் ¼ ஏக்கரில் விறகுக்கேற்ற மரவகைகளை வளர்க்கலாம். இதன்மூலம் ஒரு ஆண்டில் குறைந்தது 4 டன் விறகு கிடைக்கும்.

இது ஒரு குடும்பத்திலுள்ள 5 நபர்களுக்கு ஒரு ஆண்டுக்குப் போதுமானதாகும். இம்முறையினால் சாண எருவாட்டி மற்றும் சாலையோர மரங்களை எரிபொருளாகப் பயன்படுத்துவது குறையும். இந்த ¼ ஏக்கர் நில இழப்பை மறற விளைநிலங்களில் உயர் விளைச்சல் ரகங்களைப் பயிராக்குவதன் மூலமும் நவீன உத்திகளைக் கையாளுவதன் மூலமும் விளைச்சலைப் பெருக்கிக் கொள்ள முடியும். தவிர மாட்டுச் சாணம் எருவாட்டியாகாமல் சாண எரிவாயு தயாரிப்பதற்குப் பயன்படுத்துவதால் எரிபொருள் கிடைக்கவும் அதற்குப் பின் கிடைக்கும் சாணக் கழிவு நிலத்துக்குச் சிறந்த உரமாகவும் பயன் தரும்.

காடு வளர்ப்பு விஞ்ஞான முறையில் அமைந்திட வேண்டும். நன்கு வளர்ந்த காட்டுப் பகுதிகளில்தான் மரம் வெட்டுதல், விறகு எடுத்தல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும். விறகாக எடுத்துச் செல்வதை விடுத்து, விறகை அந்தந்தக் காட்டுப் பகுதிகளில் எரித்து, கிடைக்கும் வாயுக்களைக் குழாய்கள் மூலம் அருகிலுள்ள கிராமம் அல்லது நகரங்களுக்கு விநியோகிக்கும் முறை பின்பற்றப்படவேண்டும். இதனால் எரிபொருள் விலை கூடாது. நிலச்சரிவு, மண் அரிப்பு, வெள்ளம் போன்ற இயற்கை அழிவுகளைக் கட்டுப்படுத்தலாம். இதேபோன்று விறகை உபயோகிப்பதைவிட மரக்கரியை உபயோகிப்பது சிறந்தது. இம்முறையில் ஒரு லாரியில் எடுத்துச் செல்லும் விறகின் எடைக்கு மூன்று பங்கு கரி ஏற்றலாம். கரியில் எரிபொருள் சக்தி விரயம் இல்லை; இவற்றால் விலையும் கூடாமல் இருக்கும்.

நமது நாட்டில் சூரிய வெப்பம் கிடைக்கும் நாட்கள் அதிகம். எனவே, வீடுகள், குடியிருப்புகள், தொழிற்சாலைகள் இங்கெல்லாம் சூரிய வெப்பத்தைப் பயன்படுத்தி நீர் சூடேற்றுதல்; அறைகளின் தட்ப வெப்ப நிலை சீராக்குதல், இரவில் மின்சக்தி பெறுதல் போன்ற திட்டங்களை நிறைவேற்றலாம்.

மரம் அறுக்கும் தொழிலகங்கள் முதலான இடங்களில் கிடைக்கும் மரத்தூள் மற்றும் மரக் கழிவுகளைக் கட்டிகளாக்கி அவற்றை எரிபொருளாகப் பயன்படுத்தலாம். இதேபோல ஜின்னிங் பாக்டரிகளில் கிடைக்கும் பருத்திக் குப்பைகள் மற்றும் இதர கழிவுகளைக் கொண்டு எரிபொருள் தேவையை நிறைவேற்றிக் கொள்ள இயலும்.

நிலக்கரித் துகள்களிலிருந்து கிடைக்கும் எரிபொருளும் நல்லதே. நிலத்தடி எண்ணெய்ப் பிரிப்பு ஆலைகளிலிருந்து கிடைக்கும் வாயுக்களையும் முழுவதுமாக உபயோகிக்க வேண்டும்.

மேற்கூறியவை தவிர கடற்கரையோரங்களில் கடற்காற்று, கடலலைகள் இவற்றைக்கொண்டும் மற்ற வசதியான இடங்களில் அணு உலைகளிலிருந்தும் மின்சாரம் தயாரித்து உபயோகிக்கலாம்.

இவ்வாறு நமக்குத் தேவைப்படும் எரிபொருட்களுக்குக் காடுகளைத் தவிர இதர பொருட்களைப் பயன்படுத்துவதன்மூலம் நாட்டின் வளம் செழிக்கவும், சுற்றுப்புறச் சூழலில் முன்னேற்றம் ஏற்படவும் வழி பிறக்கும்.

# கடலாமை அழியாமல் காப்போம்

உலகிலுள்ள விலங்கு இனங்களும், தாவர இனங்களும் படிப்படியாகத் தோன்றின. தோன்றியவை இயற்கையின் சூழலில் மாண்டும மேபாயின. மனிதனுக்கு முன் மேதான்றிய தாவர, விலங்கினங்கள்வகைபபடுத்தப்பட்டன. பின் விலங்கினங்களில் 'ஊர்வன' என்று ஒரு சில மிருகங்கள் வகைப்படுத்தப்பட்டன. ஊர்வன சுமார் 300-260 மில்லியன் ஆண்டுகட்கு முன்னர் பென்சில்வனியன் காலத்தில் தோன்றின. அந்தக் காலம் தொட்டு இன்னும் அழியாமல், அழிக்கப்படாமல் உள்ள ஊர்வன கடலாமைகள் மட்டுந்தான்.

ஆமை புகுந்த வீடு பாழ் என்று மனிதர்கள் இவற்றை அழித்து, கொன்று குவித்தனர். தீண்டாமை, பொறாமை, அறியாமை, கல்லாமை என்ற 'ஆமைகள்' புகுந்த வீடுதான் பாழ் என்பதை மறந்து விட்டனர். மாமிசத்திற்காகவும்அவற்றைவேட்டையாடிக் கொன்று சாப்பிட்டனர். முட்டைகளையும் சேகரித்து உண்டு வந்தனர். மேலும் கடலாமைகளை உயிருடன் வெளிநாட்டிற்கு அனுப்பினர். இதன் மாமிசத்தையும், மேல் ஓட்டினையும், கொழுப்பினையும், ஆமை எண்ணெயையும், தோலினையும், நகங்களையும் வெளிநாடுகட்கு ஏற்றுமதி செய்து அதிக அளவில் அன்னியச் செலவாணியைப் பெற்று வந்தனர். இதன் காரணமாக இவ்வினமே பூண்டோடு அழியக் கூடிய நிலை ஏற்பட்டது. இந்தச்சூழ்நிலையில்தான் இந்திய அரசு கொண்டு வந்த இந்திய வனவிலங்கு பாதுகாப்பு சட்டம்-1972, வனவிலங்குகளைக் காக்க வந்த ஒரு வரப்பிரசாதமாக அமைந்தது. இந்தச்சட்டம் கடலாமைகட்கு முழு பாதுகாப்பளிக்கிறது. இவ்வகையான ஊர்வன அழிந்து விடாமல் இந்த சட்டத்தின் உதவியால் தடுத்து நிறுத்தப்பட்டு வருகின்றன.

உலகிலுள்ள ஏழு வகையான கடலாமைகளில், ஆறு வகை அழியும் நிலையிலுள்ளன. இவற்றில் ஏழுவரி ஆமை (லெதர்பேட் டர்டில்), அலுங்கு ஆமை (ஹாக்ஸ்பீல்), பேராமை(கிரீன்டர்டில்) சித்தாமை (ஆலீவ் ரிட்லிடர்டில்), பெருந்தலை ஆமை (லாக்கர் ஹெட்) முதலிய ஐந்து வகை ஆமைகள் இந்தியக் கடல்களில் வாழ்கின்றன. இவைகளில் சித்தாமை சாதாரணமாக எங்கும் காணப்படும். இவை சுமார் 1 மீட்டர் நீளமும் 50-70 கிலோ எடையும் உடையவை. மனிதனால் ஏற்படும் அழிவைத் தடுக்க சட்டமிருந்த போதிலும் ஆமைகளுக்கு இயற்கையாக உள்ள விரோதிகளைத்தடுக்க இயலாமல் உள்ளது.


—பூ. க. பொன்னுசாமி,
இ.வ.ப.,
வனப்பாதுகாவலர்,
திருநெல்வேலி மண்டலம்,
பாளையங்கோட்டை.


கடலாமைகள் ஆண்டு முழுவதும் முட்டையிடும் என்றாலும் அதிக அளவில் முட்டையிடும் காலம் செப்டம்பர் முதல் மார்ச் வரையாகும். நெல்லை கட்டபொம்மன் மாவட்டத்தில் செப்டம்பர் மாதத்திலேயே அதிக அளவில் சித்தாமைகள் வந்து முட்டையிடுகின்றன. மற்றும் தஞ்சாவூர், தென்னார்க்காடு மாவட்டங்களிலும், சென்னைக் கடற்கரையிலும் டிசம்பர் மாதக் கடைசியில்தான் இந்த ஆமைகள் முட்டையிட, கரைக்கு வருகின்றன. இவை இரவில் தான் முட்டையிடுகின்றன. கடற்கரைக்கு வந்து தக்க இடத்தைத் தேர்ந்தெடுத்து குழிதோண்டி கடலைப் பார்த்த வண்ணம் முட்டையிட்டு, நன்றாக மூடிவிட்டு, உடும்புக்கொடி, இராவணன் மீசை போன்ற தாவரங்களால் குழிகளை மறைத்து விட்டுச் செல்லுகின்றன.

ஒவ்வொரு பெண் ஆமையும் 2-3 முறை முட்டையிடுகின்றன. ஒரே தடவை 145 முதல் 200 முட்டை வரை இடுகின்றன. முட்டைகளின் உருவமும், அளவும், 'பிங் பாங்' பந்தினை ஒத்திருக்கும். முட்டையின் எடை 16 கிராம். இந்தக்காலங்களில் மனிதன் இவற்றைப்பிடித்து கொன்று சாப்பிடுகிறான். முட்டைகளையும் எடுத்து உண்கிறான். ஆமைகள் முட்டையிடும் போது நாய், நரி, பன்றிகள் பார்த்துக் கொண்டே இருந்து, உடனுக்குடன் இவைகளைத் தின்று விடுகின்றன. உடும்புகளும் முட்டைகளைத் தின்னும். கடலாமைகளின் அழிவிற்கு இதுவும் ஒரு காரணம். இயற்கையாக முட்டையிட்ட இடத்தில் சுமார் 45-60 நாள் முதல் குஞ்சுகள் குழிகளிலிருந்து வெளியில் வரத் தொடங்கும். அப்போது ஆமைக் குஞ்சுகள் இயற்கையின் நியதிப்படி கடலை நோக்கிச் செல்கின்றன. முட்டையிலிருந்து கடலை நோக்கிச் செல்லும் போது இவற்றிற்கு வரும் ஆபத்துகள் ஏராளம். பெரும்பாலான குஞ்சுகட்கு, உலகத்தை விட்டு செல்லும் கடைசிப் பயணமாக இது அமைந்து விடும். கடலை நோக்கிச் செல்லும் போது குஞ்சுகளை நரி, நாய், உடும்பு, பருந்து, கருடன், கடல் காகம், நண்டு போன்றவை பிடித்துச்சாப்பிடுகின்றன. எஞ்சியவை கடலினுள் செல்லும்போது அவற்றைப்பெரிய மீன்கள் தின்று விடுகின்றன. இந்த அழிவுகளிலிருந்து இரண்டு சதவீத கடலாமைகளே மிஞ்சுகின்றன.



இந்தச் சூழ்நிலையில் கடலாமை இனத்தைக்கட்டிக்காக்கும் பொருட்டுத் தமிழ்நாடு அரசு, 1982ஆம் ஆண்டு திட்டம் ஒன்றைக் கொண்டு வந்து வனத்துறையின் கீழ் அதனை நடைமுறைப்படுத்தி வருகிறது. அதன்படி கடலாமை பாதுகாப்பகங்கள் அமைக்கப்படுகின்றன. கடற்கரையில் இயற்கையாக ஆமைகள் எவ்வளவு தூரத்தில் சென்று முட்டைகள் இடுகின்றனவோ, எந்தச்சுற்றுபுறச் சூழ்நிலையில்

இடுகின்றனவோ அதனை மனதிற் கொண்டு கடலாமை காப்பகங்கள் அமைக்கப்படுகின்றன.

இந்தக்காப்பகங்களைச் சுற்றிலும் கம்பி வலையால் வேலி போடப்படும். காற்றடிக்கும் போது உள்ளே மணல் வராமல் தடுக்க, வேலியைச் சுற்றிலும் தென்னை ஓலைகள் அல்லது பனை ஓலைகளை நெருக்கமாகக் கட்டிவிடுவர். இவ்வாறு அமைக்கப்படும் வேலி பூமிக்கடியில் சுமார் 50 செ.மீ. ஆழத்தில் இருந்து அமைக்கப்படும். இப்படி அமைப்பதால் பூமியின் அடியில் வழி அமைத்து கீரி, பன்றி, உடும்பு, நரி முதலியவை உள்ளே வரவோ காப்பகத்தில் புதைக்கப்படும் முட்டைகளைத் தின்னவோ முடியாது. பூமியின் மட்டத்திலிருந்து வேலி சுமார் 1.5 மீட்டர் உயர முள்ளதாக அமையும். காப்பகத்தில் குஞ்சுகள் வெளியே வரும்போது பறவைகளால் ஆபத்து நேரா வண்ணம் தடுத்து நிறுத்த காப்பகத்தின் மேலே கம்பி வலையிடப்படும். இந்த வகையில் காப்பகத்தைப் பார்க்கும்போது கோழிப்பண்ணை மாதிரி தெரியும்.

காப்பகத்தை அமைத்த பிறகு முட்டை சேகரம் செய்யப்படும். முட்டையிடும் காலமான இரவு நேரங்களில் முட்டை சேகரிப்பாளர்கள் கடற்கரையோரம்நடந்து செல்வர். கடல் பாம்புகள் தங்களை கடிக்கா வண்ணம் காலில் பாதுகாப்பிற்காக ஷூ அணிந்து செல்வர். இந்த பாம்பு கடித்தால் உடனடியாக மரணமே. டார்ச் லைட், முட்டைகளைச் சேகரம் செய்ய பிளாஸ்டிக் வாளி, பை முதலியவற்றையும் கொண்டு செல்வர். ஆமை, கடற்கரையை நோக்கி வருமேயானால், பின் நோக்கிச் சென்று காத்திருந்து, முட்டையிடும் போது பின் பக்கம் சென்று முட்டைகளைச் சேகரம் செய்வர். அப்போது ஆமையைத் தொட்டும் பார்க்கலாம். ஆனால் வாய்ப்பக்கம் தொடக்கூடாது. தொட்டால் கடிக்கும். கடலாமை கரையை நோக்கி வரும்போது, நேருக்கு நேர் சந்தித்தால் முட்டையிட கரைக்கு வராமல் திரும்பிவிடும். முட்டையிடும் போதே அவைகளை எடுத்து பிளாஸ்டிக் வாளி, பைகளில்வைத்துக்கொள்வர். ஆமை ஏற்கெனவே முட்டையிட்டுச் சென்றுவிட்டால் ஆமை கடலிலிருந்து வந்த பாதையும் திரும்பி சென்ற பாதையும் சந்திக்கும் இடத்தில் குழிகள் இருப்பதைக் கண்டுபிடித்து முட்டை சேகரம் செய்வார்கள். ஆமை வந்த வழியே செல்லாது. முட்டையிட்ட பின் வேறு வழியே கடலுக்குச் செல்லும். முட்டைகளைச்சேகரம் செய்யும்போது அந்தக் குழியில் உள்ள ஈர மணல்

**இந்தியாவிலேயே முதன்முறையாகத் தமிழ்நாடு வனத்துறையில் தான் இந்தக் கடலாமைப் பாதுகாப்புப் பணி செயல்பட்டு வருகிறது. இயற்கையாகப் பொரித்து, கடலுக்குள் செல்லும் கடலாமைக் குஞ்சுகள் 2%. ஆனால் வனத்துறையால் காப்பகம் அமைத்துப் பொரிக்கப்பட்டுக் கடலில் விடப்பட்டவை 74%. இயற்கைச் சூழ்நிலையைக் காப்பதில் நமக்குக் கிடைத்த மகத்தான வெற்றி இது!**

சிறிதையும் சேர்த்து எடுத்துக் கொள்வர். முட்டைகளை குழியில் இருந்து தோண்டி எடுக்கும் போது முதலில் காய்ந்த மணலை அப்புறப்படுத்திவிட்டு, பின்னரே முட்டைகளை கவனமாக எடுப்பார்கள். முட்டைகள் உடனுக்குடன் கடலாமை பாதுகாப்பகத்திற்கு கொண்டு போய் சேர்க்கப்படும். ஒவ்வொரு குழியிலிருந்து எடுக்கும் முட்டைகளை முட்டையிட்ட 24 மணி நேரத்திற்குள் தனித்தனியே பைகளில், பிளாஸ்டிக் வாளிகளில் சேகரித்து எடுத்துச் செல்லப்படும். காலதாமதமானால் முட்டையிலுள்ள கரு பாதிக்கக்கூடும். அதனால் நல்ல பலன் தராது.

முட்டைகளை ஆமையின் காப்பகத்திற்கு கொண்டு சென்றவுடன் இயற்கையாக உள்ள குழிகளின் அளவில் செயற்கை குழி தோண்டப்படும். இயற்கை குழிகள் உள்ள இடத்திலுள்ள வெபப நிலை, ஈரப்பதம், குழிகளின் அளவுகள் முதலியன முட்டை சேகரத்தின்போது சேகரிக்கப்பட்டு, அதேபோன்று சூழ்நிலை காப்பகத்திலும் நிலவும்படி பார்த்துக் கொள்வர். இயற்கையாகவே ஆமைக் குழிகள் சிறிய மண் குடத்தை ஒத்திருக்கும். இந்த குழியின் மேல் விட்டம் 20 செ.மீ. அடியின் விட்டம் 30 செ.மீ. நீளம் 30 செ.மீ. ஆக இருக்கும். இதுபோலவே குழிகள் அமைத்துக் கொள்வர். இந்த குழிகள் அமைக்கும் முன்னரே காய்ந்த மணலை 60 செ.மீ. விட்டத்திற்கு அப்புறப்படுத்திவிட்டு, குழிகளை ஏற்கனவே வரிசை வரிசையாக அமைந்திருக்கின்ற சிறு பகுதியினுள் அமைப்பர். அமைக்கப்பட்ட குழிகளில் முட்டைகளை கவனமாக எடுத்து வைத்து குழிகளை மூடுவர்.

சாதாரணமாக இரவில் சேகரம் செய்யப்பட்ட முட்டைகளை காலை 6 மணிக்குள் குழிகளில் புதைக்க வேண்டும். ஒவ்வொரு குழியிலும் ஒரு சிறிய தகவல் பலகை வைக்கப்பட்டு அதில், குழியில் உள்ள முட்டைகளின் எண்ணிக்கை, சேகரம் செய்யப்பட்ட தேதி, சேகரம் செய்யப்பட்ட இடம் முதலியவை எழுதப்படும். வெப்ப நிலை 30° சென்டிகிரேடுக்கு கீழிருந்தால் பொரிக்கும் குஞ்சுகளில் ஆண் குஞ்சுகள் அதிகமிருக்கும். வெப்பநிலை 30° சென்டிகிரேடுக்கும் மேல் இருந்தால் பெண் குஞ்சுகள் அதிகமிருக்கும் என அறிவியல் கூறுகிறது. அதனால் வெப்பத்தைக் கட்டுப்படுத்தி ஆண், பெண் விகிதத்தை விரும்பியபடி பெறலாம்.

செயற்கைக் குழிகளில் புதைக்கப்பட்ட முட்டைகள் 45 முதல் 60 நாட்களில் பொரிக்கும். இந்த சமயத்தில் குஞ்சுகளை நல்ல முறையில் பார்த்துக் கொள்வர். இரைக்காக காத்திருக்கும் விலங்குகள் படையெடுக்கவிடாது கம்பி வேலி, காப்பகத்தின் கூரை இவற்றை கவனமாகப் பார்த்துக் கொள்ளப்படும். அதன் கதவுகளை ஒரு போதும் திறந்து போடமாட்டார்கள்.

ஒவ்வொரு குழியிலிருந்துவரும் குஞ்சுகளை அகலமான பிளாஸ்டிக் பாத்திரத்தில் ஓரளவு கடல் நீர் நிரப்பி, அவற்றை அதில் விடுவர். பின் பொரித்த குஞ்சுகளை அவைகளின் விரோதிகளான பறவைகளும் மற்ற விலங்கு இனங்களும் பார்க்க முடியாத படியான நள்ளிரவில் கடலினுள் இடுப்பளவு நீர்வரை நடந்து சென்றோ அல்லது படகுகளில் சிறிது தூரம் சென்றோ விடுவர். குறைந்தது 50 குஞ்சுகள் அடங்கிய கூட்டமாகவே விடுவர். குஞ்சுகள் பொரிக்க பொரிக்க அவ்வப்போது கூட்டமாக கடலில் விடுவதால், கடலை நோக்கிச் சென்று கூட்டமாக வாழும் இயற்கை உணர்வு அவற்றிற்கு இருக்கும். ஒவ்வொரு குழிகளிலிருந்தும் குஞ்சுகள்வெளிவந்தவுடன் அந்தந்தக் குழிகளில், இறந்து கிடக்கும் குஞ்சுகளையும் சரியாக வளர்ச்சியடையாத முட்டைகளையும் அப்புறப்படுத்தி காப்பகத்தை சுத்தமாக வைத்திருப்பர்.

1982-83 முதல் 1985-86வரை 4,90,879 முட்டைகள் சேகரம் செய்யப்பட்டன. அவற்றிலிருந்து 3,78,950 குஞ்சுகள் கிடைத்தன. அவற்றில் 3,66,738 குஞ்சுகள் கடலில் விடப்பட்டுள்ளன. இயற்கையாக பொரித்து கடலுக்குள் செல்லும் குஞ்சுகள் 2%. ஆனால் துறையால் காப்பகம் அமைத்து பொரிக்கப்பட்டு கடலில் விடப்பட்டவை 74%. இயற்கைச் சூழ்நிலையைக் காப்பதில் நமக்கு கிடைத்த ஒரு மகத்தான வெற்றியாகும் இது.

# புதிய இரகக் கரும்பு



உலகில் கரும்பு உற்பத்தி செய்யும் நாடுகளில் இந்தியா முதல் இடம் வகிக்கிறது. ஆனால் சராசரி கரும்பு மகசூலில் நம்நாடு பதினொன்றாவது இடத்திலும், சர்க்கரை கண்டு முதலில் 5வது இடத்திலும் உள்ளது. இந்தியாவில் உள்ள மாநிலங்களில் தமிழகம் கரும்புச் சாகுபடி நிலப்பரப்பில் ஐந்தாவது இடம் வகித்தாலும் சராசரி கரும்பு மகசூலில் முதலிடத்தில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவின் சராசரி கரும்பு மகசூல் 55.4 டன் / எக்டேர். தமிழகத்தில் சராசரி கரும்பு மகசூல் 104 டன்/எக்டேர். இந்தச் சாதனைக்கு உயர் விளைச்சல் இரகங்கள் உறுதுணையாக இருந்தன. குறிப்பாக 1970-ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட கோ. 6304 இரகம் அதிக மகசூலை அளித்தது. அதனால், சாகுபடியில் இருந்து வந்த கோ. 419 போன்ற பழைய இரகங்களை விடுத்து விவசாயிகள் இதனைச் சாகுபடி செய்தனர்.

அடுத்து கடலூர், கரும்பு ஆராய்ச்சி நிலையம், 1975-ல் வெளியிட்ட கோ. க. 671இரகம் தமிழ்நாட்டில் சராசரி சர்க்கரை கண்டு முதலை 8.38 சதத்திலிருந்து 9.54-க்கு உயர்த்தியது. கோ. க. 85061 இரகம் 1985-ஆம் ஆண்டு சாகுபடிக்கு வெளியிடப்பட்டது. இது கோ.க. 671ஐ விட நடவுக் கரும்பில் எக்டேருக்கு 16.5 டன்கள் அதிக கரும்பு மகசூலையும் 1.4 டன் அதிக சர்க்கரை மகசூலையும் கொடுக்கக் கூடியது. ஓரளவு வறட்சியைத் தாங்கி வளரக் கூடியதால் கோ. க. 671 சரியாக வராத பகுதிகளில்கூட கோ. க. 85061 ஏற்றதாக அமைந்தது. இவ்வாண்டு (1987) தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் தனது பொங்கல் பரிசாக கோ. க. 86062 என்ற புதிய கரும்பு இரகத்தை வெளியிட்டுள்ளது.

இது முன் பட்ட (டிசம்பர்—ஜனவரி) சாகுபடிக்கு ஏற்றது. இப்புதிய கரும்பு இரகத்தின் குணங்கள், சாகுபடிக் குறிப்புகள் பற்றி அறிந்து கொள்வது முக்கியம்.

## கோ. க. 86062

### கரும்பின் குணங்கள்

இப்புதிய இரகம் எம். எஸ். 6847 என்ற இரகத்தின் பொது இனக்கலப்பிலிருந்து பெறப்பட்டது. சுமார் 3 முதல் 3.5 மீட்டர் உயரம் வளரும். தண்டுப் பகுதி கோ. க. 671ஐப் போலவே நிறம் கொண்டிருந்தாலும், சற்று அதிகப்படியாக கரும் இளஞ்சிவப்பு நிறத்துடன் இருக்கும். தண்டில் இடைக்கணுக்களின் இணைப்பு சற்றுச் சாய்வாக அமைந்திருக்கும். பருக்கள் முட்டை வடிவில் சிறிதாக இருக்கும். பரு அடிப்பகுதிக்கும் தண்டு இணைப்பிற்கும் இடையே இடைவெளி காணப்படும். நடுத்தரப் பருமனான தண்டின் நுனிப்பகுதியில் இலைகள் நிறைய இருக்கும். தண்டுடன் இணையும் இலையுறை கருமை கலந்த இளஞ்சிவப்பு நிறம் உடையது. இலையுறை சொணையானது, ஆனால் நாளடைவில் உதிர்ந்துவிடும். பருவிற்கு நேர் மேலாகத் தண்டில் பருப் பள்ளம் இல்லை.

இக்கரும்பு ஓரளவு வறட்சியை தாங்கி வளருவதுடன் எல்லா மண் வகைகளுக்கும் ஏற்றது. ஓரளவு பூக்கும், சாயும் தன்மை இருப்பினும், கோ. க. 671ஐப் போல அதிக அளவு இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கடலூர், கரும்பு ஆராய்ச்சி நிலையத்தில் கோ. க. 86062 இரகம் கோ. க. 671-ஐவிட நடவுக்கரும்பில் 23.8 சதவீதம் அதிகக் கரும்பு மகசூலும், 34.8 சதவீதம் அதிகச் சர்க்கரை மகசூலும் தந்துள்ளது. பிறகு தமிழகத்தில் பல்வேறு இடங்களில், பல மண் வகைகளில் இதன் மகசூல்திறன் சோதிக்கப்பட்டது. சராசரியாகக் கடற்கரையோர மாவட்டங்களில் (தென் ஆர்க்காடு செங்கல்பட்டு) எக்டேருக்கு 135.1 டன் கரும்பு மகசூலும், உட்பகுதி மாவட்டங்களில் (திருச்சி, மதுரை, தர்மபுரி, கோயம்புத்தூர்) 130.8 டன் மகசூலும் கிடைத்துள்ளது. சர்க்கரை தரத்தில் மாற்றம் ஏதும் இல்லை. கோ.க. 671-க்குச் சமமாக உள்ளது. கட்டைக் கரும்பில் இரண்டு பகுதிகளிலும் கோ. க. 671ஐ விட அதிகக் கரும்பு மகசூல் (சுமார் 10 சதம்) கிடைத்துள்ளது. சர்க்கரைக் கண்டு முதலில் ஏதும் மாற்றமில்லை.

### சாகுபடிக் குறிப்புகள்

எந்தப் பயிரும் நல்ல முறையில் சாகுபடி செய்யப்படவில்லையென்றால், எதிர்பார்க்கும் பலன் தருவதில்லை. கரும்புக்குப் பின் வரும் திருந்திய சாகுபடி முறைகளை விவசாயிகள் தவறாது பின்பற்றினால் அதிக மகசூல் பெறலாம்.

கரும்பு ஒரு நீண்ட காலப் பயிர். உயர்ந்து வளரக்கூடியது. அதற்கேற்ப வேர் பரவும் வகையில் வயலை ஆழ உழுதல் அவசியம். களிப்பு நிலப்பகுதியில் உழுதல் என்பது இயலாது. எனவே சரியான ஈரப்பதத்தில் மண்வெட்டிகளைக் கொண்டு பார்கள் அமைத்து நடவு செய்தால் போதும். வயலில் நீர் தேங்கி நிற்கக் கூடாது. நன்கு உழுத வயலில் டிராக்டர் அல்லது விக்டரி கலப்பை கொண்டு 80 செ. மீ. இடைவெளியில் பார்கள் அமைத்துக்கொள்ள வேண்டும்.

ஏழு அல்லது எட்டு மாத வயதுடைய நாற்றங்கால் பயிரிலிருந்து விதைக் கரணைகள் எடுக்க வேண்டும். வேறு வழியின்றி 12 மாத வயதுடைய கரும்பிலிருந்து கரணைகள் வேண்டுமெனில் அடிப்பாகத்தை நீக்கி, மூன்றில் ஒரு பாகக் கரும்பினைப் பயன்படுத்தலாம். பூச்சி பூஞ்சாண நோய்கள் ஏதும் இருக்கிறதா என்று சோதனை செய்வது அவசியம். நாற்றங்கால் பயிரிலிருந்து எடுக்கப்பட்ட விதைக் கரணைகள் முற்றிய கரும்பிலிருந்து எடுக்கப்பட்ட கரணைகளை விட அதிக முளைப்புத் திறனும், 14 டன்கள் வரை எக்டேருக்கு அதிக மகசூலும் அளிக்கிறது.

ஒரு எக்டேர் நடவு செய்ய 75,000 இருபரு கரணைகள் தேவை. விதைக் கரணைகளை

## இங்கு மட்டுமா பூகம்பம் அங்கும் உண்டு!

பூமியிலே பூகம்பங்கள் நடப்பதுபோலச், சூரியனில் கூட அலை அலையான அதிர்வுகளும் நடுக்கங்களும் நிகழ்ந்தவாறே உள்ளனவாம்.

பூகம்பங்களின் அதிர்ச்சி அளவைப் பதிவு செய்ய 'செஸ்மோகிராப்' (Seismograph) என்னும் கருவியைப் பயன்படுத்துவதுபோலச் சூரியனின் அதிர்வுகளையும் பூமியிலிருந்தபடியே கணக்கிடுவதற்குச் ''சூரிய அதிர்வு ஆய்வியல்'' (Heliosoismology) என்னும் புதிய விஞ்ஞான உத்தியையே அமெரிக்க விஞ்ஞானிகள் உருவாக்கி இருக்கின்றனர்.

இந்த உத்தியைப் பயன்படுத்திச் சூரிய அதிர்வுகளை அளப்பது மட்டுமல்ல; சூரியனின் உட்புறத்தைப் பற்றிய வியத்தக்க பல புதிய மர்மங்களையே கண்டுபிடித்துள்ளனர். ஆல்பர்ட் ஐன்ஸ்டைனின் சார்புடைமைத் தத்துவத்தை உறுதிப்படுத்தக் கூடிய பல சான்றுகளும் கிடைத்துள்ளனவாம்.

சூரியனின் மேற்பரப்பிலிருந்து 691,000 கிலோ மீட்டர்கள் தொலைவிலுள்ள அதன் மையப்பகுதி வரையில் நடைபெறும் பல்வேறு இயக்கங்களையும் முதன்முறையாக மனிதன் கண்டறிவதற்கு இந்த உத்தி உதவுகிறது.

சூரியனின் மேற்பரப்பிலும், அதன் உள்ளேயும், அலைபலையானஅதிர்வுகள் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன. மணியோசையின் ஒலி அலைகள் ஒன்றன்பின் ஒன்றாக அடுத்தடுத்து வந்துகொண்டே இருப்பதுபோல அதன் அதிர்வலைகள் தோன்றுகின்றன.

சூரியனின் மேற்பரப்பானது ஐந்து நிமிடத்துக்கு ஒரு முறை கொந்தளித்துக் கொண்டேயிருக்கிறது. சூரியனின் உள்ளே அடுத்தடுத்து எழும்பிக் கொண்டிருக்கும் அதிர்வலைகளின் அழுத்தத்தின் விளைவுதான் இந்தக் கொந்தளிப்பு. ''சவுண்ட் பாக்ஸ்'' (ஒலிப் பெட்டி) ஒன்றிற்குள் ஏற்படும் ஒலி அலைகளைப் போன்றவை இவை. சுமார் ஒரு கோடி எண்ணிக்கையில் வெவ்வேறு விதமான அதிர்வலைகள் சூரியனின் உட்புறத்தில் ஒரே சமயத்தில் இயங்கிக் கொண்டு இருப்பதாக விஞ்ஞானிகள் நம்புகின்றனர்.

இந்த அதிர்வலைகளின் விளைவாகச் சூரியப் பரப்பிலே எழக்கூடிய நுட்பமான கொந்தளிப்பு இயக்கங்களையும், அவை ஏற்படுத்தும் ஒளி மாற்றங்களையும் பூமியிலிருந்து ஆராய்ந்து, அந்த அதிர்வலைகளைக் கணக்கிட முடியும்,

—அமெரிக்கத் தகவல் நிலையம்

---

50 கிராம்+பவிஸ்டின் 1கிலோ யூரியா+100 லிட்டர் நீர்க்கரைசலில் 5 நிமிடம் ஊற வைத்து, பின் நடவு செய்வது பல நோய்களைக் கட்டுப்படுத்த உதவும். களிமண் பாங்கான நிலங்களில் சேற்று நடவு செய்வதைத் தவிர வேறு வழியில்லை. தோட்டக்கால் நிலங்களில் மண் பொல பொலப்பாக இருக்கும். கரும்புச் சால்களில் கரணைகளை வரிசையாக அடுக்கி ஒரு விரற்கடை உயரம் மண்ணால் மூடி சீராக நீர்பாய்ச்சினால் சேதம் ஏதுமின்றி 100 சதம் முளைப்பினைப் பெறலாம்.

உரங்கள் என்று சொல்லும் போது அவை சிறப்பாகத் தழைச் சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்து என்னும் மூன்றையே குறிக்கும். செயற்கை உரங்கள் நல்ல முறையில் பயிருக்கு வீணாகாமல் கிடைக்க, மண்ணில் இயற்கை எரு நிறைய இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். இதற்குக் கடைசி உழவின்போது ஒரு எக்டேருக்கு 12.5 டன் சாணி எரு, அல்லது 25 டன் ஆலை அழுக்கு அல்லது 37.5 டன் கம்போஸ்ட்டை மண்ணில் இட்டு நன்கு கலந்து விட வேண்டும்.

செயற்கை உரங்களில் கரும்புக்கு ஒரு எக்டேருக்கு மொத்தம் 62.5 கிலோ மணிச்சத்து தேவை. இதற்கு 413 கிலோ சூப்பர் பாஸ்பேட் அளிக்க வேண்டும். நடவு சால்களில் கரணைகளை நடவு செய்யும் முன் மொத்த மணிச்சத்தையும் அடியுரமாக இடவேண்டும். இத்துடன் 25 கிலோ பி.எச்.சி. 10 சதத்தூளை கலந்து இடுவதால் கரையான்கள் தாக்குதலைத் தடுக்கலாம்.

கரும்புப் பயிருக்கு ஒரு எக்டேருக்கு மொத்தம் 275 கிலோ தழைச்சத்து தேவை. இதற்கு 605 கிலோ யூரியாவை எடுத்து மூன்று சமபாகங்களாகப் பிரித்து கரும்பு நட்ட 30, 60 மற்றும் 90-வது நாளில் சாம்பல் சத்துடன் சேர்த்து, பயிரின் தூர்களுக்கு அருகில் இட்டு மண்ணால் மூட வேண்டும்.

கரும்புக்கு மொத்தம் தேவைப்படும் 112.5 கிலோ சாம்பல் சத்தை ஒரு எக்டேருக்கு அளிக்க 180 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் இட வேண்டும். இதனையும் மூன்று சம பாகங்களாகப் பிரித்து, தழைச் சத்துடன் சேர்த்து இடவேண்டும்.

தழைச்சத்து மண்ணில் வீணாவதை தடுக்கக் கூடிய ஒரு முறை உண்டு. ஒரு எக்டேருக்கு 440 கிலோ யூரியாவைப் பொடி செய்யப்பட்ட 80 கிலோ வேப்பம் பிண்ணாக்குடன் கலந்து 24 மணி நேரம் வைத்திருந்து பின் பயிருக்கு இட வேண்டும். அதாவது ஒவ்வொரு முறையும் 146 கிலோ யூரியா 32 கிலோ வேப்பம் பிண்ணாக்கு தேவைப்படும் இதனால் ஒரு எக்டேருக்கு இட வேண்டிய யூரியாவில் 164 கிலோ மீதமாவதுடன் அதிகக் கரும்பு மகசூலும் கிடைக்கிறது.

நுண்ணுயிர் உரம் ஆகாயத்தில் காற்றில் உள்ள தழைச் சத்தைக் கிரகித்து வைத்து, பயிருக்குக் கிடைக்க உதவுகிறது. பலவகை நுண்ணுயிர்களில் அசோஸ்பைரில்லம் என்பது கரும்புக்குச் சிறப்பானதாக உள்ளது. ஒரு எக்டேருக்கு 9 கிலோ அசோஸ்பைரில்லம் உரத்தை 3 பாகமாகப் பிரித்து 3 கிலோவைக் கரணையுடன் கலந்தும், 3 கிலோவை அடியுரமாகவும், 3 கிலோவை 30-வது நாளிலும் இடவேண்டும். 225 கிலோ தழைச்சத்துடன் 9 கிலோ அசோஸ்பைரில்லம் நுண்ணுயிர் கலந்து இடுவதால் 300 கிலோ தழைச்சத்து இடுவதால் கிடைக்கும் மகசூலுக்கு ஈடாகக் கிடைக்கிறது. அதாவது 75 கிலோ தழைச்சத்து மீதமாகிறது.

கரும்புப் பயிருக்கு மொத்தம் 30-40 தடவை நீர்ப்பாய்ச்ச வேண்டும். முளைப்புப் பருவத்தில் 9 நாட்களுக்கு ஒரு முறையும், கிளைப்புப் பருவத்தில் 8 நாட்களுக்கு ஒரு முறையும், வளர்ச்சிப் பருவத்தில் 8 நாட்களுக்கு ஒரு முறையும், முதிர்ச்சி பருவத்தில் 13 நாட்களுக்கு ஒரு முறையும் நீர்ப்பாய்ச்ச வேண்டும். மண்ணின் தன்மை, மழை அளவு, ஆகியவற்றைப் பொறுத்து விவசாயிகள் பயிர் வாடி விடாத அளவுக்கு நீர்பாய்ச்சுவது, அவசியம்.


**இரா. துரை**
**அ. சேர்மக்கனி**
**மா. அச்சுதன்**
**கரும்பு ஆராய்ச்சி நிலையம்**
**கடலூர்**

முதல் அட்டை சொல்லும் செய்தி:



# உதகையில் கோடைவிழா

தென்னிந்தியாவின் தலைசிறந்த கோடை வாசஸ்தலமாகவும், மலைகளின் அரசியாகவும் விளங்கும் உதகமண்டலத்தில் ஆண்டுதோறும் கோடைக் காலமாகிய ஏப்ரல்-மே திங்கள்களில் கோடை விழா மற்றும சிறு வர்த்தகப் பொருட்காட்சி ஆகியன சிறப்பாகக் கொண்டாடப்படுவது வழக்கம். பொதுமக்களின் ஒத்துழைப்புடன் அரசு நடத்திவரும் இவ்விழாக்கள் இவ்வாண்டு இயற்கையின் சீற்றமாகிய வறட்சி ஒரு பக்கம் நிலவினாலும் முற்றிலும் புதுமையான முறையில் சிறப்பான கலை அம்சங்களுடன் எழுச்சிமிக்க வகையில் நடைபெற உள்ளன.

கோடையில் இளைப்பாற இங்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளைக் கவர அரசின் சார்பில் சுற்றுலாத்துறை எண்ணற்ற வசதிகளைச் செய்து தந்துள்ளது.

அழகும், கலை அம்சமும் கொண்ட எழிலார்ந்த இயற்கைக் காட்சிகளை, தங்கி இருக்கும் அறையில் இருந்துகொண்டே கண்டு களிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட 'ஓட்டல் தமிழ நாடு' உள்ளது. இதில் வசதி படைத்தவர்களும் சாதாரண மக்களும் தங்குவதற்கு ஏற்ற வகையில் அவரவர்களின் பொருளாதார வசதிக்குத் தகுந்த அறைகள் உள்ளன. இந்தியா மட்டுமின்றி வெளிநாடுகளிலிருந்தும் இங்கு வரும் சுற்றுலாப் பயணிகள் விரும்பிச் சுவைக்க அவர்களது நாட்டிற்கே உரித்தான உணவு வகைகள் 'ஓட்டல் தமிழ் நாட்டில், தயாரிக்கப்படுகின்றன.

உதகையில் தங்க வரும் இளைஞர்கள் மற்றும் ஏழை எளியவர்களுக்குத் தேவையான உணவு, மற்றும் பாதுகாப்பு வசதிகளுடன் கூடிய இளைஞர் விடுதி உள்ளது.

வண்ண வண்ணப் பட்டாம் பூச்சிகளாய்ச்சிறகடித்துப் பறந்து உதகையின் அழகை ரசிக்க இங்கு வரும் சிறுவர் சிறுமியரும் அவர் தம் குடும்பத்தினரும் குதூகலமாய்ப் பயணம் செய்து, ஏரியையும் அதன் வனப்பையும் கண்டு களிக்க,படகு இல்லத்தில் சிறுவர் ரயில் விடப்படுகிறது.

உதகை ஏரிக்கரையில் மான் பூங்கா ஒன்று வனத்துறையால் பராமரிக்கப்பட்டு வருகிறது. படகுசவாரி செய்துகொண்டே, இங்கு துள்ளி விளையாடும் அழகிய மான்களைக் கண்டு ரசிக்கலாம்.

அடுத்து, இயற்கையின் அழகுக்கு மேலும் மெருகூட்டும் வகையில் சுற்றுலாத்துறையின் சார்பில் சிறுவர் பூங்கா ஒன்று நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்தப் பூங்காவில் இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலருந்தும் கொண்டுவரப்பட்ட பலவகையான பூஞ்செடிகள் கண்ணைக் கவரும்வண்ணப்பூக்களை அள்ளிச் சொரிந்து கண்களுக்கு இதமான காட்சிவிய வழங்கி வருகின்றன. அலங்கார ஒளிவிளக்குகளும் இனிய நல்லிசையும் இப்பூங்காவின் சிறப்பம்சமாகும். இப்பூங்காவிலும் சிற்றுண்டி வசதி செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தின் மலைத்தொடர்ச்சியில் மிக உயர்ந்த சிகரமாக விளங்குவது தொட்டபெட்டா சிகரமாகும். கடல் நிலை மட்டத்திலிருந்து 2623 மீட்டர் உயரத்தில் இது அமைந்துள்ளது. இங்கு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தொலை நோக்கிக் காட்சியகம் ஒன்றை அமைத்துள்ளது. சுற்றுலாப் பயணிகள் தொலைநோக்கியின் மூலம் ஊட்டிநகர் அமைப்பையும் அதைச் சுற்றி

கோ. மாரிமுத்து
சுற்றுலா அலுவலர், உதகமண்டலம்.

யுள்ள மலைக் குன்றுகளையும் கண்டு மகிழலாம்.

இந்த மலைச் சிகரத்திலும், சுற்றுலாப் பயணிகள், இளைப்பாறவும், உண்டு மகிழவும் சிற்றுண்டிச்சாலை வசதி உள்ளது.

முதுமலை சரணாலயத்தில் உள்ள அனைத்து விலங்குகளையும் பாதுகாப்போடு பார்க்கும் வகையில் பார்வைக் கூடம் ஒன்று 46 அடி உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இந்தப் பார்வைக் கூடம் மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆலோசனையின்படி அமைக்கப்பட்டதால் இது 'முதல்வரின் பார்வைக்கூடம்' என்றே அழைக்கப்படுகிறது.

முதுமலையில் இளைஞர்விடுதி ஒன்றும் அமைந்துள்ளது.

நீலகிரி மலைப்பகுதியில் சுற்றுலாப் பயணிகளால் மிகவும் ஈர்க்கப்படும் ஒரு இடம் கோடநாடு பள்ளத்தாக்குக் காட்சி முனையாகும். இதனைக் காணவருவோரின் வசதிக்காக கோத்தகிரியில் இளைஞர் விடுதி ஒன்றினைக் கட்ட, சுற்றுலா வளர்ச்சிக் கழகம் திட்டமிட்டுள்ளது.

உதகமண்டலத்திலிருந்து முதுமலை செல்லும்வழியில் கல்லட்டி நீர்வீழ்ச்சி அமைந்துள்ளது. மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆணைப்படி கல்லட்டி நீர்வீழ்ச்சிப் பகுதியில் பல வளர்ச்சிப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பார்வைக்கூடம் அமைத்தல், கழிவறைகள் மற்றும் சாலைவசதி, கார் நிறுத்துவதற்கான இடவசதி போன்ற பணிகள் நிறைவேறிவிட்டன.

ஆண்டுதோறும் கோடைக் காலத்தில் பிரீக்ஸ் பள்ளி விளையாட்டுத் திடலில் சிறு வர்த்தகப் பொருட்காட்சி நடைபெறும். இவ்வாண்டு முற்றிலும் மாறுபட்ட முறையில பல்வேறு கலைப் பொருட்கள் நிறைந்த தனியார் மற்றும் அரசு நிறுவன விற்பனைப் பொருட்கள் அடங்கிய அரங்குகளும், அறிவியல், இயற்கை அம்சங்கள் கொண்ட கண்காட்சி அரங்குகளும் அமைக்கப்பட்டுள்ளன.

நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவரும், கோடை விழா மற்றும் பொருட்காட்சிக் குழுத்தலைவருமான திரு. கே.எஸ்.ஸ்ரீபதி இ.ஆ.ப.அவர்கள் துவக்கிவைத்த இப்பொருட்காட்சி மே திங்கள் இறுதிவரை தொடர்ந்து நடைபெறும். இந்தப்பொருட்காட்சிக்கு நுழைவுக் கட்டணம் ஏதும் வசூலிக்கப்படாதது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.



வழக்கம்போல், இவ்வாண்டும் பல்வேறு கலைநிகழ்ச்சிகளும், சமூக, சரித்திர நாடகங்களும், நாட்டிய நிகழ்ச்சிகளும் தலைசிறந்த கலைஞர்களைக்கொண்டு நடத்த கோடைவிழாக் குழு ஏற்பாடு செய்துள்ளது.

கோடை விழாவின்போது பல்வேறு நிகழ்ச்சிகள் இருப்பினும் இவ்வாண்டு சிறப்பு அம்சமாக முற்றிலும் புதுமையான உருளை சறுக்கு விளையாட்டு, நிழற்படப் போட்டி, போன்றவை அறிமுகம் செய்யப்பட உள்ளன.

உருளைச்சறுக்கு விளையாட்டில் இளைஞர்கள் தமது வீரதீரச் செயல்களைச் செய்துகாட்ட உள்ளார்கள். நிழற்படப் போட்டியில் திறமை வாய்ந்த புகைப்படக் கலைஞர்கள் கலந்து கொள்கிறார்கள். இப்போட்டியில், நீலகிரி மாவட்ட மக்களின் வாழ்க்கை வரலாற்றை நினைவூட்டும் புகைப்படங்கள், வனவிலங்குகள், சுற்றுலாப் பயணிகளைக் கவரும் இடங்கள் ஆகியவை மட்டுமே இப்போட்டியில் இடம் பெறுகின்றன.

இந்தியாவின் பல்வேறு முக்கிய நகரங்களில் நடைபெறும் கார் விளையாட்டுப் போட்டி இவ்வாண்டு கோடை விழாவின் சிறப்பம்சமாகும்.

படகு இல்லத்தில் வழக்கமாக நடைபெறும் படகுப் போட்டி இவ்வாண்டு உண்டு. இப்போட்டியில், தேர்ந்த படகு ஓட்டிகள் கலந்துகொண்டு படகு ஓட்டும் காட்சி காண்பவர்களை வியப்பில் ஆழ்த்தும்.

மேலும் படகு இல்லத்தில் படகு அலங்கார அணிவகுப்பு நிகழ்ச்சியும் நடைபெறும். இந்த அணி வகுப்பில் பல்வேறு அரசுத் துறைகளின் சார்பிலான அலங்கரிக்கப்பட்ட படகுகள் ஒன்றன்பின் ஒன்றாக அணி வகுத்துப் பவனிவரும். இக் காட்சியினைக் காண மக்கள் பெருமளவில் திரண்டுவருவர்.

உதகை கோடைவிழாவிற்கு மகுடம் அமைந்தாற்போல் நடைபெறுவது மலர்க்கண்காட்சியாகும். இந்த மலர்க் கண்காட்சி ஆண்டுதோறும் மே திங்களில் உதகையிலுள்ள அரசினர் பூங்காவில் நடைபெறும்.

இந்த மலர்க்கண்காட்சியில் பல்வேறு அரசுத்துறைகளும், தனியார்துறைகளும் கலந்துகொண்டு இந்தியா மற்றும் வெளிநாடுகளிலிருந்து தருவிக்கப்பட்ட அனைத்து வகையான மலர்களையும் காட்சிக்கு வைக்கும். ஏறத்தாழ 1000 வகையான மலர்கள் காட்சிக்கு வைக்கப்படும். இந்நிகழ்ச்சி மே, 23, 24 ஆகிய நாட்களில் நடைபெறும். மலர்க் காட்சியின்போது அரசுப் பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள மலர்களில் அலங்கரிக்கப்பட்ட மேடையில் தமிழ்நாட்டின் தலைசிறந்த இசைக் கலைஞர்களால் இன்னிசை நிகழ்ச்சிகள் நடைபெறும்.

கோத்தகிரி, நீலகிரியின் ஓர் அங்கமாக விளங்குவதால், இவ்வாண்டு கோத்தகிரியிலும் மலர்க் கண்காட்சி மற்றும் கோடைவிழா நடைபெறுகிறது.

நீலகிரியின் நுழைவாயிலான குன்னூரில் பழக் கண்காட்சி 31.5.87அன்று நடைபெறுகிறது. அரசுத் துறை நிறுவனங்களும், தனியார் துறை நிறுவனங்களும் பழக் கண்காட்சியில் பங்குகொள்கின்றன.

கோடைவிழா நிகழ்ச்சிகளில் புதுமையான முறையில் இவ்வாண்டு குதிரை விளையாட்டுக் காட்சியும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இக்காட்சியில் குதிரை வீரர்கள் கலந்து கொண்டு தங்களது குதிரைகளின் அணிவகுப்பு மற்றும் வீரவிளையாட்டு சாகசங்களைச் செய்து காட்டுவார்கள்.

மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.எஸ். ஸ்ரீபதி இ.ஆ.ப., அவர்களின் ஆலோசனையின் பேரில் விழா ஏற்பாடுகள் சிறப்புற செய்யப்படுகின்றன.



# மண்ணும் மனிதனும்



'மண்ணெடுத்துக் குடங்கள் செய்வீரே!' என்றார் பாரதியார்.

அறிவியல் அதி வேகத்தில் வளர்ந்தாலும், பழமையான மண்பாண்டத் தொழிலும் வளர்ந்துகொண்டுதான் இருக்கின்றது.

மண்ணைக் கொண்டு தம் கை வண்ணத்தால் கண்கவர் பொம்மைகள் செய்வதையும், வீடுகள் கட்ட செங்கல், ஓடுகள், முதலானவை தயாரிப்பதையும் நாம் பார்க்கிறோம்.

பண்டைக்காலக் கலை, நாகரிகத்தை வெளிப்படுத்தும் சின்னங்களாகவும் மண்பானைகள், ஓடுகள் முதலானவை விளங்குகின்றன.

புராதன மண்பாண்டத் தொழிலின் மகிமையை வெளிப்படுத்தவும், மண்பாண்டத் தொழில், மேலும் மேலும் வளரவும், அதன் மூலம் அத் தொழிலில் ஈடுபட்டிருப்போரின் வாழ்க்கைத்தரம் உயரவும், அதற்கு வழிவகைகள் செய்யும் வகையில், ஏப்ரல் திங்கள் 22, 23 நாட்களில் சென்னை ராஜாஜி மண்டபத்தில் கருத்தரங்கும், கண்காட்சியும் நடந்தது. தமிழ்நாடு மண்பாண்ட உற்பத்தியாளர் சங்கம் இதற்கு ஏற்பாடு செய்திருந்தது.

கருத்தரங்கில் தமிழ்நாடு, கர்நாடகம், மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களிலிருந்து பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள். அவர்கள் கை வண்ணத்தால் உருவான பொம்மைகளும் காட்சியில் இடம் பெற்றிருந்தன. இந்தியா முழுவதும் மண்பாண்டத் தொழிலில் 15 லட்சம் குடும்பங்கள் ஈடுபட்டுள்ளன. தமிழகத்தில் மட்டும் 6 லட்சம் பேர் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.



கருத்தரங்கில், மாண்புமிகு சத்துணவு மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் திரு ஆர்.சௌந்தரராசன், தமிழ் வளர்ச்சி உயர் நிலைக்குழுத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ.சிவஞானம், திரு.வ.உ.சி. சுப்பிரமணியம், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத் தலைமைச் செயல் அலுவலர் திரு.சி.என். கிருஷ்ணபாரதி இ.ஆ.ப., பம்பாயில் கதர் கமிஷன் அலுவலர் திரு லட்சுமிகாந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு மண்பாண்ட உற்பத்தியாளர் சங்கத் தலைவர் திரு.கே. பெருமாள் உடையார் விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில், ''இத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு ஆண்டில் 7 மாதம்தான் வேலைவாய்ப்பு உள்ளது. பண்டைய தொழிலான இத்தொழிலுக்கு அரசு மேலும் பல உதவிகளைச் செய்யவேண்டும்.'' என்றார்.

வரவேற்புக்குழுத் தலைவர் திருமதி அ.அன்னம்மாள் வரவேற்றுப் பேசுகையில், ''மாவட்டத்திற்கு ஒரு மண்பாண்டத் தொழிற்சாலையை அமைத்து மண்பாண்டத் தொழில் வல்லுநர்களுக்கு உதவி செய்யவேண்டும்'' என்று கேட்டுக்கொண்டார்.

மண்பாண்டத் தொழிலானது வளம் பெற்றுத் திகழ்ந்திடக் கருத்தரங்கில் பல கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

—நமது செய்தியாளர்



# இப்போது! பேன்மின்த்*

(மோரென்ட்டல் சிட்ரேட்)

## நாக்குப் புழுக்களை அழிக்கிறது.
## நாக்குப் புழுக்கள் உங்கள் லாபத்தை அழிக்கும் முன்பு.



நாக்குப்புழுக்கள்—உங்கள் கண்ணுக்குத் தெரியாத எதிரிகள்.

காலநடையின் வயிற்றிற்குள் நாக்குப் புழுக்கள் வளர்ந்து வாழ்கின்றன. அவை கால்நடையின் ஊட்டச் சத்துக்களை. உண்ணுகின்றன. இதன் பலனாக கால்நடை மெலிந்து, உற்பத்தி குறைந்து விடுகிறது, லாபம் குறைந்து விடுகிறது.

மேய்ச்சல் தளத்திலே கால்நடைகள் மேயும்போது நாக்குப் புழுக்கள் தொற்றிப் பரவுகின்றன. அடிக்கடி புழு நோய் வருவதால், நிரந்தரமான, புழுவே அற்ற கால்நடைகள் இருக்க வாய்ப்பே இல்லை எனலாம். ஆகவேதான், கால்நடை மருத்துவர்கள், 3-4 மாதங்களுக்கொரு முறைப்புழுக்களை அப்புறப்படுத்த வேண்டுமென்று சிபாரிசு செய்கின்றனர்.

பேன்மின்த் நாக்குப்புழுக்களை அழிக்கிறது நாக்குப்புழுக்கள் உங்கள் லாபத்தை அழிக்கும் முன்பாக.

பேன்மின்த், உலகெங்கிலும் கால்நடைகளைத்தாக்கும் நாக்குப் புழுக்களை ஒழிக்கிறது.

பேன்மின்த், பாதுகாப்பானது பலகீனமான சோர்வான, கால்நடைகளுக்கும், சினையுள்ள மற்றும் கன்று ஈன்ற கால்நடைக்கும். இதர சில புழுக்கொல்லிகளை போல் இது, பால் நிறத்தில் மாற்றமோ, தீய விளைவுகளோ ஏற்படுத்தாது. பேன்மின்த் கொடுத்த பின்பும், பாலினைப் பயன்படுத்தலாம்.

இப்போது, பேன்மின்த் எளிதான வசதியான புழுக்கொல்லி.

உபயோகிக்க எளிதானது பேன்மின்த—காரணம், உடனடி உபயோகத்திற்கான கரைசல் மாத்திரை, உருண்டை ஆகிய வடிவங்களிலே கிடைக்கின்றது.

கால்நடை மருத்துவரிடம் ஆலோசனை பெறுங்கள்.

கரைசல் கிடைக்கிறது
100 மி.லி, 500 மி.லி. மற்றும்
4.5 லிட்டர் பேக்குகளில்

சிறிய கால்நடைக்கு
மாத்திரைகள்.



பெரிய கால்நடைக்கு
உருண்டைகள்.

PF 2106

ஒப்பற்ற **பேன்மின்த்**

புழுக்களை அழித்திடும் ஆரோக்கியம் அளித்திடும்

*யு.எஸ்.ஏ .:பைஸர் இன்கார்ப்பரேட்டடின் ட்ரேட்மார்க்

**pfizer**

கேட்பதன் பேரில் மேலும் தகவல்கள் கிடைத்திடும்.

* சென்னைப் பொது மருத்துவமனையிலும் ஸ்டான்லி மருத்துவமனையிலும் மாற்றுச் சிறு நீரகம் பொருத்தும் சிகிச்சை வெற்றிகரமாக நடந்து வருகிறது. அதற்கு வேண்டிய நவீன கருவிகளை வாங்குவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்.

* தமிழ்நாட்டில் சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை செய்து கொள்ள வசதி இல்லாதவர்களுக்கு முதலமைச்சர் ஆணையின்படி ரூ. 10,000 வழங்கப்படும்.

* இதுவரை நிலுவையிலிருந்த 23 ஆயிரத்து 39 பேருக்கு ரூ. 1 கோடியே 90 இலட்சம், முதியோர் உதவித் தொகை வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

* பலநோக்குச் சுகாதாரப் பணியாளர்களுக்கு உதவியாளர்களை நியமிக்க அரசு முடிவு செய்துள்ளது. இதன் மூலம் 5 ஆயிரம் பெண்கள் வேலைவாய்ப்புப் பெறுவார்கள்.

* திருவாரூர், திருச்சி, சென்னை ஆகிய இடங்களில் கூட்டுறவு அச்சகங்கள் அமைக்கப்பட உள்ளன. கடலூர், ஈரோடு ஆகிய இடங்களில் இளநிலை கூட்டுறவுப் பயிற்சிப் பள்ளிகள் அமைக்கப்படும்.

* உதகையில் உள்ள சின்னக் கோரை, பிக்கெட்டி ஆகிய இடங்களில் தேயிலைத் தொழிற்சாலைகள் நிறுவப்படும்.

* பணிபுரியும் காலத்தில் இறந்த அரசு ஊழியர்களின் துணைவியருக்கு அவர்களது படிப்புக்கு ஏற்ப அரசுத் துறைகளில் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது. அந்தப் பெண்கள் மறுமணம் செய்து கொள்ள நேரிட்டால், அதற்காக அவர்களது வேலை பறிக்கப்படமாட்டாது என அரசு அறிவித்துள்ளது.

* மேல்நிலைப்பள்ளி வகுப்பு, பள்ளி இறுதி வகுப்பு ஆகியவற்றில் மாவட்ட அளவில் முதலாவதாகவோ இரண்டாவதாகவோ தேர்ச்சி பெற்றுத் தொழில் நுட்பக் கல்வி, தொழில் பயிற்சி பெறுவோர்க்குத் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா நினைவுப் பரிசுகளை வழங்க அரசு பரிசிலித்து வருகிறது.

* தமிழ் காக்கும் மொழிப்போரில் ஈடுபட்டுத் துப்பாக்கிச் சூட்டுக்கு ஆளாகியோர், தீக்குளிப்பு, சிறைவாழ்வு போன்ற தியாகங்களில் ஈடுபட்டவர்கள் ஆகியோரின் குடும்பங்களுக்குத் தமிழ்ப் புத்தாண்டு நாள் முதல் மாதம் ரூ.250 உதவித்தொகை வழங்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

* இலவசப் பாடப்புத்தகங்கள் மற்றும் நோட்டுப் புத்தகங்கள் வழங்கும் திட்டத்தை மறுமணம் புரிந்து கொண்ட விதவைகளின் குழந்தைகளுக்கும் விரிவுபடுத்த ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

* 'சதர்ன் சீஃபுட் லிமிடெட்' நிறுவனத்துடன் இணைந்து வர்த்தக ரீதியிலான உவர் நீர் மீன் பண்ணையைத் துவக்க தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்திற்கு அரசு அனுமதி அளித்துள்ளது.

* நாகப்பட்டினத்திற்கு அருகிலுள்ள 'வேட்டைக்காரன் இருப்பு' என்னும் இடத்தில் 200 எக்டேர் நிலத்தில் இப்பண்ணை நிறுவப்பட உள்ளது. இதில் நவீன குஞ்சு பொரிப்பகம் அமைக்கப்படும். நிலத்தடி நீர்வளம் குறித்த ஆய்வு முடிவுற்றவுடன் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

* உயிர் காக்கும் மருந்து சில நேரங்களில் மருத்துவமனைகளில் கிடைக்காமல் போய் விடுகிறது என்பதால் 24 மணி நேரமும் அத்தகைய மருந்து கிடைக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தினாலும், குறிப்பிட்ட விலையில் மருந்துகள் கிடைக்க வேண்டும் என்பதாலும் 24 மணி நேர மருத்துவக் கூடங்களை அரசே திறக்க முடிவு செய்துள்ளது.

* மூடிக்கிடக்கும் 'போர்ஜ்' தொழிலாளர்களுக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து தலா ரூ. 200 வீதம் 498 தொழிலாளர்களில் 484 தொழிலாளர்களுக்கு ரூ.96 ஆயிரத்து 800 வழங்கப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலையைத் திறப்பது குறித்து அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.




* அரசு மறுவாழ்வு இல்லத்தில் உள்ள பார்வையற்ற மகளிருக்கு வழங்கப்படும் அரசு உதவித் தொகையான ரூ.50 இவ்வாண்டு முதல் ரூ.90 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

* அனைத்துச் சத்துணவு மையங்களையும் நர்சரிப் பள்ளிகளாக மாற்ற அரசு தீர்மானித்தது. இதனடிப்படையில் இதுவரை 19 ஆயிரத்து 410 சத்துணவு மையங்கள் நர்சரிப்பள்ளிகளாக மாற்றப்பட்டு அவற்றுக்குத் தேவையான கல்வி உபகரணங்கள், வரைபடங்கள், புத்தகங்கள், விளையாட்டுச் சாமான்கள் உள்ளிட்டவை வழங்கப்பட்டுள்ளன. இந்த மையங்களில் உள்ள குழந்தைகள் நல அமைப்பாளர்களுக்கு சிறப்பு நர்சரிப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

* இதேபோல் மீதமுள்ள எல்லாக் குழந்தைகள் நல மையங்களும் 1987-88 ஆண்டில் நர்சரி பள்ளிகளாக மாற்றப்பட உள்ளன.

## தமிழ்நாட்டில் வீடுகட்டுபவர்களுக்கான விதிகள்

ஆக்கியோர்: ஆசிரியர் குழு
வெளியீடு: மணிமேகலைப் பிரசுரம்,
4, தணிகாசலம் ரோடு,
தியாகராய நகர்,
சென்னை-17.

பக்கம்: 92 விலை: 7.50

வீடு எப்படிப்பட்ட இடத்தில் கட்டப்படவேண்டும். கட்டடச் சுவர் எவ்வகைப் பொருளில் உருவாக்கப்படவேண்டும்; அடித்தளம் எப்படி அமைக்கப்பட வேண்டும், கடை, கிடங்குகள் எப்படி உருவாக்கப்படவேண்டும் என்பது போன்ற விவரங்களும் விதிமுறைகளும், இந்நூலில் தக்க விதத்தில் விளக்கப்பட்டுள்ளன. நகராட்சி அலுவலகத்தில் வீடு கட்ட அனுமதி கோரும்போது இணைக்கப்படும் வரைபடம் எந்த அளவில் தயாரிக்கப்பட வேண்டும். களிமண், செங்கல், சுண்ணாம்பு அல்லது சிமெண்ட் கலவை எந்த விகிதத்தில் இருக்க வேண்டும் என்பதும் மற்றும் பல்வேறு தகவல்களும் தெளிவாக்கப்பட்டுள்ளன. தொழில் நுட்பம் சார்ந்த இந்நூல் எளிய நடையில் அமைந்திருப்பது பாராட்டுக் குரியது.

## கனகாம்பரம்

ஆசிரியர் : கு.ப.ரா.

வெளியீடு: அல்லயன்ஸ் கம்பெனி
மயிலை,
சென்னை-600 004.

விலை : ரூ. 11.50 பக்: 160

தாய், கனகாம்பரம், விடியுமா பெண் மனம், தவறுகளோ தன்மைகளோ, குரலும் பதிலும் காதலே சாதல், எதிரொலி, திரை முதலிய 21 சிறுகதைகளைத் தன்னகத்தே பெற்றது, 'கனகாம்பரம்' என்னும் தொகுப்பு நூல்.

தன்னைப் பார்க்க வந்த நண்பனிடம் பேசிவிட்ட மனைவியைத் தவறாக எடைபோட்டுக் கோபித்துக் கொள்ளும் கணவனைப் பற்றியது 'கனகாம்பரம்' எனும் கதை.

கூட்டுக்குடும்பத்தின் சிறப்பைப் பேசுவது 'புரியும் கதை'.

மணிக்கொடி காலத்துச்சிறந்த எழுத்தாளர் கு.ப.ரா. அவருடைய சிறுகதைகள் எளிய நடையில் சமுதாயப் பிரச்னைகளை அழகாகப் படம் பிடித்துக்காட்டுகின்றன.

## உல்லாச வேளை

ஆசிரியர் : எஸ். வி. வி.

வெளியீடு: அல்லயன்ஸ் கம்பெனி
மயிலை,
சென்னை-600 004.

விலை : ரூ. 22. பக்: 296

தமிழில் வடசொற்களும் விரவி எழுதப்பட்ட காலத்தில் எழுந்த நாவல்.

இன்றைய இளைய சமுதாயம் போலி நாகரிகத்திலிருந்து வெளிவர வேண்டும் என்ற ஆசிரியரின் கருத்து புலப்படுகின்றது.

மொழிப்பற்று, நாட்டுப்பற்று வேண்டும்; சமூகசேவையில் பெண்




களும் ஈடுபடுதல் நல்லது தான் ஆனால், குழந்தை, கணவன், வீடு என்பதெல்லாம் மறந்து, சேவை செய்கிறேன் என்று வெளியே கிளம்பி விடுவது தவறு -பொருளற்றது; கல்வியறிவோடு அனுபவமும் விவேகமும் இணைந்தால் வாழ்க்கை சிறப்பாகப் பரிணமிக்கும் என்ற கருத்துக்கள் நயமாக நாகரிகமாக, ஏற்ற இடங்களில் சொல்லப்பட்டுள்ளன.

'உல்லாச வேளை' படித்துப் பயன் பெற்று மகிழத்தக்கதொரு நல்ல நாவல்.

—டாக்டர் சிவ அரசி
முத்துக்காளத்தி

சாகாவரம் பெற்ற புத்தகங்கள், அழியக்கூடிய புத்தகங்கள் என்று எதுவும் இல்லை; நன்றாக எழுதப்பட்டவை, மோசமாக எழுதப்பட்டவை என்று தான் உண்டு.

—ஆஸ்கார் ஒயில்டு

## பயிர் உணவு

ஆசிரியர்: ரமாவேல்சாமி,
வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்பிரைவேட்லிமிடெட்
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
சென்னை-600098.

பக்கம் 84 விலை:ரூ. 10

மனிதனின் இன்றியமையாத் தேவைகளில் முதலிடம் பெறுவது உணவு. பன்னெடுங்காலமாக உழவுத் தொழில் இருந்து வருகின்றது. இது மேம்பாடடைய, அதிக மகசூல் பெற்றிட, அதன் மூலம் அதிக இலாபம் ஈட்டிடத் தேவையான ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் இந்நூல் வழங்குகின்றது. அதுமட்டுமல்ல, பயிர்த் தொழிலுக்குத் தேவையான இரசாயன உரங்கள் குறித்தும், மண் பரிசோதனை, நீர்ப் பரிசோதனை விவரங்கள் குறித்தும் நிறைய விவரங்கள் உள்ளன.

உழவர் பெருமக்களுக்கு, வேளாண்மை பயிலும் மாணவர்க்குச் சிறந்த கையேடு இந்நூல்.

—பி.வி. கிரி

## நாடக மேதை பெர்னாட் ஷா!

ஆசிரியர் : சாமி பழனியப்பன்.

வெளியீடு: கமலாலயம்
ஏ-3 பூபதி நகர்
சென்னை—24.

விலை : ரூ. 8 பக்: 88.

அயர்லாந்தில் பிறந்து உலக முழுதும் புகழ் பெற்ற ஜார்ஜ் பெர்னாட்ஷா சிறந்த பத்திரிகையாளர், விமர்சகர், நாவலாசிரியர், தலைசிறந்த சீர்திருத்தக்காரர், நாடகாசிரியர் இவை அனைத்திற்கும் மேலாக அறிவுப் புரட்சிக்கு வித்திட்ட மாமேதை.

எளிய மற்றும் நீரோட்டமான நடையில் அந்த அறிஞரின் வாழ்க்கை நிகழ்ச்சிகளும் அவரின் சிந்தனையில் முகிழ்த்த கருத்துகளும் இடம் பெற்றுள்ளன.

ஷாவின் நாடகங்களைப் பற்றிய சிறுகுறிப்புகளும், அவர் மொழிந்த நகைச்சுவைகளும் இந்நூலுக்கு அணி சேர்க்கின்றன.

—வி. இராவணன்

## அனுபவ தையற்கலை

ஆசிரியர் : ஆ. சுகுமாரன்

வெளியீடு: உமாபதிப்பகம்
58, ஐயப்ப செட்டி
தெரு, மண்ணடி,
சென்னை-1.

விலை : ரூ. 25. பக்: 137

'ஆள்பாதி ஆடை பாதி' என்பது பழமொழி. தையற் கலையின் இன்றைய நாகரிக வளர்ச்சி பற்றி அழகுற விளக்கு கிறது இந்நூல்.

தையற்கலையில் ஈடுபட்ட தொழில் துறையினர்க்கும் ஆரம்ப நிலையிலுள்ளோர்க்கும், இல்லத்தில் இருந்தபடியே பொருளீட்ட விரும்பும் தாய்மார்களுக்கும் உறு துணையாக அமையவல்லது.

பெண்களின் உடற் கூற்றிலக் கணம் கூறி, அந்தந்த உருவத்துக் கேற்பத் தைக்க வேண்டிய முறை களும் கூறப்பட்டுள்ளன. அளவெடுக்கும் முறைகளும், மிக அருமையான படவிளக்கங் களுடன் செம்மையாகச் சொல் லப்பட்டுள்ளன.

## தமிழால் ஏலாதா?

ஆசிரியர் : ரகுநாதன்

வெளியீடு: நியூசெஞ்சுரி புக்
ஹவுஸ் பிரைவேட்
லிமிடெட்
41-பி, சிட்கோ
இண்டஸ்டிரியல்
எஸ்டேட்,
சென்னை-600 098.

விலை ரூ. 10. பக்:102

பல்வேறு கால கட்டங்களில் பலதிறப்பட்ட கவியரங்கங்களில் பங்கு பெற்றபோது, உள்ளத்தில் ஊறியெழுந்த உணர்ச்சிகள் கவிதை வடிவில் வெளிப்படுத்தப் பட்டுள்ளன.

'பாரதி கண்ட பொருளாதாரம்' 'நமது கம்பன்' 'போர்க் கோலம் பூண்டவரை நீர்க்கோலம் ஆக்கிடு வோம்' என்பன போன்ற கவிதைகள் நயம் நிறைந்தவை.

'மொழிவெறியை இன வெறியை மூட்டிவிட்டே ஒற்று மைக்குக் குழிபறிக்க முனை வார்க்குக் கொற்றவையாய் மாறிடுவாள்' பாரத அன்னை என்று மொழி- இன வெறிபிடித்த மக்களைச் சாடுகிறார், 'வாழிய பாரதம்' என்ற கவிதையில்.

தமிழால் ஏலாதது எதுவுமே இல்லை என்கிறார் 'திருச்சிற்றம் பலக் கவிராயர்' ரகுநாதன். கருத்தமைந்த நல்ல பல கவிதைகளின் தொகுப்பு நூல் இது.

—எம்.ஆர்.எஸ்.

## முக்கனி நோய்கள்

ஆசிரியர்: டாக்டர்
கா. சிவப்பிரகாசம்.
வெளியீடு: நியூ செஞ்சுரி புக்
ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்,
41.பி, சிட்கோ எஸ்டேட்,
சென்னை-600 098.

மா, பலா, வாழை ஆகிய முக் கனிகளின் சுவை நம்மால் ஒதுக்க முடியாததாகும். அக் கனிகளால் நம் உடலுக்கு ஏற்படும் நலன் களும் அளவிடற்கரியவைகளா கும்.

அப்படிப்பட்ட கனிவகைகளின் பெருக்கம் வளர்க்கப்பட வேண் டியது மட்டுமல்ல, காக்கப்பட வேண்டியதும் ஆகுமல்லவா?

அந்த மூவகைக் கனிகளையும் எவ்வகையான நோய்கள் தாக் கும்? அந்நோய்கள் வராமல் பாதுகாப்பது எப்படி? நோய்வந்த பின் என்ன செய்ய வேண்டும்? என்பன போன்ற வேளாண்மைக் கேள்விகளுக்கான விடைகளின் தொகுப்பாகவே இந்த நூல் விளங்குகிறது.

வேளாண்மைப் பல்கலைக்கழக ஆய்வுமையத்தில், பயிர் நோயி யல் துறைப் பேராசிரியராகப் பணி புரிபவர் நூலாசிரியர் என்ப தால், எழுத எடுத்துக்கொண்ட பொருளைச் சிறப்பாக விளக்கியி ருக்கிறார் நூலாசிரியர். மா, பலா, வாழை ஆகியவைகளை லட் சோப லட்சம் எக்டர் நிலப்பரப் பில் பயிரிடும் நம்நாட்டு வேளாண் மைத் துறையினர் படித்துப் பயன் பெறவேண்டிய நூல்.

—பி.எல்.ஆர்.

## இந்த தேசம் கைதாகிறது

ஆசிரியர்: சோம. குருமூர்த்தி.
வெளியீடு: வளர்தமிழ்ப் பதிப்ப
கம், 32, அண்ணா சாலை,
ஆழ்வார் திருநகர்,
சென்னை-600 087.

புதுக்கவிதைகள் இருபத்தைந் தின் தொகுப்பு நூலாகும் இது.

'கவிதைகளைக் காதுகள் கேட் டால் கூட - கருத்துகளைத்தான் அவை சுவீகாரம் எடுத்துக்கொள் கின்றன'.. 'அம்புகளா உன் பார் வைகள்? பாரடி, என் இதயத்தில் எத்தனை ரணங்கள்!'.. என்பன போன்ற இனிய வரிகள் இதயத் தில் இதம் சேர்க்கின்றன.

## முதுமையிலும் இளமையாய் இருப்பது எப்படி?

ஆசிரியர்: மலேஷியா வைத்திய
நாதன்
வெளியீடு: இமயம் பதிப்பகம்,
20, பெருமாள் தெற்கு வீதி,
நாகப்பட்டினம்- 611001.

விலை: ரூ. 8. பக்கம்:112.

'இயற்கையில் மரணமே கிடை யாது' என்று, ஜெர்மானிய தாவர சாஸ்திரியான 'நேகெலி' கூறுகிறார் என்று துவங்கும் இந் நூல், வயோதிகம் ஒரு வியாதி எனவும், அது வராமல் தடுத்துக் கொள்ளலாம் என்பதையும் ஆசி ரியர் இந்நூல் முழுவதும் விவரிக் கிறார்.

வழிமுறைகள் பலவற்றை ஒவ் வொரு அத்தியாயத்திலும் குறிப் பிடுகிறார்.

'முதுமையில் இளமை' தலைப் பிட்ட கட்டுரையில் 'நாம் முதுமை யைக் கண்டு பயப்படத் தேவை யில்லை. முதுமையில் அலாரம் வைத்து அதிகாலையில் எழுந்தி ருக்கத் தேவையில்லை. அவசர அவசரமாக உண்ண வேண்டிய தில்லை. சுதந்திரவாழ்க்கை நல்ல பொழுதுபோக்கு, சமூக விஷயங் களில் ஈடுபாடு, சரியான ஓய்வு ஆகியவை முதுமையின் வரப் பிரசாதங்கள் என்கிறார்.

தேகப் பயிற்சிகளும், சிரிப்பும் உடலுக்கு மிகுந்த ஆரோக்கி யத்தை அளிக்கவல்ல மா மருந் துகள் என்பது வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது.

முதுமையின் வாயிலில் காலடி வைப்போர் படித்துப் பயன் பெற வேண்டிய நூல்.

—அ. மருதவிநாயகம்

* உலகம் ஒரு புத்தகம்; வீட்டை விட்டு வெளியே செல்லாதவன் அந்த உன்னதப் புத்தகத்தில் ஒரே ஒரு புத்தகத்தை மட்டுமே படித்தவனாகிறான்.

—ஆக்ஸ்டைன்

* நாளுக்கொரு பயத்தை வெல் லாதவன் வாழ்க்கைப் புத்த கத்தின் முதல் பாடத்தையே படிக்காதவன் ஆவான்.

—எமர்சன்

# அறிவுச் சுடர்



* புகைப்படத் தொழிலில் பயன்படுத்தப்படும் ரசாயன உப்பு எது?

  சோடியம் தயோசல்பேட்

* நொதித்தல் உண்டாக்கப் படுவதின் காரணம் என்ன?

  —ஈஸ்ட்.

* சினிமா புரொஜக்டரைக் கண்டுபிடித்தவர் யார் ?

  அமெரிக்காவைச் சேர்ந்த எடிசன். 1893-ஆம் ஆண்டு கண்டுபிடித்தார்.

* கண் கண்ணாடியைக் கண்டு பிடித்தவர் யார்?

  இத்தாலி நாட்டைச் சேர்ந்து வெனிஸ் என்பவர் கண்டுபிடித் தார்.

* மைக்ரோ செகண்டு என்றால் என்ன?

  1 செகண்டில் 10 இலட்சத்தில் ஒரு பங்கு.

* தென்னிந்தியாவின் மிக உயர மான மலைச் சிகரம் எது?

  ஆனைமுடி.

* மகாத்மா காந்தி பிறந்த ஆண்டு, நாள் எது?

  1869 அக்டோபர் 2

* நாட்டின் எந்த வகை ரத்தம் உள்ளவர்கள் அதிகம் உள்ள னர்?

  சுமார் 45 சதம் மக்கள் 'ஓ' குருப் உள்ளவர்களாய் இருக் கிறார்கள்.

* ஸ்டதஸ்கோப் என்பதுஎன்ன?

  மருத்துவர்கள்இதயத் துடிப்பை அறிந்து கொள்ளப் பயன் படும் கருவி ஸ்டதஸ் கோப்.

* கணக்குகளைத் தானேகூட்டி, தானே விடைகூறும் எந்தி ரத்தைக் கண்டுபிடித்தவர் யார்? எப்போது?

  அமெரிக்காவைச் சேர்ந்த பரோஸ் என்பவரால், 1888-இல் கண்டுபிடிக்கப் பட்டது.

* துளசி இலையின் சாறுகட்டுப் படுத்தும் நோய்கள் யாவை ?.

  மூச்சுக் குழல் அழற்சி, வயிற்றுக் கோளாறு.

நெல்லிக்காயில் மிகுந்துள்ள சத்து எது?

  வைட்டமின் சி

* பயன்மிகு எண்ணெய்களுக்கு எடுத்துக் காட்டு தருக?

  டர்ப்பண்டைன், யூக்லிப்ட்டஸ்

* தொலைக்காட்சிப் பெட்டி யைக் கண்டுபிடித் தவர் யார்?

  ஜே.எல். பார்ட்.



# வேண்டும் வேண்டும்

-கிருஷ்ண முத்துராமலிங்கம்

அன்பாகப் பிறரிடம் இருக்க வேண்டும்! - தம்பி
அன்னையைப்பணிந்து போற்ற வேண்டும்!
பண்பாக இருக்கத் தெரிய வேண்டும்! - தம்பி
பணிவுடன் எதையும் செய்ய வேண்டும்!

வீட்டில் பெரியோரை மதிக்க வேண்டும்! - தம்பி
வேண்டாப் பழக்கம் ஒழிக்க வேண்டும்!
காட்டின் பெருமையைக் காக்க வேண்டும்! - தம்பி
நல்ல கருத்துகளை ஏற்க வேண்டும்!

உடுத்தும் உடையில் தூய்மை வேண்டும்! - தம்பி
உள்ளமும் தூ ய்மையாக இருக்க வேண்டும்!
எடுக்கும் செயலில் வெற்றி வேண்டும்! - தம்பி
எதற்கும் அஞ்சாமல் இருக்க வேண்டும்!

மனதினில் வீரத்தைக் கொள்ள வேண்டும்! - தம்பி
மங்காத புகழை அடைய வேண்டும்!
குணத்தில் சிறந்து விளங்க வேண்டும்! - தம்பி
குன்றின் விளக்காய்த் திகழ வேண்டும்!

# இந்திய விண்வெளி ஆராய்ச்சி வரலாறு




'ஸ்ரீஹரி கோட்டா'. ஆந்திர மாநிலத்தில் வங்கக் கடலோரம், புலிக்காட்டுஏரி - பக்கிங்காம் கால்வாய் - வங்காளவிரிகுடா இவற்றால் சூழப்பட்ட 40,000 ஏக்கர் நிலப்பரப்பு கொண்ட அழகிய தீவுதான் ஸ்ரீஹரி கோட்டா. இந்தியாவின் முக்கிய ஏவுகணைத் தளங்களுள் இதுவும் ஒன்று.

இங்கிருந்துதான் இந்தியாவின் ஏ.எஸ்.எல்.வி. ஏவுகணை மார்ச் 24-ஆம் நாள் விண்வெளியில் செலுத்தப்பட்டது.

இந்த ஏ. எஸ். எல். வி. சோதனை முழுக்க வெற்றி பெறவில்லை.

ஏவுகணையும், செயற்கைக் கோளும் பாதை தவறிக் கடலில் விழுந்து விட்ட போதிலும் ஏவுகணையில் மூடப்பட்ட சுற்றுவழி சாதனங்களின் தொகுப்பும், ஏவுகணையோடு இணைக்கப் பட்டிருந்த வானில் உயர்த்தும் சாதனங்களின் தொகுப்பும் சிறப்பாகச் செயல்பட்டன.

ஏவுகணை என்ஜினின் முதல் பகுதியில் உள்ள எரிபொருளில் நெருப்பு பற்றாததுதான் இந்தச் சோதனை முயற்சி தோல்வி அடையக் காரணம் என அறிவியல் அறிஞர்கள் கண்டறிந்துள்ளனர். எரிபொருளில் நெருப்பைப் பற்ற வைப்பதற்கான கட்டளை சிறப்பாக வழங்கப்பட்டது.

எனினும் இன்னும் ஓராண்டு காலத்தில் அடுத்த, திறன், அதிகரிக்கப்பட்ட செயற்கைக் கோள் ஏவும் ஏவுகணை (ஏ.எஸ். எல். வி.) வானில் செலுத்தப்பட உள்ளது.

நம்நாட்டு விண்வெளிஆராய்ச்சியினை மூன்று பெரும்பகுதிகளாகப் பிரிக்கலாம். இதில் முதலாவதாக இடம் பெறுவது செயற்கைக் கோள்கள் தயாரிப்பு. வானூர்திகள் தயாரிப்பு அல்லது ஏவுகணைகள் தயாரிப்பு இரண்டாவதாகும். மூன்றாவதாக இருப்பது விண்வெளி ஆராய்ச்சியின் பயன்களை மக்களுக்குக் கிடைக்கச் செய்வதாகும்.

இவற்றில் செயற்கைக்கோள்கள் தயாரிப்பிலும் விண்வெளி ஆராய்ச்சியின் பயன்களை நுகரச் செய்வதிலும் பெருமளவு நாம் முன்னேறிவிட்டோம். ஆர்யபட்டா செயற்கைக் கோளை நம்நாட்டிலேயே தயாரித்துவிட்டோம். சைட் ( SITE ) எனும் தொலைக்காட்சிச் சோதனைகள் மூலம் தொலைக்காட்சியின் தொலைதூர கிராமங்களை இணைக்கும் திறனை உலகுக்கு உணர்த்தி உள்ளோம். ஆயினும் செயற்கைக் கோள்களை விண்ணில் எடுத்துச் செல்லும் முயற்சியில் இப்போதுதான் படிப்படியாக முன்னேறி வருகிறோம்.

இதற்குப் பின்னர் PSLV எனும் ஏவுகணையும் அதன் பின் GSLV எனும் ஏவுகணையும் செலுத்தப்பட உள்ளன. இவற்றிற்கான வடிவமைப்புப்பணிகளும் ஆயத்தப் பணிகளும் தொடங்கி விட்டன. 1990 அல்லது 1992 ஆம் ஆண்டுவாக்கில் GSLV மூலம் நமது நாட்டிலேயே தயாரிக்கப்பட்டு வரும் இன்செட-2 Service செயற்கை கோள்கள் நமது மண்ணிலிருந்து விண்ணில் ஏவப்பட உள்ளன.

நம் நாட்டு விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் பல பிரிவுகள் நாடெங்கும் அமைந்துள்ளன. பெங்களூரைத் தலை

மையிடமாகக் கொண்ட இந் நிறுவனத்தின் ஏவுகணை ஆராய்ச்சிப் பிரிவு, திருவனந்த புரம் அருகே தும்பாவில்உள்ளது. தும்பா வளரும் நாடுகளின் ஏவு கணை நிலையமாக ஐக்கிய நாடுகள் சபையால் அங்கீகரிக்கப் பட்டுள்ளது. ஆனால் இவை RH 560 எனும் இரண்டு அடுக்கு ஏவுகணைகள். வானிலை ஆய்வுக் கென்றே பயன்படுபவை. பெங்க ளூரிலுள்ள செயற்கைக்கோள் ஆய்வு நிலையத்தில்தான் ஆர்ய பட்டா, பாஸ்கரா, ரோகிணி ஆப்பிள் செயற்கைக்கோள்கள் வடிவமைக்கப்பட்டு தயாராயின. இன்செட்-1 வடிவமைக்கப்பட்ட இடம் பெங்களூர். ஆனால் இதனை அமெரிக்க நிறுவனம் தயாரித்தது. தற்போது இன் செட்-2 செயற்கை கோள்கள் நமது நாட்டிலேயே தயாரிக்கப் பட்டு வருகின்றன. அடுத்து, ஸ்ரீஹரிகோட்டாவிலுள்ள ஏவு கணைத்தளம் உலகின் அற்புத ஏவுகணைத் தளங்களுள் ஒன் றாகும். இது இந்தியாவின் கேப் கென்னடி என அழைக்கப்படு கிறது.

செயற்கைக் கோள்களில் தவறுகள் ஏற்பட்டால், அவை பாதை தவறினால் சரி செய்யக் கூடிய கட்டுப்பாட்டு நிலையம் கர்நாடக மாநிலத்திலுள்ள ஹசேனில் உள்ளது. ஆமதா பாத்திலுள்ள விண்வெளி ஆய்வு பயன்பாட்டு நிறுவனம் Space application centre எப்படி யெல்லாம் விண்வெளி ஆய்வின் பயனை மக்கள் நுகர முடியும், எனும் ஆய்வில் முனைந்துசெயல் படுகிறது. இவை தவிர நாட்டி லுள்ள பல பல்கலைக்கழகங்கள் இந்திய தொழில் நுட்ப நிறு வனங்கள், பொதுத்துறை நிறு வனங்கள், ஆராய்ச்சி நிறுவ னங்கள், தனியார் நிறுவனங்கள் இவையும் விண்வெளி ஆய்வில் ஈடுபட்டுள்ளன.

அமெரிக்காவிலிருந்தும் பிரான் சிலிருந்தும் ஏவுகணை செலுத்தும் சாதனங்கள் (Rocket Launchers) அமெரிக்க, பிரெஞ்சு நாடு கள் ஏவுகணைகளைப் படம் பிடிக்க பிரெஞ்சு காமிராக்கள், செயற்கைக் கோள்கள் அனுப்பிய தகவல்களைப் பகுக்க ரஷிய மின்ஸ்க்-2 கம்ப்யூட்டர்கள், செயற்கைக் கோளில் வைத்து அனுப்ப விஞ்ஞானக் கருவிகள் இவ்விதம் சர்வ தேச முயற்சி யாக இந்திய மண்ணிலிருந்து 1963-ஆம் ஆண்டு நவம்பர் 21ம் நாள் முதல், ஏவுகணைகள் வானில் செலுத்தப்பட்டபோது இந்தியா விண்வெளியுகத்தில் அடி யெடுத்து வைத்தது. ஐ.நா. ஆதர விலான திட்டத்தின் கீழ் இந்தச் சிறிய ஏவுகணைகள் இந்தியா வின் மேற்குக்கரையில் கேரள மாநிலத்தில் உள்ள தும்பா என்னு மிடத்திலிருந்து விண்வெளியில் செலுத்தப்பட்டன.

அதனைத் தொடர்ந்து 20 ஆண்டுகளில் இந்தியா பிற வள ரும் நாடுகளுடன் ஒப்பிடுகையில் விண்வெளித்துறையில் பெருத்த முன்னேற்றம் அடைந்துள்ளது. தற்போது செயற்கைக் கோள் களைச் செலுத்தும் திறன் கொண்ட பல அடுக்கு ஏவுகணை களை உருவாக்கி வருகிறது.

இந்திய அரசு 1970-ஆம் ஆண் டில் விண்வெளி ஆராய்ச்சி வளர்ச்சி நடவடிக்கைகளுக்கென பத்தாண்டுத்திட்டம் ஒன்றை வகுத்த பின்னர்தான் விண்வெளி துறையில் சிறப்பான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 1970 லிருந்து 1980-ஆம் ஆண்டுவரை யிலான 10 ஆண்டு காலத்தில் இந்தியா பல செயற்கைக் கோள் களை உருவாக்கியது என்பதும் செயற்கைக் கோள்களைச் செலுத்தும் ஏவுகணைகளை உரு வாக்கியது என்பதும் குறிப்பிடத் தக்க சாதனைகளாகும்.

**ஆர்யபட்டா**

இந்தியா உருவாக்கிய முதல் செயற்கைக் கோளான 'ஆர்ய பட்டா' 1975 ஏப்ரல் 19-ஆம் நாளன்று விண்வெளியில் வெற்றி கரமாகச் செலுத்தப்பட்டது. பெங்களூரில் இந்திய செயற்கைக் கோள் கேந்திரத்தில் தயாரிக்கப் பட்டது என்றாலும் இதனை விண்வெளியில் செலுத்தும் திறன் கொண்ட காரணத் தால், பெங்களூரிலிருந்து பல ஆயிரம் மைல்களுக்கு அப்பால் ரஷியாவில் உள்ள விண்வெளிக் கேந்திரத்திலிருந்து ஆர்யபட்டா விண்வெளியில் செலுத்தப்பட் டது. பல அடுக்கு ஏவுகணைகளை உருவாக்கிக் கொள்ளும்வரை காத்திராமல் செயற்கைக்கோள் தொழில்நுட்பத்தைப் பெற வேண்டும் என்ற உத்திமுறையை இந்தியா பின்பற்றி ரஷியாவுட னான நட்புறவைப் பயன்படுத்திக் கொண்டு ஆர்யபட்டாவை விண் வெளியில் செலுத்தியது.

ரூ. 5 கோடி செலவில் 25 மாதங்களில் உருவாக்கப்பட்டது இந்த செயற்கைக்கோள். 12,000



மின்னணுக் கருவிகளையும் நூற்றுக்கணக்கான சூரிய மின்கலன்களையும் கொண்ட ஆர்யபட்டா 8,000 முறை பூமியைச் சுற்றி வந்தது. 6 திங்கள் வரைதான் என்று கருதிய போதிலும் சுமார் 4 ஆண்டுகள் வரையிலும் இதன் பணி தொடர்ந்தது.

இந்தியா பின்னர் செலுத்த விருந்த பயன்பாட்டுச் செயற்கைக் கோளுக்கு முன்னோடியாக அமைந்தது.

**பாஸ்கரா-1**

இந்தியாவின் இரண்டாவது செயற்கைக் கோள் இது. 1979-ம் ஆண்டு ஜுன் 7-ஆம் நாள் சோவியத் விண்வெளி நிலையத்திலிருந்து சோவியத் ஏவுகணை மூலம் செலுத்தப்பட்டது. இதன் எடை 432 கிலோகிராம். இந்தியப்பகுதியிலுள்ள நீர்வளம், நிலவளம், வனவளம், வானிலை தொடர்பான தகவல்களை அறிய இக்கோள் அனுப்பிய படங்கள் உதவின. எதிர்பார்ப்புக்கு மேலாக இது 2 ஆண்டுகள் செயல்பட்டது.

**ரோகிணி**

ஸ்ரீஹரிகோட்டா விண்வெளி நிலையத்திலிருந்து எஸ்.எல்.வி.3 என்ற ஏவுகணை மூலம் 18.7.1980 அன்று செலுத்தப்பட்டது. இதன் எடை 35 கிலோகிராம். இந்திய மண்ணிலிருந்து முதன் முதலாக இந்திய ஏவுகணையைப் பயன்படுத்திச் செலுத்தப்பட்ட முதல் செயற்கைக் கோள் இதுதான்.

**ரோகிணி-டி 1**

38 கிலோ கிராம் எடை கொண்ட இச்செயற்கைக் கோள் எஸ்.எல்.வி.3 ஏவுகணை மூலம் ஸ்ரீஹரிகோட்டாவிலிருந்து 31.5.1981 அன்று செலுத்தப்பட்டது.

**ஆப்பிள்**

ஐரோப்பியவிண்வெளி அமைப்பானது ஏரியேன் ( (Ariene ) எனப்படும் ஏவுகணையை வெற்றிகரமாக இயக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தது. சோதனை அடிப்படையில் இந்த ஏவுகணையைச் செலுத்துகையில் இதன் முகப்பில் நமது செயற்கைக் கோளை வைத்து இலவசமாக விண்வெளியில் செலுத்தத் தயாராக இருப்பதாக அந்த அமைப்பு அறிவித்திருந்தது. அதைப் பயன்படுத்திக் கொண்டு 'ஆப்பிள்' செயற்கைக்கோள் 19.6.81 அன்று விண்வெளியில் ஏவப்பட்டது. ஏரியேன் ஏவுகணையில் மூன்று செயற்கைக் கோள்களை வைத்து அனுப்பும் சோதனை முறை திட்டமானது ( Ariene Passenger Hyload Experiment ) என்று குறிப்பிடப்பட்டது. இந்த சொற்றொடரில் உள்ள ஒவ்வொரு முதல் எழுத்தையும் ஒன்று சேர்த்து இத்திட்டம் சுருக்கமாக ஆப்பிள் ( Apple ) என அழைக்கப்பட்டது. எனவே ஏரியேனில் வைத்து அனுப்புவதற்காக இந்தியா தயாரித்து அளித்த இணைச்சுற்று செயற்கைக் கோளுக்கும் 'ஆப்பிள்' என்ற பெயர் ஏற்பட்டுவிட்டது.

ஆப்பிள் இந்தியாவின் முதல் தகவல் தொடர்புக் கோளாகும்.

உலக நாடுகளின் எண்ணிக்கையில் 7 நாடுகள் மட்டும்தான் செயற்கைக்கோள்களை விண்வெளிக்கு அனுப்பிச் சோதனை புரிந்துள்ளன. அவற்றில் நமது இந்தியாவும் ஒன்று. மற்றவர்கள் அக்கோள்களை வேவு பார்ப்பதற்கும் போர்ப் பணிகளுக்கும் பயன் பயன்படுத்துகின்றனர். ஜப்பானும் இந்தியாவும் மட்டுமே ஆக்க பூர்வ மற்றும் அமைதிப் பணிகளுக்குப் பயன்படுத்துகின்றன.

**பாஸ்கரா-2**

ரஷ்ய விண்வெளித் தளத்திலிருந்து 20.11.1981 அன்று ஏவப்பட்ட இச்செயற்கைக் கோள் 6 இலட்சம் சதுர கிலோ மீட்டர் நிலப்பரப்பை உள்ளடக்கிய வரைபடங்களை எடுத்து அனுப்பியது. பூமியை 28 மாதங்கள், ஏறத்தாழ 1 1,044 தடவை சுற்றியது.

**இன்சாட் 1ஏ**

வானொலிஒலிபரப்பு, தொலைக்காட்சி ஒளிபரப்பு, தொலைபேசி, தொலைதூரத் தகவல் தொடர்பு வானிலை ஆகியவற்றிற்காக 10.4.1982 அன்று அமெரிக்க கென்னடிமுனை ஏவுகணை தளத்திலிருந்து செலுத்தப்பட்டது.

**ரோகிணி-டி 2**

ரோகிணி வரிசையில் ஸ்ரீஹரி கோட்டாவிலிருந்து எஸ்.எல.வி. ஏவு கணைமூலம் 17.4.1983 அன்று விண்வெளியில் ஏவப்பட்டது. முன்னாள் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்கள் ஸ்ரீஹரி கோட்டாவிற்கு வந்திருந்து இந்த செயற்கைக் கோள் செலுத்தப்படுவதை நேரில் பார்த்து, ''இந்தச் சாதனை இந்தியாவிற்கும் இந்திய விஞ்ஞானிகளுக்கும் பெருமை தேடித்தரும்'' என்றார்.



இன்சாட் 1பி

அமெரிக்க நாட்டின் கேப் கானவராவ் ஏவுகணை தளத்தி லிருந்து 30.8.1983 அன்று இச் செயற்கைக்கோள் செலுத்தப் பட்டது. அமெரிக்க 'சேலஞ்சர்' எனும் விண்வெளி ஓடம் இதை எடுத்துச் சென்றது. தொலை தூரத் தகவல் தொடர்பு, தொலைக்காட்சி, வானிலை அறி விப்பு ஆகிய 3 குறிக்கோள்களுக்கு இது பெரிதும் பயன்படுகிறது.

## ஏவுகணை செலுத்தப்படும் விதம்

ஏறத்தாழ 100 அடிக்குமேல் உயரம் கொண்ட ஒரு கட்டடத் தில் ஏவுகணை இணைக்கப்படு கிறது. ஏவுகணை தளப்பகுதியில் உள்ள ஒரே ஒரு கட்டடம் அது தான். ஏவுகணை திசைமாறி அக்கட்டடத்தின்மீது வந்து விழுந்தாலும் தாங்கி நிற்கக் கூடிய அளவுக்கு அது உறுதி படைத்தது. இவ்வளவு பெரிய கட்டடம் குளிர்சாதன வசதி கொண்டது. அதில் லிப்டுகள் உண்டு. Clean Room எனப் படும் தூசியே இல்லாத அறை உண்டு. இக்கட்டடத்தின்உள்ளே பொறியாளர்களும், வல்லுநர் களும் செயல்புரிந்து வருவர்.

இம்மாதிரி ஏவுகணைகள் செங்குத்தாக இணைக்கப்படுவது உலகிலேயே இதுதான் முதல் முறையாகும். சாதாரணமாக நெடுஞ்சாண் கிடையாக இணைக் கப்பட்டு பின்னர் செங்குத்தாக நிறுத்தப்படும்.

ஏவுவதற்கு சிலமணிநேரங்கள் முன்னதாக ஏவுகணையைப் பிடித்து நிறுத்தியுள்ள இரும்பு சக்கரங்கள் அகன்று அந்தக் கட்டடம், சக்கரங்களின் துணை யோடு அப்படியேஇடம்பெயர்ந்து சில நூறு அடிதூரம் தள்ளிச் செல்லும். ஏவுகணைமட்டும் அங்கேயே தனித்து விடப்படும். ஏவுகணை செலுத்துவதற்கு 3 மணி நேரம் முன்பாக அதன் பல பகுதிகளும் மீண்டும் நன்கு பரிசோதிக்கப்படும். ஏவுகணை புறப்பட ஒரு சில நிமிடங்கள் இருக்கும்போது இந்நிலைய தலைமைப் பொறுப்பாளர் ஒவ் வொரு பகுதியின் தயார்நிலை பற்றியும் அதற்கு பொறுப்பாளர் களிடம் 'மைக்'மூலம் கேட்டுபதில் பெறுவார். மேலும் இந்த ஏவு கணையில் சுமார் ஒரு இலட்சம் மின்னணுக்கள் உண்டு. ஏவு கணை புறப்படுவதற்கு முன்ன தாக கம்யூட்டர் ஒன்று இந்த ஒரு இலட்சம் கருவிகளையும் பரி சோதித்து தனது முடிவைத்தெரி விக்கும். பின் அதுவரை ஏவு கணையின் உட்புறக் கருவிகளுக்கு விசை அளித்துவந்த கேபிள்கள் விடுபட்டு, ஏவுகணை தன்னுள் கிடைக்கிற விசையைப் பெற ஆரம்பிக்கும். பொத்தான் அழுத்தப்பட்டதும் ஏவுகணை யினுள் உள்ள எரிபொருள் பற்றிக் கொள்ள அதன் அடிப்புறத்தி லிருந்து ஆரஞ்சு, சிவப்பு நிற தீப்பிழம்புகள் வெளிப்படும்.

சிலவினாடிகளில் ஏவுகணை எங்கும் எதிரொலிக்கும் சப்தத் துடன் மெதுவாக, கம்பீர மாக செலுத்துமேடையிலிருந்து விண்ணை நோக்கி எழும். பிறகு அதன் வேகம் அதிகரிக்கும்.

## ஏவுகணை செயல்படும் விதம்

ஒவ்வொரு செயலுக்கும் சம அளவில் எதிர்ச் செயல் உண்டு என்ற தத்துவத்தின் அடிப்படை யில் ஏவுகணை இயங்குகிறது. எரியும் வாயுக்கள், ஏவுகணையி லிருந்து வேகமாக வெளிப்பட அதன் எதிர்ச் செயலாக ஏவு கணை மறுபுறத்தில் அதாவது உயரே பாய்கிறது.

செயற்கைக்கோள் ஒன்று விண் வெளியில் செலுத்தப்பட வேண்டுமானால் அது குறைந்த பட்சம் மணிக்கு 18,000 மைல் வேகத்தில் செலுத்தப்பட்டாக வேண்டும். இந்த வேகம் காரண மாக பூமியின் ஈர்ப்பு சக்தி யிலிருந்து விடுபட்டு செயற்கைக் கோள் பூமியில் விழாமல் தொடர்ந்து பூமியைச் சுற்றி வரும்.

செயற்கைக்கோளைச் செலுத்து வதற்கு ஒற்றை அடுக்கு ஏவு கணை பயன்படுத்துவதில்லை. காரணம் மணிக்கு 18 ஆயிரம் மைல் வேகத்தை அதனால் எட்ட முடியாது. எனவேதான் பல அடுக்கு ஏவுகணைகள் பயன் படுத்தப்படுகின்றன.

## விண்வெளியில் இந்தியச்சாதனை

**சோவியத் நாட்டின் விண்வெளி வீரர்கள் இருவருடன் இந்திய விமானி ராகேஷ் சர்மா 3.4.84 அன்று சோயுஸ் டி-11 என்ற விண்வெளிக் கலத்தில் புறப்பட்டு, புறவெளியில் வலம் வந்து கொண்டிருந்த சல்யூத்-7 விண் வெளி நிலையத்துடன் இணைந்து, பிறகு சோயூஸிலிருந்து சல்யூத் திற்கு மாறிச் சென்று அங்கு ஆய்வுகள் நடத்தி 11.4.84அன்று வெற்றிகரமாக பூமியில் வந்திறங்கிய நிகழ்ச்சி இந்திய விண்வெளி ஆராய்ச்சி வரலாற் றில் ஒரு மைல் கல்.**

பலஅடுக்கு ஏவுகணையில் முதல்அடுக்கு சில வினாடிகளில் முற்றிலுமாக எரிந்து தீர்ந்து கழன்றுவிடும்போது ஏவுகணை யின் எடைபெரிதும் குறைகிறது. 'சாடர்ன்-5' ஏவுகணை ஒவ் வொரு வினாடியும் 13,600கிலோ எரிபொருளை எரித்துத் தீர்க்க, முதல் 10 வினாடியில் அதன் 1,36,000 கிலோ குறைந்தது. இதிலிருந்து ஏவுகணையின் மொத்த எடை எந்த அளவு வேகத்தில் குறைகிறது என்பதை அறிந்து கொள்ளளாம். முதல் அடுக்கு கழன்று, இரண்டாவது அடுக்கு செயல்பட ஆரம்பிக்கும் போது ஏவுகணையின் வேகம் மேலும் அதிகரிக்கிறது. கடைசி அடுக்குக் கழன்று விழுந்த பின் இறுதியில் செயற்கைகோள் 18 ஆயிரம் மைல் வேகத்தில் விண் வெளியின் சுற்றுப்பாதையை அடைகிறது. இவ்விதம்ஏவுகணை தரையிலிருந்து புறப்பட்ட சில நிமிடங்களில் சுற்றுப்பாதையை அடைகிறது.

ஒரு செயற்கைக்கோளை பூமியின் சுற்றுப்பாதையில் செலுத்திய பிறகு ஏவுகணையின் பணி முடிந்து விடுகிறது. அதன் பின் ஏவுகணைக்கும் செயற்கை கோளுக்கும் எவ்விதத் தொடர்பு மில்லை. செயற்கைக்கோள் பிறகு இயற்கையின் விதிகளுக்கு உட்பட்டு, பூமியைச் சுற்ற ஆரம் பிக்கும்.

செயற்கைக்கோள் பூமியைச் சுற்றிசுற்றி வந்து கொண்டிருக்க, அதற்கு எவ்வித எரிபொருளும் தேவையில்லை. பூமியைத் தொடர்ந்து, பல நாட்கள் பல மாதங்கள் அல்லது பலஆண்டுகள் சுற்றி வந்து கொண்டிருக்கும் செயற்கைக்கோளில் என்ஜின் எதுவும் வைக்கப்படுவது கிடை யாது. என்ஜின் இல்லை என்ப தால் எரிபொருளும் தேவை யில்லை. செயற்கைக் கோளை விண்வெளியில் செலுத்துகிற ஏவுகணையில் ஒரு நாற்காலி யையோ, ஒரு பெட்டியையோ வைத்து விண்வெளியில் செலுத்தி னால் அது ஒரு செயற்கைக் கோளாகி பூமியைத் தொடர்ந்து சுற்றிக் கொண்டிருக்கும். இது எப்படி சாத்தியமாகும்?

சூரியனைச் சுற்றி வர பூமிக்கோ, புதன், சுக்கிரன், செவ்வாய் போன்ற இதர கிரகங் களுக்கோ எவ்விதம் என்ஜினும், எரிபொருளும் தேவை யில்லையோ அதேபோல மனிதன் விண்வெளியில் ஏவும் எந்த செயற்கைக் கோள்களுக்கும் தேவையில்லை.

தொகுப்பு:
**வி. இராவணன்**



# சித்திரச் சோலையில் சித்திரைச் சேலைகள்

**சித்திரை பிறந்தது!**

**முத்திரை பதிக்கும் கைத்தறிக் கண்காட்சியும் தொடங்கியது!**

'33-வது கைத்தறி வார விழா 87' ஏப்ரல் திங்கள் 4-ஆம் நாள் சென்னை எழும்பூர் பாந்தியன் சாலையில்உள்ள கோ-ஆப்டெக்ஸ் கட்டட வளாகத்தில் கோலாகலமாக நடந்தது.

கண்ணைக் கவரும் வண்ணத் துணிகள் நிறைந்த காட்சி அரங்குகளைப்பார்க்கும்போது, சிந்திரச் சோலையோ என மெய்மறக்கச் செய்தது. தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் தயாரிக்கப்பட்ட துணிகளை எல்லாம் ஒரே இடத்தில் பார்க்கின்ற வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்துள்ளது கோ-ஆப்டெக்ஸ்.

அன்று மாலை நடந்த தொடக்க விழாவுக்கு, கோ ஆப்டெக்ஸ் தனி அலுவலர் அனகாபுத்தூர் திரு சி. இராமலிங்கம் அவர்கள் தலைமை வகித்தார். அப்போது அவர் பேசுகையில்—

''கைத்தறித் துணிகளின் தேக்கத்தினால் நெசவாளர்கள் படும் துன்பத்தைப் போக்க மத்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.

கோ-ஆப்டெக்ஸ் மேலாண்மை இயக்குநர் திருமதி ரதிவினய்ஜா அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

கைத்தறி மற்றும் நெசவாலைத்துறை இயக்குநர் திரு கே. மலைச்சாமி இ.ஆ.ப., அவர்கள் பேசுகையில்—

''தனியார் பிடியிலிருக்கும் நெசவாளர்களையும், கூட்டுறவுச் சங்கங்களின்கீழ் கொண்டு வர முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்'' என்றார்.

மத்தியக் கைத்தறி வளர்ச்சித் துறை ஆணையர் 'திரு அக்னி ஹோத்ரி அவர்கள் பேசுகையில்-

''நாடு முழுமைக்குமான கைத்தறித் துறைபற்றிக் கணக்கெடுப்பு நடைபெற்று வருகிறது. அந்தப் பணி முடிந்ததும், அந்தப் புள்ளி விவரங்களைக் கொண்டு கைத்தறித் துறை வளர்ச்சிக்கெனப் புதிதாகத் திட்டங்கள் தீட்ட முடியும்'' என்றார்.

மாண்புமிகு நிதி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் டாக்டர் நாவலர் திரு இரா. நெடுஞ்செழியன் அவர்கள் விழாவினைத் தொடங்கி வைத்தார். அப்போது அவர் பேசுகையில் குறிப்பிட்டார்:

'இந்தியா முற்றிலும் தொழில்மயமான நாடாக மலரும் வரை, கைத்தறி போன்ற தொழில்கள் நசித்து விடாமல் காப்பாற்ற மத்திய, மாநில அரசுகள் இயன்ற உதவிகளைச் செய்து வரும். தமிழ் நாட்டில் 5 இலட்சத்து 86ஆயிரம் கைத்தறிகள் உள்ளன. 35லட்சம் மக்கள் கைத்தறியை நம்பி வாழ்கின்றனர். இந்தியாவில் உள்ள கைத்தறியில் 4-ல் ஒரு பங்கு தமிழகத்தில் உள்ளது.

''கூட்டுறவு முறை வெற்றி பெற, நெசவாளர்களிடம் கூட்டுறவு மனப்பான்மை மேலோங்கி இருக்க வேண்டும். அனைத்து நெசவாளர்களும் கூட்டுறவுச் சங்கங்களின் கீழ் வந்தால்தான், உழைப்பின் முழுப்பலனையும் அவர்கள் நுகர முடியும்.

''ஆலைத் துணிகளுக்குத் தருகின்ற முக்கியத்துவத்தை மக்கள் கைத்தறித் துணிகளுக்கு அளித்து கைத்தறிக்கு நமது நாட்டிலேயே நல்ல மார்க்கெட்டை ஏற்படுத்தித் தரவேண்டும்.''

கைத்தறித் துணிகளில் பெரும் பகுதி விற்பனை, தீபாவளி மற்றும் பொங்கல் ஆகிய இவ்விரண்டு திருவிழாக் காலங்களில் நடைபெறுகிறது. பொங்கலுக்கு அடுத்து 9 அல்லது 10 மாதங்களுக்குப் பிறகுதான் தீபாவளி வருகிறது. இக்காலத்தில் கைத்தறி ஜவுளிகளின் விற்பனை அதிக அளவில் நடப்பதில்லை. எனவே, கூட்டுறவுத் துறையில் செயல்படும் கைத்தறிநெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்புத் தருவதற்காகப் பொங்கலுக்கும், தீபாவளிக்கும் இடைப்பட்ட காலத்தில் தயாராகும் கைத்தறித் துணிகளின் விற்பனைக்கு, ஒரு கைத்தறிக் கண்காட்சி ஏற்பாடு செய்வது மிகவும் அவசியம் ஆகும் என்பதைக் கருத்தில் கொண்டே 1950-ஆம் ஆண்டு முதல் கைத்தறிக் கண்காட்சி தொடங்கப்பட்டு இன்றளவும் சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது.

ஒவ்வோரு ஆண்டும் சென்னை மாநகரம், மாவட்டத் தலை நகர்கள் மற்றும் முக்கிய நகரங்களில் கைத்தறிக் கண்காட்சிகள் நடத்தப்படுகின்றன. இவ்வாண்டு சென்னை பாந்தியன் சாலையில் அமைந்துள்ள கோ-ஆப்டெக்ஸ் கண்காட்சித் திடலிலும் மற்றும் காஞ்சிபுரம், மதுரை, விருதுநகர், திண்டுக்கல், திருநெல்வேலி, நாகர்கோவில், சேலம், கோயம்புத்தூர், ஈரோடு, திருச்சி, தூத்துக்குடி, கும்பகோணம், வேலூர் ஆகிய முக்கிய நகர்களிலும் கைத்தறி விழா நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கோ-ஆப்டெக்ஸ், தமிழ்நாட்டின் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், தமிழ்நாட்டின் தீவிர கைத்தறி வளர்ச்சித்திட்ட அமைப்புகள், பாண்டிச்சேரி, மாநிலக் கைத்தறி நிறுவனம், ஆப்கோ, கைத்தறி மாளிகை, உத்திரப் பிரதேசம், அரியானா கைத்தறி நிறுவனங்கள் ஆகியவை கண்காட்சியில் இடம் பெற்றுள்ளன.

கண்காட்சியில் பின்வரும் இரகங்கள் பார்வைக்காகவும், விற்பனைக்காகவும் வைக்கப்பட்டுள்ளன: (1) பருத்திச்சேலைகள் (2) பட்டுப் புடவைகள், (3) போர்வைகள் மற்றும் திரைச் சீலைகள், (4) சட்டைத்துணிகள் (5) வேட்டிகள், (6) லுங்கிகள், (7) துண்டுகள், (8) ஆயத்த ஆடைகள், (9) அச்சிட்ட துணி இரகங்கள் (10) ஆடைத் துணி வகைகள், (11) மற்ற கைத்தறித் துணிவகைகள்.

கண்காட்சித் திடலில், 1986-ல் ரூ. 225 இலட்சத்துக்கு விற்பனையாயின. இவ்வாண்டு எதிர்பார்க்கப்படும் விற்பனை ரூபாய் 250 இலட்சமாகும்.

இவ்வாண்டு அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய இரகங்களில் ஒன்று, 'சித்திரைச் சேலைகள்', இது ஒரு புதிய அச்சிட்ட பருத்தி சேலையாகும். இந்தச் சேலை இரகம், மென்மையான பருத்தி நூலினால் திருச்சி, சேலம், கோயம்புத்தூர் ஆகிய பகுதிகளில் தயாரிக்கப்படுகின்றன.



இந்தச் சேலைகளுக்கு அழகூட்டுவதற்காக இலேசான வண்ணங்களின் அடிப்படையின் ( Back ground ) மீது சிறப்பான வடிவங்கள் அச்சிடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

சித்திரை மாதமாகிய கோடைப் பருவத்திற்கு இச்சேலைகள் ஏற்றதாக இருப்பதால், அழகு மிக்க மெல்லிய பருத்தி நூலில் தயாரிக்கப்பட்டுள்ள இச்சேலைக்குச் 'சித்திரைச் சேலைகள்' என்று பெயரிடப்பட்டுள்ளது பொருத்தம் தானே?

இன்னொரு புதிய இரகம், பாலியஸ்டர் புதுமையான பைகள் கைத்தறியில் ஒரு புதிய படைப்பினை கோ-ஆப்டெக்ஸ் 1986-87 ஆம் ஆண்டில் வெளியிட்டுள்ளது. பாலியஸ்டர் சூட்டிங் துணி இரகத்தில் தயாரிக்கப்பட்டுள்ள இந்தப் பைகள் நீண்ட நாள் இருப்பதற்கு இதனுள் ஒரு இரப்பர் பூச்சு கொடுக்கப்பட்டுள்ளது.

ஆண்கள் மற்றும் பெண்களின் உபயோகத்திற்காகச் சுமார் 10 மாதிரிகளில் இந்தப் புதுமையான பைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. பயணப் பைகள், பெண்கள் கைப் பைகள், ஆண்கள் கைப் பைகள் ஆகியவை இவற்றுள் அடங்கும்.

இதர அச்சிட்ட திரைச்சீலைகளைப்போல, 'பருத்தி விஸ்கோஸ் சாட்டின்' அச்சிட்ட திரைச்சீலைகளைக் கோ-ஆப்டெக்ஸ் முதன் முறையாக விற்பனைக்குக்கொண்டு வந்துள்ளது. இதன் விலை மீட்டருக்கு ரூ. 40 ஆகும். இத்திரைச் சீலைகள் கண்ணைக் கவரும் விதத்தில் பல வண்ணங்களில் அச்சிடப்பட்டுள்ளன. இத்திரைச் சீலை மிக மென்மையாக இருப்பதோடு, இதன் அச்சும் வண்ணமும் இதைப் பொலிவுபடுத்துகின்றன.

கண்காட்சித் திடலில் அமைக்கப்பட்டுள்ள கோ-ஆப்டெக்ஸ் அரங்குகளிலும், மற்றும் அனைத்துக் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களிலும் 20 சதம் முதல் 40 சதம் வரையிலான சிறப்புத் தள்ளுபடி வழங்கப்பட்டும்.

—நமது செய்தியாளர்

# முதல் கூட்டுறவுச் சங்கம் எங்கே தோன்றியது?

''மிகச் சிறிய நாடுகளான ஹாலந்து, பெல்ஜியம், டென்மார்க் முதலானவை பொருளாதாரத்தில் உயர்ந்து வளர்ந்து வருகின்றன. அவர்களைவிட, நாகரிகத்தில் முதிர்ச்சிபெற்ற பண்பாட்டில் சிறந்து விளங்கும் நம்நாடு தாழ்வானேன்?

''எள்ளு, கொள்ளு, நெல் அளவு நாடுகள் எல்லாம் வளரக் காரணம், கூட்டுறவு இயக்கம்தான்.

''தமிழ்நாட்டில் முதல் கூட்டுறவுச் சங்கம் தோன்றியது, செங்கல்பட்டு மாவட்டத்தில் மப்பேடு என்னும் ஊருக்கு அருகில் உள்ள கீழச்சேரியில்தான். முதல் நகரக் கூட்டுறவுச் சங்கம் ஆரம்பித்த இடம் காஞ்சிபுரம். தமிழ்நாட்டில் 49 வகையான கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. 30,000 சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஒரு கோடியே 93 இலட்சம் பேர் உறுப்பினர்களாக உள்ளனர். கிராம வங்கிகள் 4,655 உள்ளன.

''வங்கியின் உதவியைப் பயன்படுத்திக் கொண்டு அமெரிக்கா போன்ற பெரியநாடுகள் எல்லாம் வளர்கின்றன. தமிழ்நாட்டில் கோவை, திருப்பூர், தூத்துக்குடி, கோவில்பட்டி ஆகிய இடங்களில் தொழில்கள் வளம்பெற்று வருவதற்குக் காரணம், வங்கியின் உதவியே யாகும்.

''தேன் கூட்டில், தேன் ஒரே அடியாகச் சேர்ந்து விடுவதில்லை. சொட்டுச் சொட்டாகத்தான் சேமிக்கப்படுகிறது. அதைப் போலச் சிறுகச் சிறுக நாம் சேமிக்க வேண்டும்.

''வங்கிகளை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அதே சமயத்தில், வாங்கிய கடனைத் திரும்பிச் செலுத்த வேண்டும். அப்போதுதான் மற்றவர்களும் பயன் பெற வாய்ப்பு ஏற்படும்.

''கூட்டுறவு வங்கி அரசு வங்கி-கூட்டுறவு வங்கி மக்கள் வங்கி.''

(சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கி - காரணீஸ்வரர் பேட்டைக் கிளைத் திறப்பு விழாவில் (29-4-87) மாண்புமிகு நிதி, வருவாய் மற்றும் கூட்டுறவு அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து)

—நமது செய்தியாளர்

## தமிழாசிரியர்க்கு ஊதிய உயர்வு

பி. டி. பட்டம் பெற்ற ஆசிரியர்களுக்குக் கூடுதலாக ஒரு ஊதிய உயர்வு அளிக்கப்பட்டதுபோல், தமிழ் ஆசிரியர்களில் புலவர் பயிற்சி பெற்றவர்களுக்கும் தமிழ்ப் புத்தாண்டுப் பரிசாக ஒரு ஊதிய உயர்வு வழங்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டார்கள்.

இந்த ஊதிய உயர்வு 1.4.86 முதல் முன் தேதியிட்டு செயல்படுத்தப்படும். இதனால் சுமார் 10 ஆயிரம் ஆசிரியர்களுக்கு ரூ. 45 முதல் ரூ. 75 வரை ஊதிய உயர்வு கிடைக்கும்.

## தமிழகத்தில் சிறுதொழில் வளர்ச்சி

கடந்த 10 ஆண்டுகளில் தமிழகத்தில் சிறுதொழில் பெருவளர்ச்சி பெற்றுள்ளது 77ஆம் ஆண்டில் 61 ஆயிரத்து 861 சிறுதொழில்கள் பதிவு செய்யப்பட்டு இருந்தன. இன்று 80 ஆயிரத்து 685 தொழில்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. 77ஆம் ஆண்டு 30 ஆயிரம் பேர் வேலை வாய்ப்புப் பெற்றனர். தற்போது சிறுதொழில் மூலம் 7 இலட்சத்து 80 ஆயிரம் பேர் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர்.



## அறிவியல் ஆய்வுச் சாதனம்-மேற்கு ஜெர்மன் உதவி

சென்னை அண்ணா பல்கலைக் கழகத்திற்கு மேற்கு ஜெர்மன் அரசு ரூ. 4.5 கோடி மதிப்புள்ள அறிவியல் ஆய்வுச்சாதனங்களை வழங்கியுள்ளது. அந்தச் சாதனங்களின் ஒரு பகுதியை இந்தியாவிலுள்ள மேற்கு ஜெர்மன் தூதர் திரு. கந்தார் ஸ்காடல் 1.4.87 அன்று அண்ணா பல்கலைக்கழகத்தின் வேந்தரும் மேதகு ஆளுநருமான திரு எஸ். எல். குரானா அவர்களிடம் வழங்கினார்.

# தமிழ்ப் பல்கலைக் கழக நூலகம்

## -சில தகவல்கள்

தமிழ்ப் பல்கலைக் கழகம் எவ்வாறு ஆய்வுப் பல்கலைக் கழகமாக மற்றைப் பல்கலைக் கழகங்களிலிருந்து வேறுபடுகின்றதோ அதற்கேற்ப நூலகமும் ஆய்வுத் துணையாகச் செய்திச் சேகரிப்போடு நூலகப் பணியையும் ஆற்றுகிறது. இந்நூலகமே 'செய்திச் சேகரிப்பு நூலகப் பணி இயக்ககம்' என்னும் பெயரில் ஓர் இயக்ககமாக அமைக்கப்பட்டு ஓர் இயக்குநர் பொறுப்பில் இயங்குகிறது. இயக்ககத்தில் நூலகம் ஒரு பிரிவு. ஆய்வாளர்களின் திட்டங்களுக்கு உதவியாகத் தகவல்களைச் சேகரித்து வழங்குகிறது 'செய்திச் சேகரிப்புப் பிரிவு'.

### நூலகம்

நூலகம் அச்சு நூல்கள், கிடைத்தற்கரிய பழைய நூல்கள், அயல் நாட்டில் வெளியிடப் பெற்ற நூல்கள், மிகத் தொன்மையான நூல்களின் நுண்படப் பதிவுகள், நாளிதழ்கள், காலவாரிஇதழ்கள் முதலியவற்றைப் பெற்று இயங்குகிறது. ஆங்கில நூல்களும் தமிழ் நூல்களும், குறைந்த அளவில் பிறமொழி நூல்களுமாக நூலகத்தில் 75,000 நூல்கள் இக்குறுகிய காலத்திலேயே இடம் பெற்றுள்ளன. தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் வெளிமையங்களான காஞ்சி, உதகை, மண்டபம் மையங்களிலும், பேரகராதித் துறையிலும் அமைந்துள்ள நூலகப் பிரிவுகளின் நூல்களும் இந்நூலக அமைப்பில் அடங்கும்.



பல்வேறு அறிஞர்கள் தொகுத்து வைத்திருந்த தமிழ், ஆங்கில நூல்கள் அன்பளிப்பாகப் பெறப் பட்டுள்ளன. மொழி அறிஞர் தேவநேயப் பாவாணர். திரு. தி.க. கனகசுந்தரம். திரு டி.வி. மகாலிங்கம், திரு டி.செ. செயவேலு ஆகியோர் தொகுப்புகளுடன் தமிழன்பர்கள் வழங்கிய அன்பளிப்பு நூல்களும் இதில் அடங்கும். 1587-இல் கோவாவில் அச்சிடப் பெற்ற முதல் தமிழ் நூல் Doetrina Christum இரண்டாவது தமிழ் நூல் Flos sanctorum ஆங்கிலத் தலைப்புடைய இவ்விரண்டு நூல்களின் படிகளும் இங்கு உள்ளன. பக்கத்தில் உள்ளது முதல் நூல் படம்.

செந்தமிழ் இதழின் முதல் தட்டச்சுப்படி நன்கொடையாகப் பெறப்பட்டுள்ளது. நூலகம் ஆய்வாளர்க்கு மட்டும் வழங்கும் நூலகம் ஆகும்.

### நடமாடும் நூலகம்

இந்திய நாட்டில் முதல் நடமாடும் நூலகம் 1931-இல் நம் தமிழகத்தில்தான் தோன்றியது.

இந்திய நூலகத் தந்தை எனப்படும் சீர்காழி திரு எசு ஆர். அரங்கநாதன் அவர்கள் இரட்டை மாட்டு வண்டி ஒன்றில் மன்னார்குடியில் இதனைத் தொடங்கி வைத்தார். இந்நூலகத்தில் அதன் நூல்கள் மட்டுமன்றி அம் மாட்டு வண்டியின் மாதிரிவடிவம் ஒன்றும் உள்ளது.

### இதழ்கள்

நூலகத்திற்கு வரும் நாளிதழ்கள் தமிழும் ஆங்கிலமுமாக 16. தமிழ் ஆங்கிலக் கால முறை இதழ்கள் 1100. தமிழகத்தில் வெளி வரும் எல்லா இதழ்களும் இந்நூலகத்திற்கு வருகின்றன. இவற்றுடன் உலகில் வெளிவரும் இதழ்கள் பலவும் புதிய கட்டடத்தில் தனியே காட்சிக்கு வைக்கப் பட்டுள்ளன.

### செய்திச் சேகரிப்புப் பணி

இந்திய தேசிய அளவில் அறிவியல், சமூக அறிவியல் முதலியவற்றிற்குத் தகவல் சேகரிப்பு மையங்கள் இருப்பதைப் போன்றது இச்செய்திச் சேகரிப்புப் பிரிவு, நிலப்படங்கள், தரைவரம்புக்குட்பட்ட நிலப்படங்கள் ஒளிப்பதிவு, ஒளிப்பதிவு இதழ்கள் நூல் விலைப் பட்டியல்கள், தகவல்கள் மின்படியெடுப்பு, நுண் ஒளிப்படப் பொறிப் படியாக்கல் முதலிய வகைகளில் சேகரிப்புப் பணி நிகழ்கின்றது.

### கணிப்பொறி வடிவமைப்பு

கணிப்பொறி வழியாக நூல் பட்டியல் உருவாக்கம், தகவல் தேர்ந்து அறிவித்தல் ஆகிய நூலகப் பணிகளுக்குக் கணிப்பொறியைப் பயன்படுத்தி, கணிப்பொறி வழியமைப்புகள் உருவாக்கப்படுகின்றன. இப்பணி இந்திய நாட்டளவில் முன்மாதிரியானது. இதற்கெனத் தனிக் கணிப்பொறியே உள்ளது.

### நூலகக் கட்டட விவரக் குறிப்பு

தமிழ்ப் பல்கலைக் கழக நூலகக் கட்டடம் புதுடில்லியில் உள்ள நாடாளுமன்றக் கட்டடம் போன்ற வடிவமைப்பில் எழுப் பப்பட்டுள்ளது. இவ்வமைப்பில் இந்தியாவில் வேறு கட்டடம் இல்லை.

கட்டடச் செலவு ரூ. நூறு இலட்சம்; சிற்பப் பணிகள் ரூ. இருபது இலட்சம். ஆக ஒரு கோடியே இருபது இலட்சம் ரூபாய் செலவிலானது.

மையத்தில் மூன்று அடுக்குகள் கொண்ட மண்டபம் ஒன்று எழுப்பப்பட்டுள்ளது. இதன் உயரம் 200 அடி. மேலே குடை வடிவம் கொண்டது.

நூலகத்தின் பின்புறத்தில் திறந்தவெளிப் பேரரங்கம், இரண்டு இலட்சம் மக்கள் கூடும் வசதி கொண்டது.

கீழ்த்தளத்தில் நூல் வழங்கு பகுதி. நூல்கள் பகுதி. அரிய நூல்கள் பகுதி, பட்டியலிடுதல், நூல் வெளியிடுதல். கணிப்பொறி வழித் தகவல், நோக்கீட்டு நூல்கள், காலமுறை இதழ்கள், ஒலி, ஒளித் தகவல், படியாக்கு பணி ஆகியவை உள்ளன.

மேல்தளத்தில் படிப்பறைகள், நூல் காட்சிப் பகுதி, புற ஆய்வாளர்கள் படிப்பறை, செய்திச் சேகரிப்புப், பணி முன்தொகுதிகள், ஆய்வாளர்கள், நூலக அலுவலர்கள் அறைகள் ஆகியவை உள்ளன.

மையக் கட்டடத்தில் நாளேடுகள், நில வரைபடங்கள், நடமாடும் நூலக வண்டி, அரிய நூல்கள் ஆகியவை இடம் பெற்றுள்ளன.

நூலக அரங்கம் - நூலகத்தின் பின்பகுதியில் உள்ள கருத்தரங்கக் கூடம் 200 இருக்கைகள் கொண்ட புதுமையான அரங்கமாகும்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப.,
இயக்குநர், தமிழ்நாடு அரசு, செய்தி - மக்கள் தொடர்புத்துறை, சென்னை.
அரசினர் தோட்டம், தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.



இளம்பிள்ளை வாதநோய்க்குத் தடுப்பு மருந்து அளிக்கும் திட்டம் 1.5.87 அன்று சென்னையில் துவக்கி வைக்கப்பட்டது. இந் நிகழ்ச்சியில் மாண்புமிகு மத்திய நல்வாழ்வுத்துறை அமைச்சர் செல்வி சரோஜ் காபர்டே அவர்களும் மாண்புமிகு தமிழக நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு ப. உ. சண்முகம் அவர்களும் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு குழாய்க் கிணறுகள் கழகத்தால் புதிதாக வாங்கப் பெற்ற சுழல்முறை ஆழ்துளைக் கருவிகளை மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்கள் 4.5.87 அன்று செங்கல்பட்டு மாவட்டம் கீழானூரில் இயக்கி வைத்தார்.

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23



# தமிழகத்தில் புதுமையான தொழிற் புரட்சி!

## டிட்கோவின் எதிர்காலத் தொழிற் திட்டங்கள்

- ரூ. 125 கோடி செலவில் கண்ணாடி (ஃப்ளோட் கிளாஸ்) தயாரிக்கும் தொழிற் திட்டம்.
- ரூ. 18 கோடி மூலதனத்தில் டெலிபோன் கேபிள் தயாரிக்கும் தொழிற் திட்டம்.
- ரூ. 250 கோடி செலவில் உருவாகும் 210 மெகாவாட் திறனுடைய மின் நிலையம்.
- ரூ.5.5 கோடி செலவில் மரவள்ளிக் கிழங்கிலிருந்து ப்ரக்டோஸ் திரவம் உற்பத்தி செய்யும் தொழிற்திட்டம்.
- ரூ. 6 கோடி செலவில் இண்டஸ்ட்ரியல் டைமண்ட் தொழிற்திட்டம்.
- ரூ. 40 கோடி செலவில் உருவாகும் ‘பென்சிலின்’ மருந்து தயாரிக்கும் தொழிற்திட்டம்.
- ரூ. 25 கோடி மூலதனத்தில் உருவாக்கப் படவிருக்கும் லாம்ப் மற்றும் லாம்ப் பாகங்கள் தயாரிக்கும் தொழிற் திட்டம்.
- ரூ. 10 கோடி செலவில் பேப்பர் லாமினேடட் எச்.டி.பி.இ. (HDPE) பைகள் தயாரிக்கும் தொழிற் திட்டம்
- ரூ. 12 கோடி மூலதனத்தில் உருவாகும் செராமிக் டைல்ஸ் தொழிற் திட்டம்



ஈ.வெ.கி. சுலோசனா சம்பத்
தலைவர்

**தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்**

(தமிழ்நாடு அரசு நிறுவனம்)
735, அண்ணா சாலை, சென்னை-600 002